# உதயன்




www.onlineuthayan.com

26: பக்கங்கள் சுடர் 27 கதிர் 257 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 25 வியாழக்கிழமை (09/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00


## யாழ். நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தத் தடை விதித்த நீதிவானின் உத்தரவு மேல்நீதிமன்றால் தள்ளுபடி

யாழ்ப்பாணம், ஓக. 9

தமிழ்த் தேசிய முன்னணி ஜூன் மாதம் யாழ். நகரில் ஒழுங்கு செய்த கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு யாழ். நீதிவான் வழங்கிய தடை உத்தரவை யாழ். மேல் நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

யாழ். நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராசாவால் இந்தத் தடை உத்தரவு வழங்கப்பட்டிருந்தது. அதனை மீளாய்வு செய்யுமாறு கேட்டு தமிழ்த் தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர், மேல் நீதிமன்றத்தில் மனுச் செய்திருந்தார். அதன் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

யாழ். நீதிவான் வழங்கிய தடை உத்தரவு, இலங்கை அரசமைப்பு மக்களுக்கு வழங்கும் கருத்து மற்றும் வெளிப்பாட்டுச் சுதந்திர உரிமைக்கு முரணானது என்று மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

**பின்னணி**

இராணுவத்தினரின் நில அபகரிப்பை எதிர்த்து ஜூன் மாதம் 18ஆம் திகதி தமிழ்த் தேசிய முன்னணி யாழ். நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தது. அதனைத் தடுத்து நிறுத்துமாறு யாழ். பொலிஸார் செய்திருந்த மனுவை ஏற்றுக் கொண்ட நீதிவான் மா.கணேசராசா ஆர்ப்பாட்டத்துக்குத் தடை விதித்தார்.

அதனை மீளாய்வு செய்யுமாறு தேசிய முன்னணி செய்த மனுவை ஜூன் 27ஆம் திகதி அவர் நிராகரித்துத் தனது உத்தரவை மீண்டும் உறுதி செய்தார். அத்துடன் ஆயுதக் கலா

பார்க்க பக்கம் 4

# கோமாவில் இருந்த அரசியல் கைதி நேற்று அதிகாலை உயிரிழந்தார்

### மகனைப் பார்வையிடச் சென்ற பெற்றோர் பெரும் துயரில்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 9

வவுனியா சிறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து கைதிகள் மீது பொலிஸாரும் சிறைக்காவலர்களும் மேற்கொண்ட மோசமான – மிலேச்சத்தனமான – தாக்குதலால் காயங்களுக்கு இலக்காகி கோமா நிலையில் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தமிழ் அரசியல்கைதி ஒருவர் நேற்று அதிகாலை சிகிச்சை பயனின்றி அங்கு பரிதாபமாக உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த மரியதாஸ் நேவிஸ் டெல்றொக்ஷன் [வயது –36, இதுவரை இவரது பெயர் டில்ருக்ஷன் என்றே ஊடகங்களில் வெளியாகி வந்தது] என்ற கைதியே இவ்வாறு உயிரிழந்தார். நேற்றுக் காலை டெல்றொக்ஷனின் தந்தையும் தாயும் ராகம வைத்தியசாலையில் உள்ள மகனைப் பார்வையிடுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக மகர சிறைச்சாலைக்குச் சென்றபோதே அவர் உயிரிழந்த விடயம் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா சிறையில் நடந்த கொடூரமான தாக்குதல் காரணமாக கடந்த ஜூலை மாதம் 3ஆம் திகதி வவுனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த கணேஸ் நிமலரூபன் [வயது – 28] என்ற கைதி மரணமான நிலையில் தற்போது டெல்றொக்ஷனும் உயிரிழந்துள்ளமை சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி

பார்க்க பக்கம் 4



பாஷையூரில் அமைந்துள்ள டெல்றொக்ஷனின் வீட்டில் கூடித் துயர் பகிரும் உறவினர்களும் அயலவர்களும்.

**2** பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளத்தை உயர்த்த முடியாது; திட்டவட்டமாகத் தெரிவித்தார் உயர்கல்வி அமைச்சர்.

**08** தீவிரவாதிகள் கடல் மார்க்கமாக ஊடுருவித் தாக்குவதைத் தடுக்கும் நோக்கில் பாதுகாப்பைப் பலப்படுத்துகிறது இந்தியா.

**17** இந்தியப் பஸ்கள் இனி இலங்கையில் அவுட். சீனா போதியளவு பஸ்களை இலங்கைக்குக் கடனாகவே வழங்க முன்வந்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் தகவல்

**19** மீனவர்களை ஒன்றுதிரட்டி கச்சதீவை இலங்கையிடம் இருந்து மீட்பதற்குப் போராடத் தயாராகிறார் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்.

### டெல்றொக்ஷனுக்கு அஞ்சலி
## அரசியல் கைதிகள் இன்று அடையாள உண்ணாவிரதம்

கொழும்பு, ஓக.9

வவுனியா சிறைச்சாலைத் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்து ஒரு மாதகாலத்துக்கு மேல் கோமா நிலையில் ராகம வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த தமிழ் அரசியல் கைதியான டெல்றொக்ஷன் மரியதாஸ் நேற்று அதிகாலை 2.45 மணிக்கு உயி

பார்க்க பக்கம் 4

## டெல்றொக்ஷனின் சாவுக்கு அரசே முழுப் பொறுப்பும்

### அரசியல் தலைவர்கள் கண்டனம்

கொழும்பு,ஓக 9

வவுனியா சிறையில் தாக்கப்பட்டு மகர சிறைக்கு மாற்றப்பட்டுப் பின் கோமா நிலையில் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மரியதாஸ் டெல்றொக்ஷன் என்ற தமிழ் அரசியல் கைதியின் உயிரிழப்புக்கு அரசியல் தலைவர்கள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். இந்தக் கைதியின் அநியாயமான சாவுக்கு அரசே முழுப் பொறுப்பு எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மரியதாஸ் டெல்றொக்ஷனின் படுகொலைக்கு அரசே முழுப்பொறுப்பு என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலை

பார்க்க பக்கம் 4

## அரசியல் கைதியின் சாவைக் கண்டித்து யாழ்.நகரில் புதனன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 9

படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த தமிழ் அரசியல் கைதியான டெல் றொக்ஷனின் சாவைக் கண்டித்து தமிழ் கட்சிகள் இணைந்து கண்டனப் பேரணி ஒன்றை நடத்த தமிழ்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன. போராட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை யாழ்.நகரில் பஸ் நிலையம் அருகில் நடைபெறவுள்ளது. வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மீது சிறைக்காவலர்களும், விசேட

பார்க்க பக்கம் 4

## போராளிகள் காணாமற்போனதை உறுதிப்படுத்திய புள்ளி விவரங்கள்

### பாதுகாப்பு மாநாட்டில் குட்டு அம்பலம்

கொழும்பு, ஓக 9

2009ஆம் ஆண்டு மே மாதம்- போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கைப் படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை தொடர்பாக நிலவும் குழப்பத்தை, பாதுகாப்புச்செயலர் கோத்

பார்க்க பக்கம் 4

## இந்த மாத நடுப்பகுதியுடன் மீளக்குடியமர்வு நிறைவுறும்

### கூறுகிறார் கோத்தபாய



கொழும்பு,ஓக 9

போர் காரணமாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இடம்பெயர்ந்தவர்களை மீள் குடியமர்த்தும் நடவடிக்கைகள் இந்த மாத நடுப்பகுதியில் நிறைவுறும் எனப் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுப் புதன்கிழமை ஆரம்பமான சர்வதேச பாதுகாப்பு மாநாட்டில்

பார்க்க பக்கம் 4

### கூட்டமைப்பு ஆதரவாளர்களை பிள்ளையான் கட்சியினர் தாக்கினர்

மட்டக்களப்பு, ஓக.9

மட்டக்களப்பு ஆரையம்பதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த தமிழ்த்

பார்க்க பக்கம் 4

## தீர்வை வெளியார் திணிக்க முடியாது

### உள்நாட்டுப் பொறிமுறையே பொருத்தம் என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஓக.9

இலங்கையின் தேசியப் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தி நாட்டிற்குள் வெளிநாட்டுத்தீர்வைத் திணிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருவதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கை இராணுவம் ஏற்பாடு செய்த மூன்றுநாள்கள் சர்வதேச பாதுகாப்பு மாநாடு நேற்று, கொழும்பு கலதாரி ஹோட்டலில் ஆரம்பமானது. 'ஸ்திரத்தன்மையை நோக்கிய நிலையான சமாதானம்' எனும் தொனிப்பொருளிலான

பார்க்க பக்கம் 4

# காவியுடை பயங்கரவாதம் இருக்கும் இடம் எங்கே?

## ஹக்கீமிடம் கேட்கிறார் அத்துரலிய தேரர்



கொழும்பு,ஓக 9

எமது நாட்டில் காவியுடை பயங்கரவாதம் எங்கே உள்ளது என்பதை அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூற வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாதத்தை வெற்றிகரமாகத் தோற்கடித்த ஜனாதிபதி, அதேபோன்று காவியுடை பயங்கரவாதத்தையும் தோற்கடித்தாரானால் வரவேற்கத்தக்கது என அண்மையில் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனது சொந்தச் சமயத்தைக் கூட முறையாக கடைப்பிடிக்காத அமைச்சர்தான் ரவூப் ,ஹக்கீம்.நாட்டில் போர் நடந்த போது அவர் நோர்வே நாட்டவரையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஆதரித்தார். இன மோதல் பிரச்சினையைப் பேச்சு மூலமே தீர்க்க முடியும் என்பது அவரின் நிலைப்பாடாக இருந்தது.

தற்போது நாட்டில் காவியுடைப் பயங்கரவாதம் உள்ளதெனக் கூறும் அவர், அது எங்கே உள்ளது என்பதையும் கூற வேண்டும். அதன் பயங்கரவாதச் செயல்கள் எவை என்பதையும் விளக்க வேண்டும். எனவே அவர் அர்த்தமில்லாத அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்காமல் தனது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டும்-என்றார். (த)

# சீன மீனவர்களின் கைதுக்கு தவறான புரிதலே காரணம்

## சீனத் தூதரகம் கூறுகிறது



கொழும்பு, ஓக 9

இலங்கைக் கடற்படையினரால் சீனர்கள் கைது செய்யப்பட்டமைக்குத் தவறான புரிதலே காரணம் என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது, மீனவர்களின் சுதந்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. சீன மீனவர்கள் இழுவைப் படகுகளிலேயே தங்கவும், வெளியில் செல்லவும் அனுமதிக்கப்பட்டனர் என்று சீனத் தூதரக அதிகாரி யுவான் பாய்ஷெங், சீன செய்தி ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்ததற்காக, கைதுசெய்யப்பட்ட சீன மீனவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தப் போவதாக இலங்கைக் கடற்படை கூறியதாக, ரொய்ட்டர் செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும் தாம் ரொய்ட்டருக்கு செவ்வி அளிக்கவில்லை என்று இலங்கைக் கடற்படை தம்மிடம் கூறியதாகவும் சீனத் தூதரக அதிகாரி கூறியுள்ளார்.

இலங்கைக் கடற்படை தடுத்து வைத்த சீன மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

இலங்கைக் கப்பல் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான சீனாவில் வாங்கப்பட்ட இருபடகுகளில் அவர்கள் பணியாற்றி வந்தவர்கள். அந்தப் படகுகளில் இருந்த பழைய சீனச் சின்னங்கள், அவை சீனப் படகுகள் என்ற குழப்பத்தை உள்ளூரில் ஏற்படுத்தியிருக்கக் கூடும். தடுத்து வைக்கப்பட்டிருந்த போது கூட சீன மீனவர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டனர். ஆனால், இந்தச் சம்பவம் தொடர்பான விபரங்கள் குறித்த மேலதிகமான விளக்கங்கள் தேவைப்படுகின்றன.'' என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (த)

# சம்பளத்தை உயர்த்த முடியாது; எஸ்.பி. திட்டவட்டம்

கொழும்பு,ஓக 9

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சம்பளத்தை உயர்த்த முடியாது என உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஏனைய அரச உத்தியோகத்தர்களுடன் ஒப்பிடுகையில் சுமாரான அளவு விரிவுரையாளர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் சம்பள உயர்வுப் பிரச்சினைக்கு உரிய தீர்வு வரும் வரையில் பணிப்புறக்கணிப்பைக் கைவிடப் போவதில்லை எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கச் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகளிலும் கலந்து கொள்ளப் போவதில்லை எனவும் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார். (த)




உதயன் இணைய வானொலி

www.uthayanradio.com

தினமொரு பரிசுக் குலுக்கல்

கந்தரநுபூதியை அருளியவர் யார்?

1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
2. அருணகிரிநாதர்
3. அபிராமிப்பட்டர்
4. ஸ்ரீ தேவாராய சுவாமிகள்

பெயர் :........................

முகவரி :........................

வயது :.................. தொ.பே. இல :..................

சரியான விடைகளை எழுதி. பரிசுக் கூப்பனுடன் பருத்தித்துறை வீதி. நல்லூரில் (பாரதியார் சிலையடி) அமைந்துள்ள உதயன் இணைய வானொலியின் உற்சவ காலச் சிறப்புக் கலையகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இன்று மாலை 7 மணிக்கு முன் இடுவதன் மூலம் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லும் வாய்ப்பு

1 ஆம் பரிசு : 4 GB பென் ட்ரைவ்

2 ஆம் பரிசு : கம்ப்யூட்டர் ருடே 6 மாத சந்தா

3 ஆம் பரிசு : அர்ச்சுனா சஞ்சிகையின் 6 மாத சந்தா

நேற்றைய புதிருக்கான விடை : வற்றாப்பளை கண்ணகை அம்மன்

வெற்றிபெற்றோர் :

| 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|
| பா.யதீசன் | ஆ.நந்தினி | சு.ஜனப்பிரியன் |
| (கந்தர்மடம்) | (கொக்குவில்) | (நல்லூர்) |

அனுசரணை: Sayram Pharmacy



Kandy Road, Chavakachcheri.

(Near Chavakachcheri Hindu College)


# கடமை தவறிய 5 பொலிஸார் வீட்டுக்கு

கொழும்பு,ஓக 9

கடமை நேரத்தில் மது போதையில் இருந்தமை மற்றும் கடமையை செய்யத் தவறிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஐவர் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி இரவு மிஹிந்தலைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட், இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் கான்ஸ்டபிள் சாரதி ஆகியோர் நடமாடும் பணியில் அமர்த்தப்பட்டனர்.

இவர்கள் மது போதையில் இருப்பதாக அநுராதபுரம் பொலிஸ் அதிகாரிக்குக் கிடைக்கப்பெற்ற தகவலைஅடுத்து பதில்பொலிஸ் அதிகாரி ஒருவரை அந்த இடத்துக்கு அனுப்பிச் சோதனை செய்தபோது இரு கான்ஸ்டபிள்கள் மது போதையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அவர்கள் நால்வரும் மிஹிந்தலைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டு இரவு பணியில் இருந்த உப பொலிஸ் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்ட அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக மது போதையில் இருந்த இரு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் பொலிஸ் நிலையத்தைவிட்டு வெளியில் சென்றுள்ளனர்.

இதனையடுத்து உப பொலிஸ் பரிசோதகர், இரவு நடமாடும் சேவைக்கு பொறுப்பான பொலிஸ் சார்ஜன்ட், இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் கான்ஸ்டபிள் சாரதி ஆகியோர் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த் ஐவர் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (த)

# தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் குறித்துக் கவனம்

சென்னை, ஓக 9

தமிழகத்தின் அகதி முகாம்களில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பு தொடர்பில், அதிக கவனம் செலுத்தப்படுவதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதி முகாம்களில் அதிகாரிகளுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் தமிழகத்தின் தோட்டனூற்று முகாமில் உள்ள தாயும், இரண்டு மகன்களும் கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தனர். ஏற்கனவே 6 வயதுச் சிறுமி ஒருவரும் கடந்த மாதம் சடலமாக மீட்கப்பட்டார்.

இதற்கிடையில் அகதி முகாம்களில் உள்ள இலங்கையர்கள் அங்கிருந்து கேரளா போன்ற மாநிலங்களுக்கு தப்பிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், அவர்களுக்கான முறையான பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று முகாம் அதிகாரிகளுக்கு உயர் அதிகாரிகள் வலியுறுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

# தமிழக மீனவரை விடுவிக்குமாறு ராமேஸ்வரம் மீனவர் போராட்டம்

சென்னை, ஓக 9

இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மற்றும் பாம்பன் பகுதிகளைச் சேர்ந்த விசைப்படகு மீனவர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.இறால் மீன்களுக்கு உரிய விலை நிர்ணயிக்க வலியுறுத்தியும், அவர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி, மீனவப் பெண்கள் அமைப்பினர் நேற்று முதல் தொடர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ள்னர்.

இதில், இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களின் குடும்பத்தினர் மற்றும் மீனவ அமைப்புகள் பங்கேற்கின்றன.சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதுகுறித்து பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேரடியாக மனு கொடுத்தும் கூட எந்த பலனும் ஏற்படவில்லை என மீனவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். மீனவர்களின் இந்த போராட்டம் காரணமாக, நூற்றுக் கணக்கான படகுகள் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (த)

# 19,292 விண்ணப்பங்கள் நிராகரிப்பு

கொழும்பு, ஓக.9

இம்முறை மாகாண சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கென சமர்ப்பிக்கப்பட்ட 19,292 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

தாபல் மூலம் வாக்களிப்பதற்கான ஒரு இலட்சத்து எழுநூற்று எண்பத்து எட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்கென அரச ஊழியர்கள் சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர் எனவும் தேர்தல்கள்செயலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பு இம்மாதம் 27 ஆம் 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# தொடர் வறட்சியால் கால்நடைகள் இறப்பு

## உரிய நேரத்தில் குளங்கள் ஆழமாக்கப்படாமையே காரணம்

யாழ்ப்பாணம்,ஓக.9

**குடாநாட்டில் தொடர்ந்து வறட்சி நிலவிவருவதால் கால்நடைகள் இறப்பு அதிகரித்துக் காணப்படுகிறது. குளங்கள் யாவும் ஒரு சொட்டுத் தண்ணீரும் இன்றி வறண்டு போயுள்ள நிலையில் கால்நடைகள் தண்ணீரைப் பெறுவதற்கு அலைந்து திரிகின்றன.**

உரிய காலங்களில் குளங்கள் ஆழப்படுத்தப்பட்டு நீர் தேக்கிவைக்கப்படாமையும் குளங்கள் வறண்டு போவதற்குக் காரணம் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நீர் நிலைகளை பாதுகாப்பதில் உரிய அதிகாரிகள் காட்டும் அசமந்தப் போக்கே தற்போது வறட்சியால் கால்நடைகள் இறக்கவும் காரணமாகிறது.

தீவுப் பகுதிகளிலேயே கால்நடைகளின் இறப்பு வீதம் அதிகரித்துக் காணப்படுகிறது. குறிப்பாக நயினாதீவில் கால்நடைகள் பெரிதும் இறக்கின்றன. அவற்றைப் புதைக்கும் நடவடிக்கைகளில் பிரதேசசபை உப அலுவலகத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

தீவுப் பகுதிகளில் மக்களும் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கிணறுகளிலும் நீர்மட்டம் குறைந்து காணப்படும் நிலையில் நீண்டதூரங்களுக்குச் சென்று தண்ணீரைப் பெற்று வருவதையும் காணமுடிகிறது.

பிரதேச சபையினர் பவுசர்கள் மூலம் குடிதண்ணீரை விநியோகித்து வருகின்றபோதும் அது மக்களுக்குப் போதியதாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வல்லிபுரம் கிராம சேவையாளர் பகுதியில் 14 குளங்களும், துன்னாலை வடக்கு கிராம சேவையாளர் பகுதியில் 2 குளங்களும் வற்றி வறண்டு போயுள்ளன.

இந்தக் கிராம சேவையாளர் பகுதிகளில் மேய்ச்சலில் ஈடுபட்டுள்ள பெருந்தொகையான ஆடு, மாடுகள் குடிப்பதற்குத் தண்ணீருக்காக இந்தக் குளங்களை நாடி தண்ணீரின்றி ஏமாந்து செல்கின்றன.

இயற்கையான நீரூற்றுக்களைக் கொண்ட இந்தக் குளங்களே வறண்டு போயுள்ளன என்றும் கூறப்படுகிறது.


இந்தக் குளங்கள் ஆழமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டால் நீர் ஊறிக்கொண்டு இருக்க வாய்ப்புகள் உண்டு. கடந்த கால வறட்சிக் காலங்களின் போது இந்தக் குளங்களில் தண்ணீர் இருந்தது என இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றனர்.

இந்த விடயத்தை உரிய அதிகாரிகள் இனிவரும் காலங்களிலாவது கவனத்தில் எடுத்து நீர் நிலைகளைப் பேண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்கின்றனர். இந்த வருட மழை காலத்துக்கு முன்னர் குளங்கள் புனரமைக்கப்பட வேண்டும் என்றும் கேட்கப்படுகிறது.

இல்லாது போனால் குடாநாட்டின் நீர் வளத்தை இழக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம் என்ற கருத்தும் கூறப்படுகிறது. (ம-7-8)

# உப்புப் புழுதியால் விவசாயநிலம் பாதிப்பு

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை



வடமராட்சி,ஓக.9

வல்லை கடல் நீரேரியில் இருந்து பறக்கும் உப்புப் புழுதியால் விவசாயம் மற்றும் மக்களின் சுகாதாரம் என்பன பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதால் அதனைத் தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி கரணவாய் வல்லுவம் பகுதியில் பொதுமக்கள் நேற்று முன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்தப் போராட்டத்தை அடுத்து நெல்லியடிப் பொலிஸார் அங்கு விரைந்து சென்று கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

உடனடியாக அங்கு வந்திருந்த கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ போராட்டத்தில் ஈடுபட்டோருடன் கலந்துரையாடி கோரிக்கைகளை விவரமாக சமர்ப்பிக்குமாறும் அந்தக் கோரிக்கை குறித்து யாழ்.அரச அதிபருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை எடுப்போம் என உறுதி அளித்தார். இதனையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது.

இதேவேளை தற்போது நிலவும் கடும் வறட்சியால் வல்லை கடல் நீரேரி எந்தக் காலங்களிலும் இல்லாதவாறு வற்றிக்காய்ந்துவிட்டது. பெருமளவு உப்பும் விளைந்து காணப்படுகின்றது.

காய்ந்து போயுள்ள கடல் நீரேரிப் படுக்கையில் இருந்து கடந்த சில தினங்களாக உவர் புழுதி வானைத் தொடும் அளவுக்கு பறந்து, கடல் நீரேரிக்கு அருகில் உள்ள விவசாய நிலங்கள் வீடுகளில் படிகின்றது. இது மக்களின் சுவாத்தியத்துக்கும் சாதகமானது இல்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

உப்புப் புழுதிப் படுக்கைகள் காற்றுடன் கலந்து பறந்து விடுவதால் கரணவாய் தெற்கு, கரவெட்டி மேற்கு மத்தொனி ஆகிய பகுதிகளில் மரக்கறிச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வல்லை வெளிப் பகுதியும் உவர் புழுதி மூட்டத்தில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தொண்டமானாறு கதவுகளைத் திறந்து விட்டால் இங்குள்ள உவர் நீர் கடல் நீரேரிப் படுக்கையில் சங்கமிக்கும் போது உவர் புழுதி பறப்பது கட்டுப்படும் எனவும் நன்னீர்த் திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதால் அது சாத்தியப்படாது என்றும் கருத்துக் கூறப்படுகிறது. (ம-8)

# பழுதடைந்த றம்புட்டான் சுகாதாரப் பிரிவால் அழிப்பு

தென்மராட்சி,ஓக.9

சாவகச்சேரி பொதுச் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த றம்புட்டான் பழங்கள் நகரசபை பொது சுகாதார பரிசோதகர் பி.தளிர்ராஜினால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.

பாவனைக்குதவாத நிலையில் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்ட வேளையில் அவற்றைப் பரிசோதனை செய்த பொது சுகாதார பரிசோதகர் பழங்களுள் புழுக்கள் காணப்பட்ட நிலையில் அழித்துள்ளார்.

மேலும் பல இடங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த றம்புட்டான் பழங்களை பரிசோதனை செய்த பின்னர் ஒரு தொகுதி றம்புட்டான்களை விற்பனை செய்வதற்கு தடைவிதித்து அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு தெரிவித்துள்ளார்.(ம-9)

# கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்தில் நகைகள் திருட்டு

வடமராட்சி,ஓக.9

கரணவாய் மூத்த விநாயகர் கோயிலில் கதவுகள் உடைக்கப்பட்டு மூல விநாயகருக்கு அணிவிக்கப்பட்டிருந்த 20 பவுண் பெறுமதிமிக்க தங்க நகைகளும் விநாயகர் பெருமானின், வைரவர் பெருமானின் வெள்ளியிலான அங்கிகளும் இனந்தெரியாதோரினால் திருடப்பட்டுள்ளன.

திங்கட்கிழமை இரவு நடைபெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக கோயிலின் பிரதம குருக்கள் நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவதினத்தன்று கோயிலின் வடக்கு வீதிக் கதவுகளை இரும்பு ஆயுதத்தால் தெண்டித் திறந்து கோயிலுக்குள் புகுந்த இனந்தெரியாதோர் மூலஸ்தானக் கதவுகளையும் இரும்பு ஆயுதத்தால் தெண்டித் திறந்து உட்புகுந்துள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## நிகழ்வுகள் இன்று

**கலந்துரையாடல்**

யாழ்.மாவட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர் களுக்கான அவசர கலந்து ரையாடல் பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். உலக உணவுத் திட்டத்தின் கீழான பொருள்கள் விநியோகம் மற்றும் பொருள்களின் விலைகள் குறித்த பட்டியலை இந்தக் கலந்துரையாடலில் சமர்ப்பிக்குமாறும் மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கேட்டுள்ளார். (த-17)

**கூட்டம்**

வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவால் வடமராட்சி வலயக் கல்வி செயலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிக்கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் காலை 8.30 மணி முதல் 12 மணி வரையும் பருத்தித்துறைக் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் பகல் ஒரு மணி முதல் மாலை 4.30 மணி வரையும் நடைபெறவுள்ளன. இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம் பப் பிள்ளைப் பருவ அபி விருத்திப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா கலந்து கொள்வார். (ம-8)

# பெண்கள் மீதான வன்முறைகள் ஒடுக்குமுறைக்கு ஒப்பான செயல்

## வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் அரச அதிபருக்குக் கடிதம்

வலி.தென்மேற்கு, ஓக.9

குடாநாட்டில் கடந்த காலங்களில் பெண்கள் மீது பல வடிவங்களில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் பெண் சமூகத்தை ஒடுக்குவதற்கு ஒப்பான செயலாகும். இந்த விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதென்பது வெறும் கண்துடைப்புச் செயல் போன்றது இது போன்ற சீரழிவுகள் வருமுன் காப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் யாழ்.அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் அண்மைக் காலமாக சிறுவர்கள், பெண்கள் மீது இடம்பெற்று வரும் துஷ்பிரயோகங்கள் குறித்தும் அவற்றைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த மாதம் 26 ஆம் திகதி தெல்லிப்பழை பிரதேசத்தில் மனநிலை குன்றிய சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி கொடூரத் தனமாக கொலை செய்ய முயற்சித்ததாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்த விடயம் தொடர்பாக கடந்த காலங்களிலும் சில சம்பவங்கள் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சம்பவங்கள் அருவருக்கத்தக்கதாக அமைவது மட்டுமன்றி எமது உயரிய கலாசாரத்தையும் பண்பாட்டையும் சீரழிப்பதற்கு சமனானதாகவே அமைந்துள்ளன.

வன்முறையாளர்களுக்கு எதிராக மிகக் கடுமையான தண்டனை வழங்கப்படும் அதேவேளை, அந்தத் தண்டனைகளையும் பத்திரிகை மற்றும் ஊடகங்கள் வாயிலாக உரிய முறையில் மக்களுக்கு சென்றடையக் கூடிய பொறிமுறை ஒன்றை உருவாக்குவது பொருத்தமுடையது.

இவற்றிற்கு மேலாக தங்களின் கீழ் பணியாற்றும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் மூலம் இவ்வாறான துன்புறுத்தலுக்கு உள்ளாகக்கூடிய சிறுவர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்கு உரிய பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்வது ஆரோக்கியமான சமூகத்துக்கு உறுதுணையாகும்.

மாவட்ட ரீதியாகச் செயற்படுகின்ற பெண்ணியம் சார்ந்த அமைப்புக்கள் இந்த விடயங்கள் தொடர்பில் உரிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய செயற்பாட்டையும் ஊக்குவிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் பெண்கள் மீதான வன்முறை பல வடிவங்களிலும் ஏற்படுத்தப்பட்டன. இது பெண் சமூகத்தை ஒடுக்குவதற்கு ஒப்பான ஒரு செயலாகவே நான் கருதுகிறேன் என்றுள்ளது. (ம-115)

# வெங்காயச் செய்கையை ஊக்குவிக்க விதை வெங்காயம்

யாழ்ப்பாணம், ஓக.9

வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் விவசாயிகளுக்கு விதை வெங்காயத்தை விநியோகித்து வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் 47 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விவசாய அமைச்சின் நிதி உதவியுடன் ஒவ்வொரு விவசாயிக்கும் 130 கிலோ அடிப்படையில் இந்த விதை வெங்காயம் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி, புத்தூர், உரும்பிராய், உடுவில், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, வேலணை, சாவகச்சேரி போன்ற பிரதேசங்களில் விவசாயிகளுக்கு இந்த விதை வெங்காயம் விநியோகிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் வெங்காயச் செய்கையை அதிகரிக்கும் நோக்குடனும் ஊக்குவிக்கும் முகமாகவும் இந்த விதை வெங்காயம் விநியோகிக்கப்பட்டுள்ளது என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை குடாநாட்டில் வெங்காயச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

# வெங்காயப் பயிரை தாக்கும் தாள்கோதி

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்.குடாநாட்டில் பயிரிடப்பட்டுள்ள வெங்காயப் பயிர்களில் தாள்கோதிப் புழுவின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

தற்போதைய கடும் வெப்பம், வறட்சியால் பெரும்பாலான தோட்டங்களில் உள்ள வெங்காயப் பயிர்களில் இந்த தாள்கோதிப் புழுவின் தாக்கம் காணப்படுகிறது. இதனால் பயிர்கள் பழுப்பு நிறத்துக்கு மாறிக் கருகிப் போய்விடுகின்றன என்று கூறப்பட்டது.

இந்த நோயைக் கட்டுப்படுத்த விவசாயிகள் நடவடிக்கை எடுக்கின்றபோதும் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாத நிலைமை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## அரசியல் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரிழந்துள்ளார்.இவருக்கு அஞ்சலி செலுத்து முகமாக அனைத்து சிறைச்சாலைகளிலுமுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இன்று அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். அத்துடன் டெல்றொக்ஷனின் குடும்பத்தாருக்கும் தமது அனுதாபங்களை தெரிவிக்கின்றனர் என சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றனர். இவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தும் இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

நிமலரூபன், டெல்றொக்ஷன் மரியதாஸ் என தமிழ் அரசியல் கைதிகளின் உயிரிழப்பு தொடரப்படுவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். அனைத்து சிறைச்சாலைகளிலுமுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் நடவடிக்கைகளை அரசு துரிதப்படுத்துவதோடு, அவர்களது பாதுகாப்பையும் அது உறுதிப்படுத்த வேண்டும்.

ஜூன் மாதம் 28 ஆம் திகதி வவுனியா சிறைச்சாலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பொலிஸாராலும் அதிரடிப்படையினராலும் தாக்கப்பட்டனர். இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்துள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கு உரிய முறையில் சிகிச்சைகள் வழங்கப்படவேண்டும். அத்துடன் அவர்களை சுதந்திரமாகச் சென்று பார்ப்பதற்கு அவர்களின் பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் அனுமதி வழங்கப்படவேண்டும் எனக் கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் அரசியல் கைதிகள் இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என சிறைச்சாலைத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## இந்த மாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் கூறியதாவது:-

இறுதி யுத்தத்தில் 3 லட்சம் பொது மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் அவர்களில் இன்னும் 5,424 பேர் மாத்திரமே மீள்குடியேற்றப்படாமல் எஞ்சியுள்ளனர்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வீட்டுப் பிரச்சினை உள்ளது. இராணுவத்தினர் வடக்கில் 7,000 வீடுகளை அமைத்துள்ளனர். அதில் 6,000 வீடுகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதேவேளை ஓமந்தை - பளை ரயில் வீதி அடுத்த வருடம் செப்ரெம்பரில் நிறைவுறும். 2014 ஜூன் மாதத்துக்கு முன்னர் காங்கேசன்துறை வரை ரயில் பாதை அமைக்கப்பட்டுவிடும் - என்றார். (த)

## போராளிகள் காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தபாய ராஜபக்ஷ நேற்று நிகழ்த்தியுள்ள உரை உறுதி செய்துள்ளது. கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்று ஆரம்பமான பாதுகாப்பு மாநாட்டில் உள்நாட்டு, வெளிநாட்டு அதிகாரிகள் மத்தியில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உரையாற்றினார்.

இந்த உரையில்; போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த விடுதலைப் புலிகள் தொடர்பான புள்ளி விவரங்களை அவர் சமர்ப்பித்தார்.இதன்படி போரின் முடிவில் 11,989 விடுதலைப் புலிகள் சரணடைந்ததாக அவர் கூறினார். இவர்களில், இதுவரை 10,965 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் 636 விடுதலைப் புலிகள் இன்னமும் மருதமடு, கண்டகாடு, வெலிக்கந்த, பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களை விட மேலும் 383 விடுதலைப் புலிகள் சட்ட நடவடிக்கைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் அங்கு தெரிவித்தார். இதன்படி, ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ள, மற்றும் தற்போதும் தடுப்பிலுள்ள விடுதலைப் புலிகளின் மொத்த எண்ணிக்கை 11,984 பேர் மட்டுமேயாகும். இதனால், போரின் இறுதியில் சரணடைந்த 11,989 விடுதலைப் புலிகளில், ஐந்து பேரின் நிலை என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தில் சரணடைந்த விடுதலைப் புலிகள் பலரது நிலை இன்னமும் அறியப்படாதுள்ள நிலையில், அவர்களில் பலர் கொல்லப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளியான நிலையில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அளித்துள்ள புள்ளிவிபரங்களே அந்தக் குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளதாக மாநாட்டுக்கு வந்திருந்த ஊடகவியலாளர்கள் பேசிக்கொண்டனர். (த)

## யாழ்நகரில் ஆர்ப்பாட்டம் நடத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாரத்தை மீண்டும் முனைப்புடன் அரங்கேற்ற எடுக்கப்படும் முயற்சியே இந்த ஆர்ப்பாட்டம் என்றும் அவர் தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

**நீதிவான் கருத்து**

''தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலும் இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையிலும் ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றுள்ளனர். மக்களின் அவலங்களின் மீது அரசியல் நடத்தி, மீண்டும் இருண்ட யுகத்துக்குள் மக்களை இட்டுச் செல்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

''மக்களை அரசியல் பகடைக்காய்களாக்கி அவலங்களின் மீது அரியணை ஏறும் முயற்சி அரங்கேற்றப்பட்டுள்ளது. இனக்குரோதங்களைத் தூண்டி இரத்தம் தோய்ந்த வரலாற்றை மீண்டும் இந்த மண்ணில் மேடையேற்றுவதற்கான முயற்சியை மன்று எந்த வகையிலும் அனுமதிக்காது'' என்று நீதிவான் மா.கணேசராசா தனது தீர்ப்பில் தெரிவித்திருந்தார்.

**நீதிபதி தீர்ப்பு**

இந்தத் தீர்ப்பை மீளாய்வு செய்யும் மனுவை தமிழ்த் தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார். அதன் மீதான தீர்ப்பு நீதிபதியும் மேல் நீதிமன்ற ஆணையாளருமான ஜே.விஸ்வநாதனால் வழங்கப்பட்டது.

அவர் தனது தீர்ப்பில் தெரிவித்ததாவது:-

அரசின் ஓர் அங்கம் என்ற வகையில் நீதித்துறையானது, அரசமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மதித்து, பாதுகாத்து, முன்னேற்றுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறது. இது அன்றாடம் நடைபெறும் விடயம்.

பொலிஸ் அதிகாரிகளால் முன்வைக்கப்படும் ஆலோசனைகளுடன் இணைந்து அல்லது அதனை ஏற்று அல்லது ஆட்சேபனையின்றி ஒத்துக்கொண்டு, ஒரு நீதிவான் தனது அதிகாரத்தை கைவிட்டு பொலிஸாருடன் சேர்ந்து செயற்படுவது என்பது என்னைப் பொறுத்தவரையில் சட்ட பூர்வமான செயற்பாடு என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது நாட்டில் அடிப்படை உரிமைகள் ஒரு நீதிபதியினால் மீறப்படுவதானது - அவர் சட்டப்படி நடந்து கொண்டாலும் அல்லது அவர் கட்டளைகளை எவராவது செயல்படுத்தினாலும் - அரசமைப்பின் 126ஆவது அத்தியாயத்தின் பிரிவுகளை நிறைவேற்றுவதாக இருக்காது என்று உயர் நீதிமன்றம் தொடர்ச்சியாகக் கருதி வந்துள்ளது.

நீதிபதியின் முன்வைக்கப்படும் பொய்யான தகவல்கள், அவரை தவறாக வழிநடத்தக்கூடிய ஆவணங்களின்அடிப்படையில்அவரது முடிவு தவறாக அமைந்தாலோ அல்லது நீதியின் பகுத்தறியும் திறன் தவறாகப் பயன்படுத்தப்பட்டாலோ கூட அது அரசமைப்பின் 126ஆவது அத்தியாயத்தின் பிரிவுகளை நிறைவேற்றுவதாக இருக்காது என்று உயர் நீதிமன்றம் கருதி வந்துள்ளது.

இந்த வழக்கை சட்டத்தின் பிரகாரம் ஆக்கபூர்வமாகவும் இறுக்கமாகவும் கவனத்தில் எடுக்கும் அதே சமயம் 2012.06.27, 2012.06.18 ஆகிய திகதிகளில் நீதிவானால் விடுக்கப்பட்ட கட்டளைகளைத் தள்ளுபடி செய்கிறேன். ஏனென்றால், மனுதாரருக்கு தனிப்பட்டமுறையில் அமைதியாக முரண்படுவதற்கு மட்டுமல்ல, தன் முரண்பாட்டை வெளிப்படையாக சொற்கள், நடத்தை மற்றும் செயற்பாடுகள் மூலமும் அமைதியாக, சட்டபூர்வமான முறையில் வெளியிட உரிமை இருக்கிறது.

என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார்.

**அறிவுரை**

பொலிஸார், தேவையெனில் பொது மக்களுக்குப் பங்கம் ஏற்படாத வகையில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு சட்டத்தினால் ஏற்படக்கூடிய நிபந்தனைகளை விதிக்கலாமே தவிர, அவற்றை முற்றாகத் தடை செய்ய முடியாது என்றும் அவ்வாறான நிபந்தனைகள் மீறப்படும் போது நடவடிக்கை எடுக்கலாம் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வழக்கில் மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் கு.குருபரன், வி.மணிவண்ணன் மற்றும் க.சுகாஷ் ஆகியோர் வாதாடினர். யாழ். பொலிஸ் நிலைய தலைமையகப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா அரச சட்டத்தரணியூடாக மன்றில் முற்பட்டிருந்தார். (ப-4)

## கோமாவில் இருந்த அரசியல் கைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளதாக அரசியல் தலைவர்களும் மனித உரிமை ஆர்வலர்களும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 29ஆம் திகதி வவுனியா சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி சிறைக் காவலர்கள் மூவரைத் தடுத்து வைத்தனர். கைதிகளிடமிருந்து சிறைக் காவலர்களை மீட்பதற்காக பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அழைக்கப்பட்டனர். அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையினால் சிறைக்காவலர்கள் மீட்கப்பட்டனர். இந்தச் சம்பவத்தின்போது தமிழ் அரசியல் கைதிகள் மீது மிக மோசமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் பல கைதிகள் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினார்கள். அதில் ஏற்கனவே உயிரிழந்த நிமலரூபன், நேற்று உயிரிழந்த டெல்றொக்ஷன் ஆகியோரும் அடங்குவர்.

சிறைச்சாலை அசம்பாவிதங்களை அடுத்து அன்றைய தினமே தமிழ் அரசியல் கைதிகள் அனுராதபுரம் சிறைக்கு மாற்றப்பட்டனர். அங்கும் மோசமாகத் தாக்கப்பட்ட அவர்கள் கொழும்பு மகர சிறைச்சாலைக்கும், கண்டி போகம்பரை சிறைச்சாலைக்கும் கொண்டு செல்லப்பட்டனர். இவ்வாறு மகர சிறைக்கு மாற்றப்பட்ட கைதிகளுள் ஒருவரான டெல்றொக்ஷன் கோமா நிலையில் ராகம வைத்தியசாலையில் 38 நாள்களின் பின்னர் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

ராகம வைத்தியசாலைக்கு மகனை பார்வையிடச் சென்ற தந்தையார் மரியதாஸ் 'உதயனுக்கு'த் தெரிவிக்கையில்,

ராகம வைத்தியசாலையில் உள்ள எனது மகனைப் பார்வையிடுவதற்காக நானும் எனது மனைவியும் நேற்று அங்கு சென்றோம். மகர சிறைச்சாலைக்கு சென்று மகனைப் பார்வையிட அனுமதி பெறவேண்டும். அதற்காக நேற்று காலை 9 மணிக்கு அங்கு சென்றேன். அப்போது அங்கிருந்த சிறை அதிகாரி எனது மகன் உயிரிழந்த விடயத்தை என்னிடம் கூறினார். நேற்று அதிகாலை 2.30 மணிக்கு அவர் உயிரிழந்ததாக சிறை அதிகாரி கூறினார்.

இதன் பின்னர் நேற்று மாலை நீதிபதியுடன் சென்று எனது மகனின் சடலத்தைப் பார்வையிட்டேன். அவரது சடலம் ஐஸ் பெட்டி ஒன்றில் வைக்கப்பட்டிருந்தது. மகனின் சடலத்தை நாளை மதியம் (இன்று) தருவதாக அங்கு அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தனர் - என்றார்.

இறுதிச் சடங்குகளுக்காக மகனின் சடலம் இன்று யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் எனவும் மரியதாஸ் கூறினார். (த-5)

## தீர்வை வெளியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார். போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு மூன்று வருடங்கள்கடந்தநிலையில்இலங்கை தற்போது பொருளாதார போரை எதிர்கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ், பொருளாதார போரில் இலங்கைக்கு எதிராக நிற்கும் சக்திகள் உல்லாசப்பயணத்துறை போன்றவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தவும் முயற்சிக்கின்றன எனச் சாடினார். நாட்டின் தேசியப் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தி வெளிநாட்டுத் தீர்வொன்றை நாட்டுக்குள் திணிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதாகவும் கவலை வெளியிட்ட அமைச்சர், நாடாளுமன்றத்தினூடாக எடுக்கப்படும் ஓர் உள்நாட்டுத் தீர்வே இலங்கைக்குப் பொருத்தமானதாக இருக்குமென்றும் குறிப்பிட்டார் அமைச்சர் பீரிஸ்.

## கூட்டமைப்பின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பின் ஆதரவாளர்கள் மீது முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானின் தலைமையின் கீழ் இயங்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் மகேந்திரலிங்கமும், அவரது ஆதரவாளர்களும் நேற்றுக்காலை ஆரையம்பதி செல்வாநகர் பகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அங்கு வந்த பிள்ளையான் கட்சிக் கும்பல் இவர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு தாக்குதலையும் நடத்தினர். காத்தான்குடி பொலிஸாருக்கு சம்பவம் அறிவிக்கப்பட்டு பொலிஸார் விசாரணைகளை நடத்தினர்.

## டெல்றொக்ஷனின் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் மனோ கணேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வவுனியா சிறைச்சாலை சம்பவத்தில் கொடூரத் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்த மரியதாஸ் டெல்றொக்ஷனின் படுகொலைக்கு அரசே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். இந்த மரணம் தெருவில் நடந்தது அல்ல. வழமையாக சொல்வதைப்போல், விசாரணைகள் நடக்கின்றது, கொலையாளிகளை இன்னமும் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்லி அரசு தப்ப முடியாது.

இந்தப் படுகொலை அரசின் பாதுகாவலுக்கு உட்பட்ட, சிறைச்சாலை வளாகத்தில் நடைபெற்றுள்ளது என்பதுடன் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்ட இன்னும் பல தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலையிலும், வைத்தியசாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற அடிப்படை உண்மையை அரசு மறைக்க முடியாது -என்றார்.

டெல்றொக்ஷனின் மரணத்துக்கு அரசே பொறுப்புக்கூற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

வவுனியா சிறைச்சாலை சம்பவத்தை அடுத்து தாக்கப்பட்டு கோமா நிலையில் ராகம போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த மரியதாஸ் டெல்றொக்ஷன் உயிரிழந்தமை எனக்கு மிகுந்த வேதனையளிக்கின்றது. உண்மையில் அவர் சிறைச்சாலையில் இருந்த போது மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

எங்களிடம் இருந்து விலகிய டெல்றொக்ஷனின் ஆத்மா சாந்தியடைய நான் பிரார்த்திக்கின்றேன்-என்றுள்ளது.

அரசியல் கைதி டெல்றொக்ஷனின் மரணம் அரசின் அராஜகத்தை உலகுக்குக் காட்டியுள்ளது. இதற்கு எதிராக அனைவரும் ஒன்று திரண்டு குரல் கொடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகளின் பாதுகாப்பு கேள்விக்குள்ளான நிலையில் இருக்கிறது. அவர்கள் மோசமாகத் தாக்கப்பட்டு கொல்லப்படுகிறார்கள். இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கையில் ஈடுபடும் அரசுக்கு எதிராக அனைவரும் அணி திரளவேண்டும். இந்தக் கைதியின் மரணத்துக்கு அரசு பொறுப்புக் கூற வேண்டும். உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இதற்குப் பொறுப்பானவர்கள் தண்டிக்கப்படவேண்டும். என்றார். (த)

## அரசியல் கைதியின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிரடிப்படையினரும் கூட்டாக இணைந்து கடந்த மாதம் முதலாம் திகதி ஈவிரக்கமற்ற, காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை மேற்கொண்டிருந்தனர். அந்தத் தாக்குதலில் படுகாயமடைந்து கோமநிலையில் இருந்த டெல்றொக்ஷன் மரியதாஸ் கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இவரது கொலையைக் கண்டித்தும், ஏனைய கைதிகளை விடுவிக்க வேண்டுமெனக் கோரியும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் முகமாகவும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்படி முற்பகல் 11 மணி தொடக்கம் 12.30 மணிவரை போராட்டத்தை அமைதியாகவும், ஜனநாயக முறையிலும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.கவனயீர்ப்புப் போராட்டம் நடத்துவது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி, நவசமசமாயக்கட்சி, முன்னணி சோசலிஷக் கட்சி, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி மற்றும் சில பொது அமைப்புக்களுடனும் கலந்துரையாடி மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (10)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மனித உரிமைகள் மீதான மேலான்மை துளிர்க்கிறதா?

சிறுபான்மை இன மக்கள் மீதான இனத்துவேசம், இனப்பாகுபாடுகள், இனஒடுக்கல்கள் நாட்டின் அரசுகளால் முன்னெடுக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டதன் விளைவுகளே, இலங்கை அரசு இன்று அனைத்துலக அரங்கில் அனுபவிக்கும் பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கும் பின்னடைவுகளுக்கும் காரணம்.

இந்த நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து, வேண்டிய முன்னேற்றமும் அபிவிருத்தியும் இன்றிப் பீடை பிடித்த நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதற்கு, தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் தமிழ் மக்கள் மீதான இன ஒடுக்கல் ''வெறி''யே காரணம் என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல.

சமாதான சகவாழ்வைப் புறமொதுக்கி, தள்ளிவீழ்த்தி, அதற்குப் பதிலாக இனத்துவேசத்தை நட்டு, தண்ணீர் ஊற்றி வளர்த்தவர்கள் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள்.

இப்போது அதே பணியை, கெடுதல்களைச் செய்யும் பொறுப்பை பௌத்த மதத் துறவிகள் கையில் எடுத்துள்ளார்கள் என்று கொள்ளுமளவுக்கு அவர்கள் வடக்கு, கிழக்கில் சிறுபான்மை இனங்களின் மதங்களான இந்து, இஸ்லாம் மத அடையாளங்களை அழித்துவிடும் பெரும் திட்டம் ஒன்றை வகுத்துச் செயற்படுவதாக எண்ணத் தோன்றுகிறது.

இதனை, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனும், அமைச்சர் ரவூப் ஹக்கீமும் தொட்டுக் காட்டி உள்ளனர்.

வடக்கு, கிழக்கில் காவியுடைப் பயங்கரவாதம் தலைவிரித்து ஆடுவதற்குத் தொடங்கி உள்ளதாக மனோ கணேசன் தெரிவித்திருக்கிறார். நாடு முழுவதிலும் இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ வணக்க ஸ்தலங்களுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்கள், ஆக்கிரமிப்புக்கள் சிங்கள பௌத்தத்தின் பெயரிலேயே நடத்தப்படுகின்றன. இந்த அரசாங்கம் இட்டுள்ள அத்திபாரமே காவியுடை அரசியல்தான் என்று அவர் சாடியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 80 வருடப் பழைமைவாய்ந்த, பாணமையில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தின் விக்கிரகங்கள் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டிருப்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதே வகையில், வரிசையில், முஸ்லிம் மக்கள் பள்ளிவாசல்களில் தமது அன்றாடத் தொழுகையை நிறைவேற்ற முடியாத நிலையில் வாழ்வதாக, அச்சமான சூழலில் வாழ்வதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தமது மக்களுக்கு நேர்ந்துள்ள கதியை வெளிப்படுத்தி இருக்கின்றார்.

கொழும்பு, ராஜகிரிய ஒபயசேகரபுரவில் அமைந்துள்ள பள்ளிவாசலில் கடந்த வாரத்தில் நடந்த சம்பவம் எவரையும் திணுக்குற வைப்பதாகும். சில பௌத்த பிக்குமாரின் தலைமையில் சென்றவர்கள் அங்குள்ள பள்ளிவாசலை மூடும்படி உத்தரவிட்டனர். அத்தோடு இனிமேல் அங்கு தொழுகை நடத்தக் கூடாது என்றும் மிரட்டல் உத்தரவிட்டும் சென்றுள்ளனர்.

60 வருடம் பழைமை வாய்ந்த தம்புள்ள பள்ளிவாசல் பௌத்த மதகுருமார் தலைமையில் சென்ற குழுவினரால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது.

பௌத்த புனித பிரதேசத்தில் உள்ள அந்தப் பள்ளிவாசல் அகற்றப்பட வேண்டும் என்ற அவர்களின் கோரிக்கையில் இன்னமும் மாற்றம் இல்லை. இதற்கு முன்னர் அநுராதபுரம், குருநாகல், தெஹிவளை ஆகிய இடங்களிலும் முஸ்லிம் மக்களின் மத உரிமைகள் சீண்டப்பட்டன.

வடக்கு, கிழக்கில் பாரம்பரியமாக இந்துக் கோயில்கள் அமைந்திருந்த இடங்களில் இப்போது புதிதுபுதிதாக விகாரைகள் திடீர் திடீர் என முளைத்துள்ளன.

மன்னாரில், இந்துக்களின் சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வர ஆலய வளாகத்தில் புத்தர் பெருமானின் சிலை நிறுவும் சூழ்ச்சிமிக்க முயற்சி அரங்கேற்றப்பட்டமை-

சரித்திரப் பிரசித்திபெற்ற மற்றொரு பொலனறுவை சிவன் கோயில் வளாகத்தில் கருங்கற்கள் பெயர்த்து எடுக்கப்பட்டமை-

திருகோணமலை ஆஸ்பத்திரி வளாகத்தில் அமைந்துள்ள கோயிலை அகற்றுவதற்கு உயர்மட்ட ஆசியுடன் எடுக்கப்பட்ட முயற்சி (பின்னர் நிறுத்தப்பட்டது)-

ஆகியனவும் பெரும்பான்மை இனத்தவர்களால் ஏனைய மதத்தவரின் மத உரிமை சீண்டப்பட்டமைக்கான சில உதாரணங்களாகும்.

இலங்கையில் சிங்கள மக்கள் பெரும் எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக வாழ்வதால், அவர்கள் அனுஷ்டிக்கும் பௌத்த மதம் முதன்மையானதாகக் கருதப்படுகிறது, கணிக்கப்படுகிறது. இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் சகிப்புத் தன்மையுடன் தமது மதங்களை அனுஷ்டித்து வருகின்றனர்.

இதற்கு ஆப்பு வைத்து, பௌத்த மதத்தை மேலோங்கித் தனம் கொண்டதாக மாற்றும் வன்மத்தின் வெளிப்பாடே, ஏனைய மதஸ்தலங்களை அகற்றவும், விகாரைகளைக் கட்டுவதற்கும்- அதற்கு முன்னோடியாக- புத்தர் பெருமானின் சிலைகளைப் புதிது புதிதாக நிறுவுவதற்குமான செயற்பாடுகளாகும். கடந்த காலங்களில் இன ஒற்றுமையை உண்டாக்குவதில் மதங்கள் குறிப்பிட்டளவில் பங்காற்றி வந்தன என்பதும் மதத் தீவிரவாதிகளால் மறக்கப்பட்டு விட்டதாகக் கொள்ளலாம்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக சர்வதேச மட்டத்தில் சுட்டிக் காட்டிக் கண்டிக்கப்படும் இவ்வேளையில், மத சுதந்திரத்தை முற்றாகப் பொசுக்கும் செயற்பாடுகள் மலிந்து வருகின்றன. ஒரு வகையில், மனித, மற்றும் மத உரிமைகளில் அக்கறை உள்ள நாடுகளை நோக்கி, எங்கள் (நாட்டு ) விடயத்தில் தலையிடுவதற்கு, மூக்கை நுழைப்பதற்கு நீங்கள் யார் என்று முகத்தில் அறைவதற்கான குறியீடாக, மத சுதந்திரம் திட்டமிடப்பட்ட முறையில் சீண்டப்படுகிறது எனலாம். இதனை, மதங்கள் மீதான மேலாண்மைவாதம் துளிர்ப்பதாகக் கொள்வதில் தப்பு ஏதுமில்லை.

# மரணத்தை விளைவித்த குற்றவாளிக்கு எட்டு வருடங்களுக்குக் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம் .ஓக.9

பண்டத்தரிப்பு வடலியடைப்பில் ஐந்து வருடங்களுக்கு முன்னர் கொலை அல்லாத இறப்பை விளைவித்த குற்றவாளிக்கு யாழ். மேல் நீதிமன்றம் நேற்று எட்டு வருட சிறைத் தண்டனை விதித்தது. ஏனைய 3 சந்தேகநபர்களையும் நிரபராதிகள் என இனங்கண்டு விடுதலை செய்தது.

இந்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் மேல் நீதிமன்ற ஆணையாளர். ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் தீர்ப்புக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

2007 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 2 ஆம் திகதி சம்பவம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி ராஜசிங்கம் (வயது-42) என்பவர் கொட்டனால் தாக்கப்பட்ட நிலையில் மண்டை உடைந்து உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்தது.

''அன்றைய தினம் இரவு 9.30 மணியளவில் எமது வீட்டுக்கு யாரோ கல் எறிந்தனர். தனது கணவர் டோச் லைற்றை எடுத்து கிணற்றுக்கட்டில் ஏறிநின்று சுற்றிப் பார்த்து யார் என்று கேட்ட போது அவரது தலையில் முதலாவது எதிரியான ராஜேஸ்வரன் கணேஸ்வரன் என்பவர் கொட்டனால் அடித்ததை நேரில் கண்டேன்'' என்று இறந்தவரின் மனைவி சாட்சியம் அளித்திருந்தார்.

2007 ஓகஸ்ட் 2 ஆம் திகதி சம்பவம் நடைபெற்றதை அடுத்து 5 ஆம் திகதி முதலாவது சந்தேகநபரான ராஜேஸ்வரன் கணேஸ்வரன் மற்றும் சின்னத்துரை சாந்தகுமார், கனகசபை ராஜேஸ்வரன், கவிதா சாந்தகுமார் ஆகிய சந்தேகநபர்கள் சட்டத்தரணியூடாக மல்லாகம் நீதிமன்றில் சரணடைந்தனர். நாலாவது சந்தேகநபரான கவிதா அந்த நேரம் சுகவீனமுற்றிருந்ததால் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஏனைய மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் மீதான வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. திணைக்களத்தால் அந்த வழக்கு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு யாழ்.மேல்நீதிமன்றில் 2008 ஆம் ஆண்டு பாரப்படுத்தப்பட்டது.

அது தொடர்பிலான விசாரணைகள், விளக்கங்கள் நடைபெற்று தீர்ப்புக்காக வழக்கு நேற்று வரை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று இது தொடர்பிலான தீர்ப்பை மேல் நீதிமன்றம் அறிவித்தது.

விசாரணைகளிலிருந்து இறப்பு ஏற்படுவதற்கு கணேஸ்வரன் என்பவர் காரணமாக இருந்துள்ளார் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. எனினும் கொலை செய்யும் எண்ணத்துடன் அவர் தாக்கியிருக்கவில்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடிகிறது என்பதால் கொலையல்லாத இறப்பை விளைவித்தார் என்ற குற்றத்துக்காக அவருக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்ற ஆணையாளரால் தீர்ப்பளிக்கப்பட்டது.

முன்னைய நீதியரசர் தீர்ப்புக்களையும் சுட்டிக்காட்டி, குற்றவாளியாகக் கண்ட கணேஸ்வரனுக்கு 8 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஏனைய 3 சந்தேகநபர்களும் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் குற்றவாளிகளாக நிரூபிக்கப்படாததால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை, இரண்டாவது சந்தேகநபர் மல்லாகம் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் வெளிநாடு சென்றிருந்தார். அவர் யாழ்.மேல் நீதிமன்றில் வழக்குகளுக்குச் சமுகமளிக்கவில்லை. அவர் சார்பில் சட்டத்தரணிகளும் ஆஜராகவில்லை எனினும் விசாரணைகளின் பின்னர் அவர் நிரபாரதி என்று விடுதலை செய்யப்பட்டார்.

அரசதரப்பில் அரச சட்ட வாதி வி.திருக்குமரனும் சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான என்.ஸ்ரீகாந்தா, கே.பி.எஸ்.வரதராஜா ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

(ம-4)

## 3,332 கிராம அலுவலர்கள் வெற்றிடங்கள் நாடு முழுவதிலும்

யாழ்ப்பாணம் .ஓக.9

நாடு தழுவிய ரீதியில் 3 ஆயிரத்து 332 கிராம அலுவலர் வெற்றிடங்கள் உள்ளன. இது தொடர்பான விவரத்தை மாவட்ட அரச அதிபர்கள் ஊடாக பெற்றுள்ளோம்.

இன்னும் மூன்று மாதங்களில் கிராம அலுவலர்கள் வெற்றிடங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நிரப்பப்படும். நேர்முகப்பரீட்சை மூலமே கிராமஅலுவலர்கள்தெரிவுஇடம்பெறும்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டபிள்யூ அபயகோன் இவ்வாறு தெரிவித்துள்ளார். கிராம அலுவலர் நியமனம் மற்றும் அதற்கான காலதாமதம் குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பல வருடங்களாக கிராம அலுவலர் நியமனம் நடைபெறவில்லை. கிராம அதிகாரிகளை நியமிக்குமாறு பல்வேறு மட்டத்திலும் அழுத்தம் அதிகரித்துள்ளது. வினைத்திறனாக செயலாற்றக் கூடிய கிராம அலுவலர்களே நாட்டுக்குத் தேவையானவர்கள்.

முதற்கட்டமாக வெற்றிடம் உள்ள கிராம அலுவலர் விவரங்களை மாவட்ட செயலாளர்கள் ஊடாக பெற்றுள்ளோம். இந்த விவரங்களுக்கு ஏற்ப விண்ணப்பம் கோரப்பட்டு, நேர்முகப் பரீட்சை மூலம் ஆள்சேர்ப்பு இடம்பெறும்.

கூடுதல் தகைமை கொண்டவர்கள் ஆள்சேர்ப்பில் முன்னுரிமை பெறுவர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-50)

## நல்லூர் பிரதேச சபைக்கு சுகாதாரப் பரிசோதகர்

யாழ்ப்பாணம், ஓக.9

நல்லூர் பிரதேச சபைக்கு சுகாதார பரிசோதகர் ஒருவர் உள்ளூராட்சி திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதேச சபையில் சுகாதார பரிசோதகர்களுக்கு இரு வெற்றிடங்கள் இருந்த நிலையில் தற்போது ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளார் என்று சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

தற்போது நியமிக்கப்பட்ட சுகாதார பரிசோதகர் மூலம் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சுகாதார வசதிகளை மேலும் சீராக மேற்கொள்வதற்கு சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

சபையில் வெற்றிடமாகவுள்ள சுகாதார பரிசோதகருக்கான மற்றைய வெற்றிடத்தையும் நிரப்ப உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் கூறினார். (ம-17)

## பொதுச் சுகாதார பரிசோதகருக்கு கடமைப்பட்டியல் வழங்குவது யார்?

யாழ்ப்பாணம், ஓக.9

அண்மையில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்குரிய கடமைப் பட்டியலை யார் வழங்குவது என்ற சிக்கல் எழுந்துள்ளது.

இதுவரை காலமும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் கடமையாற்றிய பொது சுகாதார பரிசோதகர்கள் அண்மையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு நியமிக்கப்பட்டனர்.

உள்ளூராட்சி சபைகளில் முழுநேரக்கடமை புரிவதால் சகல செயற்பாடுகளும் அந்தந்த உள்ளூராட்சி சபைகளே மேற்கொள்ளும் நிலையில் இவர்களுக்கான கடமைப் பட்டியலில் மாற்றம் உள்ளதா அல்லது முன்னைய கடமைப் பட்டியல் பிரகாரம் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றுவதா என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளில் நீண்டகாலமாக பொது சுகாதார பரிசோதகர் பதவிகளுக்கு ஆளணி இல்லாததால் அங்கு முழுமையான கடமைப் பட்டியல் வழங்க முடியாத நிலை காணப்படுவதால் சிக்கல் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

## கீரிமலை நகுலேச்சர பிரதமகுருவின் பாரியாரின் மறைவுக்கு இந்து கலாசாரத் திணைக்களம் அனுதாபம்

யாழ்ப்பாணம், ஓக.9

தனது வாழ்நாளை கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்த ஸ்ரீமத்வேதநாயகி அம்மையாரின் மறைவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அனுதாபம் தெரிவித்துள்ளது.

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியரான மகாராஜஸ்ரீ.கு.நகுலேஸ்வரக் குருக்களின் துணைவியார் ஸ்ரீமத் வேத நாயகி அம்மையார் போர்க் காலத்திலும் நகுலேஸ்வர ஆலயச் சூழலை விட்டகலாது பல பணிவிடைகளைச் செய்தவர் அத்துடன் ஆலயத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பக்கபலமாக இருந்து சேவையாற்றியவர். இவரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம் என்று திணைக்களம் அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ம-14)

# வீதி சீரின்மையால் பயணிகள் பாதிப்பு



துணுக்காய், ஒக. 9

முல்லைத்தீவு மாவட்டத்திலும் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரும்புள்ளியான் - பூவரசங்குளம் -ஒட்டங்குளம் பிரதான வீதி குண்டும் குழியுமாக இருப்பதால் இதனூடாகப் பயணங்களை மேற்கொள்ள முடியாது மக்கள் பல இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான கரும்புள்ளியான் வீதி காணப்படுகிறது. இதனூடாக மேற்குப் பக்கமாக பூவரசங்குளம், ஒட்டங்குளம் பொன்னர் கிராமத்துக்குச் செல்லும் சுமார் 7 கிலோமீற்றர் வீதியே குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

இதேவேளை பாண்டியன்குளம் பிரதேசத்தில் கரும்புள்ளியான் பகுதியில் இருந்து மல்லாவியை இணைக்கும் வடக்குப் பக்கமான பாலியாற்றுப் பகுதியின் வீதியும் திருத்தப்படாமல் இருந்து வருகின்றது. இது மல்லாவியிலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டதாகும்.

இனிவருவது மழை காலம் என்பதால் இந்த வீதிகள் ஊடாக மக்கள் பயணங்களை மேற்கொள்ள முடியாமல் இருக்கும் என்பதால் இந்த வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கேட்டுள்ளனர். (க-415)

# வவுனியா - யாழ்ப்பாணம் இடையே அதிக கட்டணம் அறவிடும் பஸ்கள்

வவுனியா, ஒக. 9

தனியார் பஸ்கள் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் பயணிகளிடம், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திலும் பார்க்க அதிக கட்டணங்களை அறவிடுவதாகப் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கும் போக்குவரத்தில் ஈடுபடும் தென்பகுதியைச் சேர்ந்த தனியார் பஸ்களே பயணிகளிடம் 270 ரூபா முதல் 280 ரூபாவரை கட்டணமாக அறவிடுகின்றன.

வவுனியாவிலிருந்து பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்கள் 177 ரூபாவை அறவிடுகின்ற போதும் ஏனைய இடங்களிலிருந்து குறிப்பாக தென்பகுதியில் இருந்து வவுனியாவில் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களே இவ்வாறு அதிகரித்த கட்டணங்களை அறவிட்டு வருகின்றன என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

**இதே வேளை தென் பகுதியில் இருந்து சேவையில் ஈடுபடும் அரச பஸ்களிலும் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

இது தொடர்பாகக் குறித்த பஸ்களின் நடத்துநர்களிடம் விசாரிக்கும்போது தமது பஸ் அரைச் சொகுசு பஸ் எனவும் அதற்குரிய கட்டணமே அறவிடப்படுவதாகவும் பயணிகளுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

அரைச் சொகுசு பஸ்கள் குறிப்பிட்ட முக்கியமான தரிப்பிடங்களில் மட்டுமே தரித்து நின்று பயணிகளை ஏற்ற வேண்டுமென்பதுடன் பஸ்ஸிலுள்ள இருக்கைகளுக்குச் சமனான பயணிகளையே ஏற்றிச் செல்ல வேண்டும் என்று போக்குவரத்து விதிகள் கூறுவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார் நிலைமை இவ்வாறு இருக்கும் போது அந்த விதிமுறைகளை பின்பற்றாமல் கண்ட கண்ட இடங்களிலும் பஸ் நிறுத்தப்பட்டு பயணிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிய பின்பு அதற்கு அரைச் சொகுசுக்குரிய கட்டணத்தை எவ்வாறு அறவிட முடியும் எனப் பயணிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

இவ்வாறு தென்பகுதியிலிருந்து சேவையில் ஈடுபடும் பஸ்கள் உயர் மட்டங்களில் உள்ளவர்களுக்குச் சொந்தமானவை என்பதால் தம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லை எனவும் இது தொடர்பாக வவுனியா செயலகத்திலும், போக்குவரத்து அமைச்சிலும் பல முறைப்பாடுகள் தெரிவித்த போதிலும் இதுவரை எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனவும் வவுனியா தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் உயர் மட்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தென் பகுதியில் இருந்து சேவையில் ஈடுபடும் அரச பஸ்களிலும் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இவை தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனப் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (க-410)

# நுகர்வோர் பாதுகாப்பு சங்கங்கள்- வவுனியாவில் 25 உருவாக்கம்

வவுனியா, ஒக. 9

நுகர்வோர்களின் நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு வவுனியா மாவட்டத்தில் 25 நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

காலாவதியான பொருள்களை விற்பனை செய்தல், பழுதடைந்த பொருள்களை விற்பனை செய்தல், விலை கூடுதலாக விற்பனை செய்தல், நிறைகுறைவாக விற்றல் தொடர்பாகப் பல்வேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

இதனையடுத்து இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சம்பந்தப்பட்ட வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதனை இலகுபடுத்தும் நோக்கமாகவே வவுனியாப் பிரதேசத்திலுள்ள 25 கிராம சேவகர் பிரிவுகளிலும் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. உருவாக்கப்பட்ட இந்தச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு ஆரம்பக்கட்டமாக நுகர்வோர் சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நுகர்வோர் தத்தமது பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் இடம்பெறும் மோசடிகளை அந்தந்தப் பகுதி நுகர்வோர் பாதுகாப்புச் சங்கங்களில் முறைப்பாடுகளாகத் தெரிவிக்க முடியும்.

மேலும் இந்த அலுவலகத்தில் விசேடமாகப் பொருத்தப்பட்டுள்ள 0247755455 என்ற தொலைபேசியூடாகவும் வர்த்தகர்களுக்கு என முறைப்பாடுகளையும் தெரிவிக்கலாம். (க-எ-400)

## 'வளை ஓசை' ஆண்டிதழுக்கு கோரப்படுகின்றன ஆக்கங்கள்

வேப்பங்குளம், ஒக. 9

கண்டாவளைப் பிரதேசக் கலாசாரப் பேரவையால் வெளியிடப்படும் 'வளை ஓசை' ஆண்டிதழுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசம் சார்ந்த எழுத்தாளர்கள், கல்விப்புலம் சார்ந்தவர்கள் மற்றும் படைப்பாளிகளிடமிருந்து இந்த இதழுக்கான கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஆவணத் தரவுகள், கிராமியப் பாடல்கள், செவி வழிக் கதைகள் போன்றன எதிர்பார்க்கப்படுவதாகக் கண்டாவளை உதவி அரச அதிபரும், கண்டாவளைப் பிரதேசக் கலாசாரப் பேரவையின் தலைவருமான த.முகுந்தன் அறிவித்துள்ளார். (க-421)

# பொருத்தப்படும் நீர்க் குழாய்கள்

துணுக்காய், ஒக. 9

துணுக்காய்ப் பிரதேசத்தில் நீர் வழங்கல் சபையினர் நீரை வழங்குவதற்காக குழாய்களைப் பொருத்தி வருகின்றனர்.



துணுக்காய் பிரதேசத்தில் சுமார் 28 கிலோ மீற்றர் தூரத்துக்கான குழாய்களை இவர்கள் மிகத் துரிதமாகப் பொருத்தி வருகின்றனர்.

இந்தப் பகுதியில் தற்போது ஏற்பட்டுவரும் கடும் வறட்சியை இதன் மூலம் எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ள முடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

அந்த வகையில் மல்லாவி நகர்ப் பகுதியிலும் நீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. (க-415)

# புதிய வீடுகள் கையளிப்பு

முல்லைத்தீவு, ஒக.9

முத்துஐயன்கட்டு ஜீவநகர் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 50 வீடுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி கையளிக்கப்படவுள்ளன.

இந்தக் கிராமத்தில் வசிக்கும் மிகவும் வறிய நிலையிலுள்ள மக்களுக்கென இராணுவத்தினரின் அனுசரணையுடன் இந்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த விவரங்களை 64 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த பிரிகேடியர் ஜே.ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த வீடுகள் ஜீவநகர் கிராமத்திலுள்ள வறிய மக்களுக்குப் பேருதவியாக அமையுமெனவும் அவர் தெரிவித்தார். (க-500)

## ஒளிரப் போகின்றன வீதி விளக்குகள்

வவுனியா நகரசபையினால் கேள்வி கோரல் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட மின்குமிழ்களைக் காலதாமதம் இன்றி உரிய வீதிகளில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நகரசபை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

கொள்வனவு செய்யப்பட்ட மின்குமிழ்களை மக்கள் தேவை கருதி துரிதமாக பொருத்துவதற்கென சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மின்குமிழ்களையும் இணைப்பு உபகரணங்களையும் நகரசபை உறுப்பினர்களிடம் கையளித்துள்ளனர். இதனை உரிய தெருக்களில் பொருத்துவதற்கு நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

# ஒரு லட்சத்து 30 ஆயிரம் வெடிபொருள்கள் மீட்பு

வவுனியா, ஒக. 9

வன்னிப் பகுதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் ஹலோ ட்ரஸ்ற் கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் ஒரு லட்சத்து 30 ஆயிரம் வரையான வெடிப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்த நிறுவனம் 2002 ஆம் ஆண்டு இலங்கையில் தனது பணியை முதன் முதலாக ஆரம்பித்தது.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வன்னிப் பகுதியில் மீள்குடியமர்வை துரிதப்படுத்தும் வகையில் தனது பணியை ஆரம்பித்து தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

இந்தக் காலப்பகுதியில் மேற்படி பகுதிகளில் இருந்து ஒரு லட்சத்து 30 ஆயிரம் வரையான வெடிபொருள்களை இந்த நிறுவனம் வன்னிப்பகுதியில் அகற்றியுள்ளது. இந்த வெடிபொருள்கள் அகற்றும் பணியில் சுமார் 800 வரையான தொண்டர்கள் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதைவிட யாழ்ப்பாணத்தில் 300 வரையான தொண்டர்கள் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விவரங்களை ஹலோட்றஸ்ற் நிறுவனத்தினர் இலங்கைக்கான நிகழ்ச்சித் திட்ட அலுவலர் தெரிவித்துள்ளார். (க-6)



கடந்த ஆறுமாத காலமாக மந்த கதியில் இடம்பெற்றுவரும் மூன்று கிலோமீற்றர் நீளமான நெடுங்கேணி ஒலுமடு வீதி மக்களின் பாவனைக்குத் தடை செய்யப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. (க-435)

# தேர்தல் தேவைக்கு அரசு அதிக ஹெலிகளை இறக்குமதி செய்கிறது

## குற்றஞ்சாட்டுகிறார் கருஜயசூரிய

கொழும்பு, ஒக.9

அரசாங்கத்திற்கு ஹெலிகொப்டர் பித்துபிடித்துள்ளதாகவும் தேர்தல் பிரசாரங்களுக்கு முன்னெப்போதுமில்லாத வகையில் அரச வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும் ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினரான கரு ஜயசூரிய கூறியுள்ளார்.

பாடசாலை விளையாட்டுப் போட்டிகள்போன்று குறுகியதூர பயணங்களுக்குக்கூட அவர்கள் ஹெலிகொப்டர்களை பயன்படுத்துகின்றனர் என கரு ஜயசூரிய கூறினார்.

வெளிநாட்டு கடன்கள் மூலம் மேலும் 14 ஹெலிகொப்டர்களை அரசாங்கம் வாங்கவுள்ளது. போர் முடிந்த நிலையில் இது பொதுச்சொத்தை விரயமாக்கும் நடவடிக்கையாகும். யுத்தத்தின் பின்னர் இவ்வளவு அதிக எண்ணிக்கையான ஹெலிகொப்டர்களை வாங்குவது அவசியமா? சுற்றுலாத்துறை தேவைக்காக அரசாங்கம் ஹெலிகொப்டர்களை வாங்குகிறது என்பதை மக்கள் நம்பத் தயாரில்லை' என அவர் கூறினார்.

17 ஆவது திருத்தச்சட்டம் இல்லாத நிலையில் நீதியான, சுதந்திரமான தேர்தலை உத்தரவாதப்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்தார். 'நீதியான சுதந்திரமான தேர்தலுக்கு சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு அவசியமாகும். தற்போதைய அரசாங்கத்தில் தேர்தல் திகதியை நியமிப்பவர் தேர்தல்கள் ஆணையாளர் அல்லர், சோதிடர்களே என அவர் கூறினார் (16)



அகில இலங்கை தாதியர் சங்கம் நேற்று கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது...

# நுரைச்சோலை மின்உற்பத்தி முடங்கியது

கொழும்பு, ஒக.9

நுரைச்சோலை லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் மின்னுற்பத்தி நடவடிக்கை தானாக நின்றுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. நுரைச்சோலைக்கும் வெயாங்கொடைக்கும் இடையிலான மின்விநியோகத் தொடரில் ஏற்பட்ட கோளாறே இதற்குக் காரணம்.

இந்த நிலையத்தை விரைவாக மீண்டும் இயங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர்விமலதர்ம அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.(16)

# கொலைச் சந்தேகநபர் மீண்டும் ஆளும் கட்சியில்

கொழும்பு, ஒக.9

இலங்கையில் கடந்த ஆண்டு பிரிட்டிஷ் பிரஜை ஒருவரை கொலை செய்தார் என்கிற சந்தேகத்தில் ஆளும் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட ஒருவர் மீண்டும் அக்கட்சியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் இலங்கைக்கு சுற்றுலா நிமித்தம் பயணம் மேற்கொண்டிருந்த பிரிட்டிஷ் பிரஜை குர்ரம் ஷேக் ஒரு விடுதியில் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தை தலைமை தாங்கி நடத்தியவர் என்று சந்தேகிக்கப்படும், உள்ளூர் கவுன்சில் தலைவரான சம்பத விதானபதிரவே என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (10-16)

# திருமுறிகண்டிப் பிள்ளையார் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக.9

உயர்நீதிமன்றில் தமிழ் பேசும் நீதிபதிகளினால் விசாரிக்கப்படவேண்டுமெனல்கட்டளையிடப்பட்ட திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயப்பிரச்சினை பற்றிய மனித உரிமைகள் மனு ஜனவரி 23இல்கவனத்தில் எடுக்கப்படுமென உயர் நீதிமன்றம்நேற்று அறிவித்தது.

ஆலயத்தின் பரம்பரை தர்மகர்த்தாவான ஜி.மணிவண்ணன் தாக்கல் செய்த மனு, நீதிபதிகள் ஷிரானி திலகவர்த்தன, எஸ்.ஐ.இமாம், பியசத் தெப் ஆகியோரடங்கிய நீதிபதிகள் குழாமின் முன் வந்தது. திருமுறிகண்டிப் பக்தர்கள் மன்றத்தின் தலைவர்திருநாவுக்கரசு, செயலாளர் வி.நாகராசா ஆகியோர் தலையிட்டுவிண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்துள்ளனர் .ஆலய பக்தர்களின் பிரதிநிதிகளாலான ஒரு சுயாதீனமான முகாமைத்துவசபை இக்கோயிலை முகாமைத்துவம் செய்யநியமிக்கப்பட வேண்டுமென இந்தவிண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ளது. (16)

45ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தவராசா தர்ஷிகா (தங்கா)



அன்னை மடியில் 28.06.1994

ஆண்டவன் அடியில் 26.06.2012

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (09.08.2012)வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

புதிய செம்மணி வீதி,
வயல்வெளி கந்தசாமி கோயிலடி,
நல்லியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர்.
தவராசா(தம்பி அண்ணை)

(21489)(9.14)

# புலம்பெயர் தமிழர்களால் பொருளாதாரத்தில் பெரும் சவால்களை எதிர்நோக்கும் இலங்கை

கொழும்பு, ஒக.9

புலம்பெயர் தமிழர்களினால் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக இலங்கைக்கு எதிராக பொருளாதாரப் போரொன்று கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. இதனால் வடபகுதி அபிவிருத்தித் திட்டங்கள் நேரடியாக பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக வர்த்தகத் தடைகளை விதிக்குமாறு சர்வதேச நாடுகளை மேற்படி புலம்பெயர் தமிழர்கள் தூண்டிவிடுகின்றார்கள். இதன்மூலம், இலங்கையின் நிலைமையை சர்வதேசமயப்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் போர் வெற்றி அனுபவத்தை சர்வதேச நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளும் இராணுவக் கருத்தரங்கு 2012 நேற்று புதன்கிழமை கொழும்பில் ஆரம்பமானது. நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கி எனும் தொனிப்பொருளில் கொழும்பு கலதாரி ஹோட்டிலில் இன்று ஆரம்பமான இக்கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பட்டார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறுகையில்,

ஆயுதப் படைகள் வழமைக்கு மாறான வித்தியாசமான பணியில் ஈடுபட்டு வருகின்றன. அரசாங்கம் மேற்கொண்ட மனிதாபிமான இராணுவ நடவடிக்கை மக்களை விடுவிப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது. இந்த மனிதாபிமான நடவடிக்கை எந்தவொரு வெளிநாட்டுக்கும் எதிரானது அல்ல.

இலங்கை இராணுவமயமாக்கப்பட்டு வருகின்றது என கூறப்பட்டு வருவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களுக்கு அத்தியாவசிய சேவையை வழங்கவே அவர்கள் வடக்கிற்கு அனுப்பப்பட்டனர். தற்போது வடக்கில் வழமை நிலை திரும்பியுள்ளதால் அவர்கள் அக்கடமைகளிலிருந்து விலகி வருகின்றனர்.

ஆயினும், வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவம் முற்றாக வெளியேறாததற்கு காரணம் நாம் கடந்த கால வரலாற்றை எப்போதும் மறந்துவிட முடியாது. மீண்டுமொரு போர்ச் சூழ்நிலைக்குள் செல்ல நாம் தயார் இல்லை.

இலங்கைக்கு எதிராக பிரச்சினைகள் எழுப்பப்பட்டு வருகின்றன. சர்வதேசத்தின் முன்னால் இலங்கையை ஒரு குற்றவாளியாக நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறானதொரு சூழ்நிலையில், இந்த இராணுவ கருத்தரங்கு நடத்தப்படுவது மிகவும் உகந்ததே என்றார். (16)

# நாடாளுமன்ற விவாதங்களை கேள்விக்குட்படுத்த முடியாது

## சபாநாயகர் சமல்ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, ஒக.9

நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை கேள்விக்குட்படுத்த எவருக்கும் அதிகாரமில்லை எனவும் அவ்வாறுகேள்வி எழுப்பினால் அது நாடாளுமன்றச் சிறப்புரிமை மீறலாகும் எனவும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

மன்னார் நீதிமன்றத்தில் தான் வழக்குரைஞராக ஆஜரானபோது மன்னர் நீதிவான் தன்னை எச்சரித்ததாக வன்னி மாவட்ட ஐ.ம.சு.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் தெரிவித்த முறைப்பாட்டையடுத்தே சபாநாயகர் இவ்வாறு கூறினார்

வழக்கத்திற்கு மாறாக, என்னை தனது அறைக்கு அழைத்த நீதவான், மன்னார் ஆர்ப்பாட்டத்தில் நான் பங்கு பற்றினேனா எனவும் தனக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நான் கருத்து தெரிவித்தேனா எனவும் கேள்விஎழுப்பினார்' எனநாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் கூறினார்.

அதே வேளை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்றச் சிறப்புரிமைக்கு உரியவர்களானாலும் நீதித்துறை அலுவலர் ஒருவரின் நடவடிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் விமர்சிக்க முடியாது என்பதால், மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் முன்னர் ஆற்றிய உரையானது நிலையியற் கட்டளையை மீறுகிறதா என்பதையும் சபாநாயகர் ஆராய வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார். அதன்பின் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மேற்கண்ட கூற்றை அளித்தார்.

யாழ்ப்பாண ரோட்டறிக்கழகமும் புலமைச்சுடர் ஆசிரியர் குழாமும் இணைந்து நடத்தும் மாபெரும் புலமைப் பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கு



இடம் :-தென்மராட்சி கலைக் கலாசார மண்டபம்.

காலம்:- (12.08.2012) ஞாயிற்றுக்கிழமை

நேரம்:- காலை 8.30

மேலதிக விவரங்களுக்கு
071 618 2182
077 618 4772.

(C2189)(9.14)

**சட்டறிங் அடித்துக் கொடுக்கப்படும்**

கட்டடத்திற்கு சட்டறிங் உடன் அடித்துக் கொடுக்கப்படும்.
ஒரு ஸ்குயர் ரூபா 7000/= மட்டும்.
தொடர்புகளுக்கு- 077 816 7864

(21483)(14.9)

**விற்பனைக்கு**

NP LJ XXXX எனும்
இலக்கமுடைய 3 கியூப் டிப்பர்
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0773322320

(21479) (2-6)

**வீட்டு வேலையாள் தேவை**

யாழ்ப்பாணம், நல்லூரடியில் அரச உத்தியோகத்தர்களின் வீட்டில் வீட்டு வேலைகள் மற்றும் பிள்ளை பராமரிப்புக்கு வேலையாள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம். வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவோர் விரும்பத்தக்கது.

தொடர்பு :0750481186

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பம் நட்சத்திரம் அவிட்டம் சுவிஸர்லாந்தில் வசிக்கும் தாரம் இழந்த (2 ஆண்பிள்ளைகளின் தந்தை)38 வயது மணமகனுக்கு அழகிய தகுந்த நற்குணமுள்ள பெண்ணை அவர் எதிர்பார்க்கின்றார்

தொடர்புகளுக்கு: 0772579491

**தவறிவிட்டது**

கந்தசாமி சிவபாக்கியம் ஆகிய எனது 507213294V இலக்க N.I.C யாழ்ப்பாணத்திற்கும் - புதுக்காட்டுச் சந்திக்குமிடையில் வவுனியா செல்லும் பேருந்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

(21493)(9.14) தொடர்புகளுக்கு 077 181 4341.

# கார் விற்பனைக்கு



TOYOTA HILUX (2008)



HONDA Insight Hybrid (2009)

தொடர்புகளுக்கு: 077 663 0450.

(21480) (14.9)


# கண்ணீர் அஞ்சலி

*காசிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்*

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. இ.தனஞ்சயனின் பாசமிகு மாமனார் பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

யா/ஏழாலை மகாவித்தியாலயம்
(ஆசிரியர் கழகம்)

(21488)(14.9)

# மரண அறிவித்தல்



*செல்லப்பா கந்தையா*

27, முதலியார் ஒழுங்கை, நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கந்தையா கடந்த (05.08.2012) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா -தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சின்னையா-சின்னம்மா தம்பதியரின் மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசபை, கண்மணி, வைத்தியலிங்கம், பரமசாமி மற்றும் ஐயாத்துரை ஆகியோரின் சகோதரனும் வசந்தகுமாரி காலஞ்சென்றவர்களான இரவீந்திரன், இரவிக்குமார் மற்றும் ஜெயந்தி, சாந்தினி ஸ்ரீதரன், நயந்தி, உமா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.08.2012) வியாழக் கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (21492) (3.14)

தகவல்
குடும்பத்தினர்.

சாவகச்சேரி பிரதேசசபை

01.09.2012 – 31.12.2012 வரை இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் 2012

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி :- 10.08.2012 - 15.08.2012

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதி :- 16.08.2012

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 17.08.2012 பி.ப 2.00மணி

| இல | குத்தகை விபரங்கள் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை(Vat ,Nbt தவிர) | கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (Vat ,Nbt தவிர) |
|---|---|---|---|---|
| 1 | கைதடி மாட்டிறைச்சிக்கடை | 16700.00 | 1,000.00 | 500.00 |
| 2 | கைதடி ஆட்டிறைச்சிக் கடை | 13700.00 | 1000.00 | 500.00 |
| 3 | மிருசுவில் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 25000.00 | 1000.00 | 500.00 |

மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் கேள்விப் படிவம் பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

**சிற்றம்பலம் துரைராஜா**
**தவிசாளர்**
**சாவகச்சேரி பிரதேசசபை**
**கொடிகாமம்**
**09.08.2012**

(C/2184) (2-6)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கைத்தொழில்துறையில் சிறந்த தொழில் முயற்சியாளருக்கான "சில்ப கர்மாந்த்" - 2011 என்னும் தேசிய விருது பெற்ற

**மயில்வாகனம் மகேந்திரலிங்கம்**
**(தவம் போட்டோ)**

அவர்களைப் பாராட்டுவதுடன், மேலும் இவரது சமய, சமூக பணிகளைக் கௌரவித்து, 09.08.2012 வியாழன் முற்பகல் 11 மணிக்கு மட்டுவில் மத்தி ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தினரால் மேற்படி தேவஸ்தானத்தில் நடத்தப்படும் பாராட்டு விழாவில் கலந்து சிறப்பிப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மகேஸ்வர பூசையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானம்,
மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.

(21484) (2-6)

# மரண அறிவித்தல்

*அருணாசலம் பத்மநாதன்*

(ஓய்வு பெற்ற இ.போ.ச கிளிநொச்சி மேற்பார்வையாளர் D.S )



மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பத்மநாதன் நேற்று முன் தினம் (07.08.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்- முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகநாதன் புவனேஸ்வரி, திருமதி சபாரத் தினம் மகேஸ்வரி, மற்றும் காலஞ் சென்ற குணரத்தினம் மற்றும் சிவக்கொழுந்து, காலஞ்சென்றவர்களான அருணாசலம், திசைவீரசிங்கம், சங்கரப்பிள்ளை சிவபாக்கியம் மற்றும் திருமதி இரவீந்திரன் இராஜமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், லோகதாஸ் (நோர்வே), பிரதீபா (கனடா), யோகலிங்கம்- மைதிலி (நோர்வே), காலஞ்சென்ற மலர்விழி மற்றும் வதனதாஸ் (நோர்வே), திருமதி விஜயகுமார்- கேதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், கோகிலபாரதி, யோகலிங்கம், அகலிகை, விஜயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநயன், நிவேதிதா, யஸ்வினி, வாசவி, காலஞ்சென்ற சாமினி மற்றும் ஆகவி, கம்சிகா, கவியரசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.08.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


"தீப வாசா"
மீசாலை வடக்கு,
மீசாலை, சாவகச்சேரி.

(ச/2187)(3.14)

தகவல்
குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

*மலர்வு* 10 * 07 * 1927



*உதிர்வு* 12 * 07 * 2012

*அமரர்*

**Dr.ஆறுமுகம் நடராஜா**

12.07.2012 வியாழக்கிழமை அன்று அமரத்துவம் அடைந்த எமது குல விளக்கின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை 10.08.2012 வெள்ளிக்கிழமை அதிகாலை 05:00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணத்தையறிந்து நேரிலும், தொலைபேசி, கங்கி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மரண ஊர்வலத்தில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

நீலப்பழந்தை
வதிரி, கரவெட்டி.

(ச/2188)(3.14)

மனைவி,
பிள்ளைகள்.

# வீதி திருத்தப் பணிக்கு வல்லை குளத்து நீர்

## நன்னீர் திட்டம் பாதிப்பு

**பருத்தித் துறை– யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலிப்புக்காக இந்தக் குளத்திலிருந்து தினமும் 70 ஆயிரம் லீற்றர் வரையான நீர் எடுக்கப்படுகிறது**

வல்லை வெளியில் உள்ள தலவல்லைக் குளத்தில் தேங்கி நிற்கும் தண்ணீர் பருத்தித்துறை- யாழ்ப்பாணம் வீதி அகலிப்பு வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுவதால் வல்லை வெளியில் ஏற்படுத்தப்பட்டு வரும் நன்னீர்த் திட்டமும் சுற்றுச் சூழலும் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளன என்று முறைப் பாடு தெரிவிக்கப்படுகின்றது.

கடல் நீரேரியை ஒரு பக்க எல்லையாகவும் நெல், வெங்காய உற்பத்தி, வயல் நிலங்களை மறுபக்க எல்லையாகவும் கொண்டு இருந்து வரும் தலவல்லைக் குளத்தில் மழை நீரையும் சேமித்து நிறைய தண்ணீர் இருந்தது.

வல்லை கடல் நீரேரியை நன்னீராக்கும் திட்டத்துக்கு ஏற்ற வகையிலும் சிறுபோக காலத்தில் விவசாயிகளின் வெங்காயப் பயிர்ச் செய்கைக்கு தண்ணீர் பெறும் வகையிலும் இந்தக் குளம் அமைந்துள்ளது. பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலிப்புக்காக இந்தக் குளத்திலிருந்து தினமும் 70 ஆயிரம் லீற்றர் வரையான நீர் எடுத்துச் செல்லப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் குளத்து நீர் மட்டம் குறைந்து செல்வதுடன் கடல் நீரேரியை நன்னீராக்கும் திட்டமும் பாதிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. (ம-8)

# யாழ்.காங்கேசன்துறை வீதியில் அதிகரித்த வேகத்தில் வாகனங்கள்

வலி.வடக்கு, ஓக. 9

யாழ்.காங்கேசன் துறை வீதியில் அதிகரித்த வேகத்தில் வாகனங்கள் பயணிக்கின்றன. இதனால் விபத்துகள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதி 'காப்பெற்' வீதியாக மாற்றப்பட்டுள்ள நிலையில் வாகனங்கள் இவ்வாறு அதிகரித்த வேகத்தில் பயணிக்கின்றன என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்களின் கட்டுப்பாடற்ற வேகம் காரணமாகவும் பாடசாலைகளுக்கு முன்பாக வீதிக்கடவைகள் அமைக்கப்படாமை காரணமாகவும் மாணவர்கள் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், இணுவில் பகுதி வரையான வீதிகளுக்கு காப்பெற் போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

# யுவதி மீது வன்புணர்வு முயற்சி

சாவகச்சேரி, ஓக 9

வீதியால் சென்று கொண்டிருந்த யுவதியைப் பலவந்தமாக கடத்திச் சென்று அருகிலுள்ள பற்றைக்குள் வைத்து வன்புணர்வு செய்ய முயன்ற சம்பவம் ஒன்று ஞாயிற்றுக் கிழமை இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

வரணி இடைக் குறிச்சியைச் சேர்ந்த யுவதி ஒருவர் வீட்டில் இருந்து நகரில் உள்ள கடைக்குப் பொருள்களை வாங்குவதற்காகப் பற்றைகளுக்கு நடுவால் உள்ள வீதியூடாக நடந்து சென்றுள்ளார்.

அந்தச் சமயம் பற்றைக்குள் ஒழிந்திருந்த நபர் ஒருவர் குறித்த யுவதியை இழுத்துச் சென்று வன்புணர்வில் ஈடுபட முயன்றதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதை தொடர்ந்து பொலிஸார் குறித்த யுவதியை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

யுவதியின் உடலில் நகக்கீறல் காயங்கள் மற்றும் கத்தி வெட்டுக் காயங்கள் காணப்படுகின்ற போதும் அவர்வன்புணர்வுக்குஉட்படுத்தப்படவில்லை என வைத்தியசாலைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த- 16-9)

# பஸ்ஸில் ஏறத்தயங்கும் கர்ப்பிணிகள்

## வீதியின் விசித்திரமே காரணமாம்



யாழ்ப்பாணம், ஓக.9

நயினாதீவு வங்களா வடியில் இருந்து மலையடி வரை செல்லும் பஸ்ஸில் பயணிக்க கர்ப்பிணிகள் பின்னிற்கின்றனர் என்று பஸ் சாரதிகள் கூறுகின்றனர்.

குறித்த வீதியின் விசித்திரமே இதற்குக் காரணம் என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

நயினாதீவின் வங்களா வடி, மலையடி வீதி, கந்தர் கடைவீதி, சுடலைவீதி என்பவை மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றன.

வங்களாவடி மலையடி வீதி பல வருடங்களாக கவனிப்பாரின்றி கற்கள் நிறைந்தும் மேடு பள்ளமாகவும் காணப்படுகின்றது. இந்த வீதியில் செல்லும் பஸ்கள் குலுங்கி விழுந்தெழும்பித்தான் தமது பயணத்தைத் தொடர்கின்றன. பஸ்ஸில் பயணிப்பவர்களும் பெரும் சிரமப்படு கின்றனர்.

பஸ்ஸும் அடிக்கடி காற்றுப் போய்விடுகிறது. இதற்கு இந்த வீதிதான் காரணம் என்று விசனம் தெரிவிக்கின்றனர் சாரதிகள்.

கந்தன் கடைவீதியும் சேதமடைந்து நீண்ட நாள்களாக திருத்த வேலைகள் இடம்பெறாததால் இந்த வீதியிலும் பஸ்சேவையை மேற்கொள்வது பெரும் சிரமமாக இருப்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதிப்புனரமைப்புகள் மந்த க்தியிலேயே இருப்பதாகவும் சில வீதிகள் முற்றாக கவனத்தில் எடுக்கப்படுவதில்லை என்றும் கவலை தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# சைக்கிள் திருட்டு

வலி.வடக்கு, ஓக.9

ஆலயத்துக்குச் சென்ற பெண் ஒருவரின் சைக்கிள் திருடப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலயத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஆலய முன்றிலில் சைக்கிளை நிறுத்திவிட்டு ஆலயத்துக்குள் சென்று வழிபட்டுவிட்டு வந்து பார்த்த போது சைக்கிள் காணாமல் போயிருந்தது.

இது குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-86)



நல்லூர் பிரதேசத்துக்கான அரச கால்நடை வைத்திய நிலையம் பலாலிவீதி திருநெல்வேலியில் அமைந்துள்ள இக் கட்டட நிர்மாணப் பணிகள் நிறைவுறும் நிலையில் உள்ளன. இந்தக் கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ம-17)

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் உண்டியல் உடைத்து திருட்டு

வடமராட்சி, ஓக.9

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலில் உள்ள பலசரக்கு கடையும், கோயில் வெளி வீதியில் உள்ள உண்டியலும் இனந்தெரியாதோரால் உடைத்துதிருடப் பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு பலசரக்குக் கடையின் பூட்டுகளையும், கதவையும் உடைத்து உட்சென்ற இனந்தெரியாதோர் ஒரு தொகுதி சிம் கார்ட்டுகள், சோடா, பிஸ்கட், சிகரட் வகைகள் உள்ளிட்ட 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும், கோயில் நுழைவாயிலில் உள்ள உண்டியலும் உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த பணமும் திருடப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை, வல்லிபுரக் கோயிலுக்கு அருகில் உள்ள குருக்கட்டுப்பிள்ளையார் கோயில் வாசலில் இருந்த உண்டியலை உடைக்கச் சென்ற இனந்தெரியாதோர் அங்கிருந்த காவலாளிகள் சத்த மிடவே அங்கிருந்து ஓடித் தப்பி விட்டனர் என்று கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-8)

# கட்டாக்காலிகள் அகப்பட்டன

தென்மராட்சி, ஓக. 9

மீசாலைப் பகுதியில் கட்டாக்காலியாக அலைந்த இரு மாடுகள் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த மாடுகளுக்கு எவரும் உரிமை கோராத பட்சத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என்று நகரசபை தெரிவித்துள்ளது. (ம-9)

# போதையில் பஸ்ஸில் இடையூறு தெற்கு வாசிகளுக்கு மறியல்

தென்மராட்சி, ஓக. 9

பஸ்ஸில் மது போதையில் சக பயணிகளுக்கு இடைஞ்சல் விளைவித்த தென்னிலங்கை வாசிகள் இருவர் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை பஸ்ஸில் மது போதையில் பயணித்த இருவர் சக பயணிகளுக்கு இடைஞ்சல் கொடுத்ததாக கிடைத்த தகவலையடுத்து கொடிகாமம் பொலிஸார் இந்த இருவரையும் கைது செய்தனர்.

மறுநாள் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது இருவரையும் இன்று வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ம-9)

# வாடகை ஓட்டோ சேவை கோப்பாயில் ஒழுங்குபடுத்தல்

அச்சுவேலி, ஓக. 9

கோப்பாய் சந்தியில் வாடகை ஓட்டோ சேவை ஒழுங்குமுறைப்படுத்தப் பட்டது. பிரதேச செயலர் தலைமையில் குறித்த இடத் துக்குச் சென்ற குழுவினர் ஓட்டோச் சாரதிகளுடன் கலந்துரையாடி குறித்த சேவையை ஓர் ஒழுங்கில் கொண்டுவந்துள்ளனர்.

கோப்பாய்ச் சந்தியில் ஓட்டோக்கள் பல ஒரே இடத்தில் தரித்து நிற்கின்றன. பல ஓட்டோக்கள் வாடகை வாகனங்களாக பதிவு செய்யப்படாத நிலையில்பாவனையில்உள்ளன. இதனால் பாவனையாளர்கள் மற்றும் பொதுமக்கள் பல் வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் கூட்டத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டது.

இந்த நிலைமையை நேரடியாக அவதானிப்பதற்கு வலி.கிழக்கு பிரதேச செயலர் எம்.பிரதீபன் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் கிராம அலுவலர்கள் உள்ளடங்கிய குழு சென்றது.

இந்தக் குழுவினர் வாடகை வாகனமாக பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யாத ஓட்டோக்கள் மேலதிகமாக தரித்து நிற்பதையும் பல ஓட்டோக்கள் ஒரே இடத்தில் கூட்டமாக நிற்பதையும் இதனால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியை யும் அவதானித்தனர்.

இதனையடுத்து இந்த விடயங்கள் தொடர்பாக ஓட்டோசாரதிகளுடன் கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொண்டனர். தீர்மானங்கள் வருமாறு:-

வாடகை வாகனமாக பதிவு செய்யாத ஓட்டோ வாகனங்கள் மற்றும் அவற்றின் விவரங்களை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் உடனடியாக பதிவு செய்த பின்னரே சேவையில் ஈடுபட வேண்டும். அது வரையில் பதிவு செய்யாத ஓட்டோக்கள் சேவையில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

சந்தியில் ஒன்றுக்கு மேற்பட்ட ஓட்டோக்கள் தரித்து நிற்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.ஒவ்வொரு ஓட்டோக்களாக மருதனார் மடம் வீதிப்பக்கமாக தரித்து நின்று சேவையில் ஈடுபட வேண்டும். மற்றைய ஓட் டோக்கள் சந்தியைத் தவிர்த்து கைதடி வீதிப்பக்கத்தில் தரித்து நிற்க வேண்டும்.

வாடகைஓட்டோச்சேவையை ஒழுங்கமைக்கப்பட்ட ஒழுங்குமுறையின்பிரகாரம்ஒன்றன்பின் ஒன்றாகமேற்கொள்ள வேண்டும்.ஒழுங்குமுறையைதவிர்த்து முறைகேடாக சேவையில் ஈடுபடுபவர் மீது ஒழுங்கு நடவடிக்கைஎடுக்கப்படும். (ம-11)

## வறிய மக்களுக்கு இலவச தொலைபேசி

### காங்கிரஸின் தேர்தல் வியூகம்



வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள மக்களை கணக்கிட்டு அவர்களுக்கு இலவசமாகத் தொலைபேசி வழங்குவதன் மூலம் எதிர்வரும் 2014 நாடாளுமன்றத் தேர்தலின் வெற்றி வாய்ப்புக்கு காங்கிரஸ் தற்போதே புதிய வியூகத்தை வகுக்கிறது.

இந்தநிலையில் இந்த இலவச தொலைபேசி வழங்கும் திட்டம் குறித்து பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மற்றும் காங்கிரஸ் உயர்மட்ட தலைவர்கள் குழு கூடி ஆலோசனை நடத்தியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கென நாடு முழுவதும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களைக் கணக்கெடுக்கும் பணிகள் ஆரம்பமாக உள் ளன.

இந்தத் திட்டத்துக்கென மத்திய அரசு ரூ.7 ஆயிரம் கோடியை நிதியாக ஒதுக்கியுள்ளது.

வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள அனைத்து மாநில மக்களையும் ஒருங்கிணைக்க இந்த இலவச தொலைபேசித் திட்டம் உதவும் என்றும் இதற்காக மாதம் ஒன்றுக்கு ரூ.200 வீதம் இலவச அழைப்பு வசதி இணைக்கப்பட் டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த இலவசத் தொலைபேசி வழங்கும் திட்டத்துக்கு கேள்வி கோரல் அடுத்த மாதம் விடப்பட இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

### சுதந்திர தினத்தை முன்னிட்டு

# விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு

மீனம்பாக்கம், ஓக 9

இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று மத்திய உளவுப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளதால் சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாது காப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.




எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவை சீர்குலைக்க தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று மத்திய உளவுப் பிரிவு எச் சரிக்கை விடுத்துள்ளது. இதை யடுத்து மத்திய அரசு, நாடு முழுவதும் உஷார் படுத்தியது. இதனால், மக்கள் அதிகமாக கூடும் விமான நிலையங்கள், ரயில், பஸ் நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றில் கூடுதல் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை விமான நிலையத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி தொடக்கம் 5 அடுக்குப் பாது காப்பு முறை நடைமுறைக்கு வந்துள்ளது. அதன்படி உள்நாட்டு மற்றும் சர்வதேச முனையங்களில் பார்வையாளர்கள் வருகைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. விமான நிலையத்துக்குள் வரும் அனைத்து வாகனங்களையும் நுழை வாயிலில் நிறுத்தி, மோப்பநாய் உதவியுடன் வெடிகுண்டு நிபுணர்கள், பொலிஸார் தீவிர சோதனை நடத்துகின்றனர். அதற்கு பின்னரே வாகனங்கள் உள்ளே அனுமதிக்கப்படுகின்றன. போர்டிகோ பகுதியில் தடுப்புகள் அமைக்கப்பட்டு இயந்திரத் துப்பாக்கிகளுடன் கூடிய அதிரடிப்படையினர் தீவிர பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (வ)

## இளைஞர்கள் பாலியல் தொல்லை அரவாணிகள் தற்கொலை முயற்சி

இளைஞர்களின் இடைவிடாத பாலியல் தொல்லை காரணமாக நான்கு அரவாணிகள் தற்கொலை செய்து கொள்ள முயன்றனர். இந்தச் சம்பவம் தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் தேனி மாவட்டத்தில் அல்லிநகரம், வள்ளி நகரில் உள்ள ஆரோக்கிய சாமி வளாகம் என்ற இடத்தில் பத்துக்கும் மேற்பட்ட அரவாணிகள் ஒரு வீட்டில் வசித்து வருகின்றனர். இவர்கள் பிறப்பில் ஆணாக இருந்த போதும், காலப்போக்கில் பெண்களாக உடலியல் மாற்றம் பெற்றவர்கள். தமக்கான சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இவர்கள் குறித்த பகுதியில் தங்கியிருந்து, வெவ்வேறு நிறுவனங்களில் தொழில்புரிந்து வருகின்றனர். எனினும் இவர்களிடம் அந்தப்பகுதியைச் சேர்ந்த சில இளைஞர்கள் அடிக்கடி வந்து பாலியல் தொல்லை கொடுத்து வந்துள்ளனர்.

இவர்களின் பாலியல் தொல்லை காரணமாக நீண்ட நாள்களாக அவதிப்பட்டு வந்த இந்த அரவாணிகள் இது குறித்து தேனி மாவட்ட ஆட்சியளார் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரி ஆகியோரிடம் முறைப்பாடும் செய்துள்ளனர். எனினும் இளைஞர்களின் அட்டகாசம் குறையவில்லை.

இந்தநிலையில் நேற்று முன்தினம் இரவு இந்த இளைஞர்களில் சிலர் அரவாணிகள் தங்கியிருந்த பகுதிக்கு வந்து கனகா, ஸ்டெல்லா, தாமரை, சுவாதி ஆகிய நான்கு அரவாணிகளிடமும் தவறாக நடக்க முயன்றுள்ளனர்.

இதனால் நால்வரும் பூச்சி மருந்தை எடுத்துக் குடித்து தற்கொலைக்கு முயன்றுள்ளனர். எனினும் அயலவர்களும் ஏனைய அரவாணிகளும் அவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்று உயிர்பிழைக்க வைத்துள்ளனர். (வ)

## 'றோ' அதிகாரி பதவி நீக்கம்

சீனாவில், இந்திய உளவு அமைப்பான, 'றோ'வில் பணியாற்றிய அதிகாரி மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்ததை அடுத்து, அவரை பணி நீக்கம் செய்ய ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து மத்திய அரச வட்டாரங்கள் தெரிவித்ததாவது:-

சீனத் தலைநகர் பீஜிங்கில், மிகச்சிறப்பாகப் பணியாற்றிய இந்திய உளவு அமைப்பான, 'றோ'வில் பணியாற்றிய அம்ரீத் அலுவாலியா மீது, பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதனால், நாட்டின் பாதுகாப்பைக் கருதி, அவரைப் பணி நீக்கம் செய்ய ஜனாதிபதி உத்தரவிட்டார்.

அலுவாலியா, டில்லிக்கு வரவழைக்கப்பட்டு அவரிடம் பணி நீக்கம் தொடர்பான ஆணை வழங்கப்பட்டது. கடந்த சில நாள்களுக்கு முன், ஜம்முவில் அலுவாலியா பணியாற்றியபோது, மத்திய உள்துறை அமைச்சராக இருந்த சிதம்பரம் அங்கு சென்றிருந்தார். அப்போது, அவருக்குத் தகவல்களை சரிவர தெரிவிக்காததால், அமைச்சரின் கோபத்துக்கு அலுவாலியா ஆளாகினார்.

அதுபோல், அலுவாலியா மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளும் கடுமையாக இருக்கின்றன. கடந்த காலங்களில், அவர் தன் கடமைகளைச் சரிவரச் செய்யவில்லை என்பதும், அவரது பணி நீக்கத்துக்கு முக்கிய காரணம்-என்றன. (வ)

## நித்தி மீதான மருத்துவ பரிசோதனைக்குத் தடை



மதுரை இளைய ஆதீனம் நித்தியானந்தா மீதான பாலியல் குற்றச்சாட்டு வழக்கில், அவருக்கு மருத்துவ பரிசோதனை நடத்த கர்நாடக உயர்நீதிமன்றம் நேற்றுவரை தடை விதித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு சுவாமி நித்தியானந்தாவுக்கு எதிராகத் தொடரப்பட்ட பாலியல் குற்றச்சாட்டு வழக்கு மற்றும் அமெரிக்க வாழ் இந்தியரான ஆர்த்தி ராவ் என்பவர் அளித்த முறைப்பாடு தொடர்பாக கர்நாடக நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இது தொடர்பாக நித்தியானந்தாவிடம் இரத்த மாதிரி உள்ளிட்ட மருத்துவ சோதனைகளை நடத்த அனுமதிகோரி ராம்நகரில் உள்ள அமர்வு நீதிமன்றத்தில் கர்நாடக சி.ஐ.டி. பொலிஸார் மனுத் தாக்கல் செய்தனர்.

இதற்கு கடந்த ஜூன் 20 ஆம் திகதி நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து நித்தியானந்தா தரப்பில் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இது தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசாரணையில் ராம்நகர் நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த நேற்று வரை தடை விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

இதனிடையே, நித்தியானந்தா தற்போது இமய மலைக்கு யாத்திரை சென்றிருப்பதாகக் கூறப்படுகிறது. (வ)

## துணை ஜனாதிபதியாக மீண்டும் அன்சாரி

இந்தியாவின் 14 ஆவது துணை ஜனாதிபதியாக ஹமீது அன்சாரி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஹமீத் அன்சாரியின் தற்போதைய பதவிக்காலம் நாளையுடன் முடிவடைகிறது. பதவியைத் தொடர்வதற்காக அதற்கு மறு நாளான நாளைமறுதினம் சனிக்கிழமை அவர் துணை ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக் கொள்கிறார். அவரது பதவி ஏற்பு விழா ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.



டெல்லி, துணை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ஹமீது அன்சாரிக்கு, பிரதமர் மன்மோகன்சிங் கைலாகு கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தார்.

துணை ஜனாதிபதித் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் ஹமீத் அன்சாரியும், தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் ஜஸ்வந்த் சிங்கும் போட்டியிட்டனர்.

நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற வாக்களிப்பில் தலைவர்கள் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்தனர். இதன் வாக்கு எண்ணிக்கை நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 787 பேரில் ஹமீத் அன்சாரிக்கு ஆதரவாக 490 பேர் வாக்களித்தனர். ஜஸ்வந்த் சிங் 238 வாக்குகளைப் பெற்றார்.

47 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கவில்லை.

தொடர்ச்சியாக இரு தடவைகள் தெரிவுசெய்யப்பட்ட இரண்டாவது துணை ஜனாதிபதி ஹமீட் அன்சாரி ஆவார். இதற்கு முன் எஸ். ராதாகிருஷ்ணன் 1952 - 1962 வரை இரு தடவைகள் துணைச் ஜனாதிபதியாக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

75 வயதான ஹமீத் அன்சாரி அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ஆவார். ஆஸ்திரேலியா, ஈரான், சவூதி அரேபியா, ஆப்கானிஸ்தான் உட்பட பல நாடுகளின் இந்தியத் தூதராகவும் ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாகவும் அவர் கடமையாற்றினார். 2007 ஆம் ஆண்டு அவர் முதல் தடவையாக இந்திய துணை ஜனாதிபதியாகத் தெரிவானார். (வ)

## கடல்வழித் தாக்குதலையும் எதிர்கொள்வதற்குத் தயார்

### இந்தியக் கடற்படைத் தளபதி தெரிவிப்பு

தீவிரவாதிகளின் கடல்வழித் தாக்குதலை முறியடிக்க, கடற்படை தயாராக உள்ளது என்று கடற்படை தளபதி அட்மிரல் நிர்மல் வர்மா தெரிவித்தார்.

இந்திய கடற்படையின் தலைமைத் தளபதி அட்மிரல் நிர்மல் வர்மா இம்மாத இறுதியில் ஓய்வு பெறுகிறார். இதை முன்னிட்டு அவர் நேற்றுமுன்தினம் பேட்டியளித்தார். இதன்போது, லஷ்கர் இ-தொய்பா தங்கள் கடற்படைப்பிரிவை புதுப்பித்துள்ளதாக தீவிரவாதி அபு ஜிண்டால் கூறியுள்ள நிலையில், மும்பைத் தாக்குதல் போன்ற நிலைமையைச் சமாளிக்கக் கடற்படை தயாராக உள்ளதா என்று செய்தியாளர்கள் கேள்வி கேட்டனர். இதற்குப் பதில் அளிக்கையில் அவர் தெரிவித்ததாவது:-

அபு ஜிண்டால் கூறுவதற்கு முன்பே, தீவிரவாதிகளின் கடல்வழி தாக்குதலை முறியடிக்க கடற்படை தயாராகிவிட்டது. இதற்காக மீனவர்களுடனும் கடற்படை ஒருங்கிணைந்து செயற்றபட்டு வருகிறது. கடற்படையின் நடவடிக்கையால், இந்தியாவை சுற்றியுள்ள பகுதிகளில் கடற்கொள்ளைச் சம்பவங்கள் குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளது- என்றார். (வ)

## அஸாம் கலவரம்; விசாரணை சி.பி.ஐயிடம்

கவுகாத்தி, ஓக 9

அஸாமில் மீண்டும் ஏற்பட்ட கலவ்ரத்தில் 4 பேர் இறந்ததைத் தொடர்ந்து சாவு எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளது. கலவரத்தில் பல்வேறு சக்திகளுக்கு தொடர்பு உள்ளதால் விசாரணையை மத்திய புலனாய்வுத் துறையிடம் ஒப்படைக்க முதல்வர் தருண் கோகய் பரிந்துரைத்துள்ளார்.

அஸாம் மாநிலம் கோக்ரஜார் மாவட்டத்தில் கடந்த மாதம் பழங்குடி மக்களுக்கும் பங்களாதேஷ் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட கலவரத்தில் 69 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஈரான் செல்கிறார் மன்மோகன்



டில்லி, ஓக 9

அணி சேரா நாடுகளின் மாநாட்டில் பங்கேற்பதற்காக எதிர்வரும், 29 ஆம் திகதி இந்தியப் பிரதமர் மன்மோகன் ஈரானுக்குச் செல்லவுள்ளார். அங்கு, பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி உட்பட, பல நாடுகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


அணி சேரா நாடுகளின் 16 ஆவது மாநாடு எதிர்வரும் 29 ஆம் திகதி ஈரான் தலைநகர் டெஹரானில் ஆரம்பமாகவுள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக, பிரதமர் மன்மோகன் சிங் அன்றையதினம் டெஹரான் செல்லவுள்ளார். மூன்று தினங்கள் அங்கு தங்கியிருக்கும் பிரதமர், மாநாட்டில் பங்கேற்பதோடு, இரு தரப்பு உறவுகள் தொடர்பாக, ஈரான் அதிபர் முகமது அகமதி நிஜாத்துடனும் பேச்சு நடத்தவுள்ளார். (வ)

# தாக்கப்பட்டது தேவாலயம்

## நைஜீரியாவில் 19 பக்தர்கள் சாவு

லாகோஸ், ஒக. 9

நைஜீரியாவில் உள்ள தேவாலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில் 15 பேர் உயிரிழந்தனர். நேற்றுமுன்தினம் இங்குள்ள இவான்ஜெலிகல் தேவாலயத்தில் இந்தத் தாக்குதல் சம்பவம் நிகழ்ந்ததாகக் கோகி மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளர் ஜேகப் எபி தெரிவித்தார்.



தேவாலயத்தில் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டதாகப் பொலிஸார் தெரிவித் தனர். தாக்குதல் சம்பவத்தின் போது தேவாலயத்தில் எத்தனைபேர் இருந்தனர் என்ற விபரம் தெரியவில்லை.

இந்தச் சம்பவத்துக்கு இதுவரை எந்தத் தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

சமீபகாலமாகத் தேவாலயங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல் சம்பவங்களுக்கு முஸ்லிம் பழைமைவாதக் குழுவே காரணம் எனதெரியவந்துள்ளது.

இஸ்லாமிய மத பழக்க வழக்கங்களைக் கடைப் பிடிக்காத முஸ்லிம்கள் மீதும் இந்தக் குழுவினர் தாக்குதல் நடத்துகின்றனர். தலைநகர் அபுஜாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக் கட்டடத்தின் மீது சமீபத்தில் இந்தக் குழுவினர் தாக்குதல் நடத்தியது குறிப்பிடத்தக்கது.

கோகி மாகாணத்தைச் சேர்ந்த போகோ ஹாரம் என்ற குழுவினர் தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்துவதாகக் கூறப்படுகிறது.

ஆனால் அரசின் ஸ்திரத் தன்மையைக் குலைக்க இது போன்ற தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாக நைஜீரிய ஜனாதிபதி குட்லக் ஜோனதன் தெரிவித்தார்.

இந்தக் குழுவினர் முதலில் உள்ளூர் மக்களையும் பின்னர் அரசையும் குறிவைத்து தாக்குதல் நடத்தினர். இப்போது தேவாலயங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்துவதாக அவர் மேலும் கூறினார்.

ஆபிரிக்கக் கண்டத்தில் எண்ணெய் வளம் மிகுந்த நாடு நைஜீரியா. இங்கு வட பகுதியில் முஸ்லிகள் அதிக அளவிலும், தென் பகுதியில் கிறிஸ்தவர்கள் அதிக ளவிலும் வாழ்கின்றனர்.

போகோ ஹாரம் குழுவைச் சேர்ந்தவர்கள் கடந்த வாரம் யூ டியூபில், நைஜீரிய ஜனாதிபதி மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவைக் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

இந்தக் குழுவை சர்வ தேசத் தீவிரவாதிகள் என ஒபாமா கூறியதை அவர்கள் கடுமையாகச் சாடியுள்ளனர். இந்தக் காணொலிப் பதிவுக் காட்சிகள் எங்கு படமாக்கப்பட்டன என்பது தெரியவில்லை.

இந்த இயக்கத்தின் தலைவர் அபுபக்கர் ஷெகாவ் முதல் முறையாக ஜனாதிபதியைக் கடுமையாக விமர்சித்துள்ளார். இந்தக் குழுவினருக்கு அல் குவைதா இயக்கத்தின் ஒரு பிரிவான இஸ்லாமிக் மெக்ரெப் பயிற்சி அளிப்பதாகத் தெரிகிறது.

## அரைக்கம்பத்தில் அமெரிக்கக் கொடி

### உத்தரவிட்டார் பராக் ஒபாமா



வொஷிங்டன் ஒக.9

அமெரிக்காவில், சீக்கியர்களின் கோவில் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர். இதற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விட ஜனாதிபதி ஒபாமா உத்தரவிட்டுள்ளார். அமெரிக்காவின் விஸ்கான்சின் மாகாணத்தில், ஓக் கிரிக் பகுதியில், உள்ள சீக்கியர் கோவிலில் கடந்த 6ஆம் திகதி நுழைந்த நபர் ஒருவர் திடீரென பக்தர்களை நோக்கி துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டார். இதில் ஆறு பேர் உயிரிழந்தனர்; பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில், அந்த நபர் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் குறித்து அமெரிக்க எப்.பி.ஐ., அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்காகக் கவலை தெரிவித்துள்ள ஜனாதிபதி ஒபாமா, விசாரணைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதாக உறுதியளித்துள்ளார். துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், எதிர்வரும் 10ஆம் திகதி வரை தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்க விட ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.

## கழுதையும் தற்கொலைத் தாக்குதல் நடத்துகின்றது

ஆப்கானிஸ்தானில் கழுதை மீது வெடிகுண்டு கட்டி அனுப்பி, தலிபான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி உள்ளனர். இதில் ஒரு பொலிஸ் அதிகாரி உயிரிழந்தார். 3 பேர் படுகாயம் அடைந்தனர். இந்தப் புதுவித தாக்குதல் உத்தியினால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஆப்கானில் தலிபான்களை ஒடுக்க அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் முகாமிட்டுள்ளன. ஆப்கான் பொலிஸார் மற்றும் ராணுவத்தினருக்கு நேட்டோ படையினர் போர் பயிற்சியும் அளித்து வருகின்றனர். இவர்கள் மீது தலிபான் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், தலைநகர் காபூலில் இருந்து 360 கி.மீ. தொலைவில் உள்ள கோர் மாகாணத்தில் உள்ள சர்சதா மாவட்டத்தில் நேற்று முன்தினம் வெடிகுண்டு வெடித்துச் சிதறியது. இதில் பொலிஸ் அதிகாரி பரிதாபமாக இறந்தார். மேலும் 3 பேர் படுகாயம் அடைந்த னர். இது குறித்துப் பொலிஸார் விசாரித்த போது, மாவட்ட ஆளுநர் அலுவலக வாசலில் கழுதை ஒன்று கட்டப்பட்டிருந்தது.

அங்கு பொலிஸ் அதிகாரி வந்த போது, கழுதை மீது கட்டப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்துள்ளது. ரிமோட் மூலம் வெடி குண்டைத் தீவிரவாதிகள் இயக்கி உள்ளனர் என்பது தெரிய வந்தது. பொலிஸார் மீது தாக்குதல் நடத்தத் தீவிரவாதிகள் கழுதையைப் பயன்படுத்தியது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



ஆப்கான் தலைநகர் காபூலில் சிற்றுண்டி வியாபாரம் செய்பவர், தீவிரவாத அச்சுறுத்தல்களினால் நகர் வெறிச்சோடியதால் நிம்மதியாக உறங்குகின்றார்.

## ரஷ்ய விண்கலம் இயந்திரக் கோளாறுக்குள்ளானது

இரண்டு செயற்கை கோள்களுடன் விண்ணில் செலுத்தப்பட்ட ரஷ்ய விண்கலம் நேற்றுமுன்தினம் இயந்திரக் கோளாறுக்குள்ளானது.

விண் வெளி ஆராய்ச்சி விடயத்தில் அமெரிக்காவுக்கு இணையாக செயல்படுகிறது ரஷ்யா. அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் ஏவிய ரோவர் விண்கலம் நேற்றுமுன்தினம் செவ்வாய் கிரகத்தை வெற்றிகரமாக சென்றடைந்தது. இதே நாளில் ரஷ்யாவின் புரோட்டான் விண்கலம், இந்தோனேயாவின் டெல்காம் செயற்கை கோள், ரஷ்யன் எக்ஸ்பிரஸ் ஆகிய செயற்கைகோள்களுடன், கசகஸ்தானில் உள்ள பைகானூர் ஏவுதளத்திலிருந்து விண்ணில் செலுத்தப்பட்டது. கடைசி நேர 'கவுண்டவுன்' நல்லபடியாக முடிந்த நிலையில் விண்ணில் சீறிப் பாய்ந்த புரோட்டான் விண்கலம் நடுவானில் இயந்திரக் கோளாறால் புவி வட்டப் பாதையை சென்றடையாமல் வீழ்ந்தது.

## அமெரிக்காவுக்கான மாம்பழ ஏற்றுமதி நிறுத்தம்

அமெரிக்காவுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்வதை, பாகிஸ்தான் வர்த்தகர்கள் நிறுத்தியுள்ளனர். உலகிலேயே அதிகமான மாம்பழங்களை உற்பத்தி செய்யும் நாடுகளில் ஐந்தாம் இடத்தையும், ஏற்றுமதி செய்வதில் மூன்றாம் இடத்தையும் வகிக்கிறது பாகிஸ்தான். ஈரான் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், அந்த நாட்டுக்கு மாம்பழ ஏற்றுமதி செய்ய இயலாத நிலை பாகிஸ்தானுக்கு ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 3 லட்சம் தொன் மாம்பழங்கள் ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. பாகிஸ்தானில் தற்போது மாம்பழ உற்பத்தி குறைந்துள்ளது. இதனால், மாம்பழ உற்பத்தியாளர்களும், வர்த்தகர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் செலவு அதிகரித்துள்ளது.

இதன்படி இரண்டு கிலோ மாம்பழங்கள் அடங்கிய பெட்டி 3,125 ரூபாய்க்கு விலையாகிறது. இதை அமெரிக்க மாம்பழப் பிரியர்களும் அதிக விலையாக நினைக்கின்றனர். இதன் காரணமாக அமெரிக்காவுக்கு மாம்பழங்களை ஏற்றுமதி செய்யும் திட்டத்தை, பாகிஸ்தான் வர்த்தகர்கள் ரத்து செய்துள்ளனர்.

## 2000 ஆண்டுகள் பழமையான கப்பல் கண்டுபிடிப்பு



சுமார் 2,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த ரோமானிய கப்பலின் பாகங்களை இத்தாலிய ஆழ்கடல் நீச்சல் வீரர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஜெனிவாவில் இருந்து 30 கி.மீ. தொலைவில் வர்சாஸ் நகரையடுத்த கடல் பகுதியில், 1930 ஆம் ஆண்டு தொடக்கம் மீனவர்கள் வலையில் கப்பலின் சிறிய பாகங்கள் சிக்கி வந்தன.

குறிப்பாக, உணவு போத்தல்கள், குடுவைகள் கிடைத்து வந்தன. அவற்றில் மீன், ஊறுகாய், வைன், எண்ணெய் போன்ற பொருள்கள் இருந்தன. இதையடுத்து இத்தாலி ஆழ்கடல் நீச்சல் ராணுவப் பிரிவினர் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் தேடுதல் வேட்டையில் இறங்கினர். அவர்களுக்கு மீனவர்களும் தகவல் கொடுத்து உதவி வந்தனர்.

தேடுதலில் நேற்றுமுன்தினம் வெற்றி கிடைத்தது. ஆழ்கடலில் மூழ்கிக் கிடந்த ரோமானியக் கப்பலை அவர்கள் கண்டுபிடித்தனர். அது உணவுகளை ஏற்றிச் செல்லும் சரக்குக் கப்பல் என்பதும், 2,000 ஆண்டுகள் பழமையானது என்றும் தெரிய வந்தது.

## மாலி இளைஞர்கள் போர்ப் பயிற்சியில் ஈடுபடுகின்றனர்

ஆபிரிக்க நாடான மாலியில் பழமைவாத முஸ்லிம்களை விரட்ட இளைஞர் குழுக்கள் போர்ப் பயிற்சி பெற்று வருகிறன.

இந்த நாட்டில் பெயரளவுக்கு ஜனநாயக ஆட்சி நடக்கிறது. ராணுவப் புரட்சி ஏற்பட்டு ஜனாதிபதியை ஆட்சி கவிழ்க்கும் வேலைகள் அடிக்கடி இடம்பெறு கின்றன. ராணுவத்துக்குள் குழு மோதல்கள் நிலவுவதால், இந்த நாட்டின் பல பகுதிகளைக் கிளர்ச்சியாளர்கள் தங்கள் வசம் வைத்துள்ளனர். நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள திம்புக்டு நகரம், முஸ்லிம் பழைமைவாதிகளின் ஆதிக்கத்தில் உள்ளது. அல்குவைதா தீவிரவாதிகளும் இந்தப் பகுதியில் ஊடுருவி, அரச படைகளுக்கு எதிராகப் பல முறை தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

திம்புக்டு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இஸ்லாமிய சட்டங்கள் கடுமையாகப் பின்பற்றப்படுகின்றன. அங்கு நிலவும் கடுமையான பழைமைவாத முஸ்லிம் நடை முறைகளுக்குப் பயந்து இங்குள்ள மக்கள் பலர், அயல் நாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

பழைமைவாத முஸ்லிம்களின் அடக்குமுறையைப் பொறுக்க முடியாத இளைஞர் பலர் ஒன்று சேர்ந்து, ராணுவ அதிகாரி தலைமையில் போர் பயிற்சி பெற்று வருகின்றனர். 'எங்கள் நாட்டில் இஸ்லாமிய சட்டங்கள் கடுமையாக இருந்ததில்லை. எங்கிருந்தோ வந்தவர்கள் இது போன்ற விதிமுறைகளைத் திணித்து எங்களை பாடாய்ப் படுத்துகின்றனர்' எனக் கொதிக்கின்றனர் மாலியின் வடக்குப் பகுதியில் உள்ள இளைஞர்கள். எனவே, 'இங்குள்ள பழைமைவாத முஸ்லிம்களை ஒழித்துக் கட்டவே, தற்போது போர் பயிற்சி பெற்று வருகிறோம்' என, இவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மினி பஸ் மீது தாக்குதல்

## ஆப்கனில் தீவிரவாதிகளின் கையோங்குகின்றது

காபூல், ஓக. 9

ஆப்கன் தலைநகர் காபூலில் மினி பஸ் மீது தலி பான்கள் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர், 5 பேர் காயமடைந்தனர்.

ஆப்கனில் நேட்டோ படையினர் 1.30 லட்சம் பேர் இருந்த போதிலும் சமீப காலமாகத் தலிபான்களின் தாக்குதல் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஜூன் மாதத்தில் மிக அதிகபட்சமாக ஒரே நாளில் ஆப்கனில் பல பகுதிகளில் 100-க்கும் அதிகமான தாக்குதல்களைத் தலிபான்கள் நடத்தியுள்ளனர். துப்பாக்கியால் சுடுவது, சாலைகளில் வெடிகுண்டுகள் வைப்பது உள்ளிட்டவை மூலம் தலிபான்கள் தாக்குதல் நடத்துகின்றனர்.

நேற்று முன்தினம் ரிமோட் மூலம் இயக்கப்படும் வெடிகுண்டை வெடிக்கச் செய்து மினி பஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இங்குள்ள பாக்மான் மாவட்டத்தில் அதிகாலை 5 மணிக்கு



இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. வெடிகுண்டு வைத்தவரை உள்ளூர் மக்களின் உதவியோடு பொலிஸார் பிடித்து விட்டதாகக் காபூல் காவல் துறை தலைவர் அயூப் சாலங்கி தெரிவித்தார்.

நகரின் மேற்குப் பகுதியில் வேலைக்குச் செல்வதற்காக மினி பஸ்ஸில் சென்றவர்கள் இந்தச் சம்ப வத்தில் உயிரிழந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.


கடந்த ஐந்து ஆண்டுகளில் இதுபோன்ற தாக்குதல் சம்பவங்களில் உயிரிழக்கும் பொதுமக்களின் எண் ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2011ஆம் ஆண்டு 3,021 பொதுமக்கள் இது போன்ற தாக்குதலில் உயிரிழந்ததாகச் சாலங்கி தெரிவித்தார்.

சாலையோரத்தில் குண்டுகளைப் பதித்து அதை வெடிக்கச் செய்யும் வழக்கத்தைத் தலிபான்கள் அதிக அளவில் பின்பற்றுகின்றனர். மிக முக்கியமான பகுதிகளில் தற்கொலைப்படையினர் மூலம் தாக்குதல்களை நிகழ்த்துகின்றனர்.

கடந்த வாரம் இதுபோல தாக்குதல் நடத்தத்திட்டமிட்டிருந்த 5 தற்கொலைப் படைத் தீவிரவாதிகளை பொலிஸார் கைது செய்தனர்.

இதன் மூலம் மிகப் பெரிய அளவிலான சதி முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் தலை நகரில் முக்கிய கட்டடங்கள் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தூதரகங்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்தது விசாரணையில் தெரிய வந்தது.

## 6,100 கோடி ரூபாவில் தயாராகிறது விண் ரக்ஸி



விண்வெளிக்கு வீரர்களைக் கொண்டு செல்லும் விண்வெளி ரக்ஸியைத் தயாரிக்கத் தனியார் நிறுவனங்களுக்கு நாசா ஆய்வு நிறுவனம் 19,250 கோடி ரூபா வழங்கியிருக்கிறது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா 35 ஆண்டுகளாக விண்வெளிக்கு விண்கலங்களை அனுப்பி வருகின்றது. என்டர்பிரைஸ், கொலம்பியா, சேலஞ்சர், டிஸ்கவரி, அட்லான்டிஸ், எண்டோவர் ஆகிய விண்கலங்கள் அனுப்பப்பட்டு வந்தன.

இந்த விண்கலங்கள் பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால் இவற்றுக்கு ஓய்வு கொடுக்கப்படுவதாக நாசா சில ஆண்டுகளுக்கு முன்பு அறிவித்தது. 2010ஆம் ஆண்டு முதல் இந்த ரக விண்கலங்கள் இயக்கப்படாது எனவும் அறிவிக்கப்பட்டது. இந்த முடிவு சிறிது காலம் ஒத்திவைக்கப்பட்டது. அட்லான்டிஸ் விண்கலம் கடந்த ஆண்டு ஜூலை 8ஆம் திகதி தரையிறங்கியது. இதுதான் விண்கலத்தின் கடைசிப் பயணம் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வீரர்களை அழைத்துச் செல்லும் வகையில் புதுவித வாகனம் (விண்வெளி டாக்சி) தயாரிக்க நாசா 19,250 கோடி ரூபாய்களை ஒதுக்கியிருக்கின்றது. போயிங், ஸ்பேஸ் எக்ஸ், சியரா நெவாடா ஆகிய நிறுவனங்களுக்கு இந்தத் தொகை வழங்கப்பட்டுள்ளது. போயிங், ஸ்பேஸ் எக்ஸ் ஆகிய இரு நிறுவனங்களும் விண்வெளி ஓடங்கள், கேப்சூல்கள் தயாரித்து வருகின்றன. விண்கலம் போல் செங்குத்தாகப் பறந்து சென்று, விமானம் போல பக்கவாட்டில் தரையிறங்கும் வகையை சேர்ந்த ட்ரீம் சேஸர் விண்வெளி விமானத்தை சியரா நெவாடா உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# நேபாளப் பாடசாலைகளுக்கு ஆங்கில பெயர் வைக்கத் தடை

நேபாளத்தில் உள்ள பாடசாலைகளுக்கு, ஆங்கிலப் பெயர்களை வைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் பெரும்பாலான தனியார் பாடசாலைகள் வெளிநாட்டு நிதியுதவியுடன் இயங்குகின்றன. இதனால், அந்தப் பாடசாலைகள் வெளிநாட்டுப் பெயர்களில் செயற்படுகின்றன. அதுமட்டுமல்லாது, ஆங்கிலப் பெயர்களில் அமைந்த பாடசாலைகளில் படிப்பதை மக்கள் விரும்புகின்றனர், இதனால் பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை அது போன்ற பாடசாலைகளில் தான் சேர்க்கின்றனர். நேபாளத்தில், 250இற்கும் அதிகமான உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பாடசாலைகள் ஒக்பிரிட்ஜ், வைட் ஹவுஸ், நாசா போன்ற பெயர்களில் இயங்குகின்றன. இது போன்ற பெயர்களை நீக்கவிட்டு நேபாளக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில், பாடசாலைகளின் பெயர்களை மாற்றும் படி, கல்வி அமைச்சகம் உத்தரவிட்டிருந்தது. கல்வி அமைச்சகத்தின் உத்தரவை எதிர்த்து, ஆங்கிலப் பெயர் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.


**கார் விற்பனைக்கு உண்டு**

MARUTHI ZUZUKI
ALTRO SPORT

**மாருதி சுசிக்கி நீல நிற கார் முதலாவது உரிமையாளரின் பாவனை யில் உள்ளது. லீசிங்குடன் விற் பனைக் குண்டு.**

தொடர்பு: 071 635 7267

(சி/2176)(5-6)

**TRACTOR FOR SALE**

MESSEY FERU GUSON-135
(Fully Original Condition) with
TAILOR. No- 49xxxx, No Brokers

**Conduct No. : 077 960 9121**
**077 757 0141**

(21439)(5-6)

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும்**
**நன்றி நவிலலும்**

**திருமதி ஜீவமணி விஜயராசசிங்கம்**



**தோற்றம்** **26.10.1930**

**மறைவு** **10.07.1912**

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்டிருந்த
ஜீவமணி விஜயராசசிங்கம் அவர்களின்
31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் தொடர்புகொண்டு ஆறுதல் கூறியோருக்கும், மரணச் சடங்குகளில் கலந்தகொண்டவர்களுக்கும் மற்றும் நேரில் வந்து அஞ்சலி செலுத்திய யா/ மல்லாகம் மகாவித்தியாலய அதிபர், மாணவர்கள் ஆகியோருக்கும் வேறு பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஏ.சீ. விஜயராச சிங்கம்** (J.P)
(கணவர்),
**இ. செல்வகுமார்**
(மருமகன்)
**திருமதி செல்வகுமார் ஞானாம்பிகை**
(பெறாமகள்)

நீதிமன்ற வீதி,
மல்லாகம்,

(21254) (45.6) (21106) (45-6-7)



மாவையாதீனம்

**மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்**

**ஆடிக்கார்த்திகைத் திருவிழா**

காலம்:- 10.08.2012 வெள்ளிக்கிழமை

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் ஆடிக்கார்த்திகைத் திருவிழா ஆடிமாதம் 26 ஆம் நாள் 10.08.2012 வெள்ளிக்கிழமை அபிஷேகம் பூசை ஆராதனை திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறும். அத்தருணம் மெய்யன்பர்கள் மாவைக்கந்தன் ஆலயத்துக்கு வருகைதந்து விழாக்களில் கலந்து மாவிளக்கு, நெய்தீபம் ஏற்றி அர்ச்சனை ஆராதனைகள் செய்து நேர்த்திக்கடன்களைப் பூர்த்தி செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மாவைக் கந்தன் திருவருள்பெற்று குடும்பசகிதம் ஆனந்தமாய் இன்ப வாழ்வுவாழப் பிரார்த்தித்து வரவேற்கிறேன்.

பூசை, அர்ச்சனை, மாவிளக்குப் பொருள்கள்
ஆலயத்தில் கிடைக்கப்பெறலாம்.

காலை மணி 6.00 உஷக்காலப் பூசைகள்
9.00 காலைச்சந்தி பூசைகள்
10.45 ஸ்நபனாபிஷேகம்
11.45 உச்சிக்காலப்பூசை
நண்பகல் மணி 12.00 வசந்தமண்டபபூசை, கார்த்திகைக் குமரன் வீதியுலா
மாலை மணி 1.00 மகேஸ்வர பூசை, அன்னதானம்
5.00 அபிஷேகம்
5.30 சாயரட்சைபூசை, இரண்டாம்கால பூசை
5.45 வசந்தமண்டப பூசை தொடர்ந்து மாவைக் கந்தன் வெளி வீதியுலா
7.30 அர்த்தஜாமபூசை, பிரசாதம் வழங்குதல்

மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதி குருக்கள், மாவையாதீனகர்த்தா
**கார்த்திகைத் திருவிழா உபயகாரர்கள்**

(20691)(2-6-7)

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(17)

இந்த உறுதி ஏற்பட்டுவிட்டால் கடினமாக உழைக்கின்ற மனோபாவம் தானாகவே ஏற்பட்டுவிடும் .

உழைப்பு ஒரு போதும் வீண்போவதில்லை. முயற்சிகளின் போது தளர்ச்சி அடையக்கூடாது. எந்த உழைப்பையும் உற்சாகமாக மேற்கொண்டால் தளர்ச்சி தோன்றாது . செய்யுந் தொழிலே தெய்வம் என்கிற எண்ணம் வரவேண்டும் .

எடுத்த எடுப்பிலேயே பெரிய சாதனைகள் நிகழ்ந்து விடுவதில்லை . குடகு நாட்டில் காவேரி நதி உற்பத்தியாகின்ற இடத்தில் அதன் அகலம் ஒரு ஆடு தாண்டி விடக் கூடிய அளவே இருக்கிறது .ஆனால் அதே காவேரி திருச்சியை அடைகின்ற போது, மிக அகன்று வெள்ளப் பெருக்குடன் காட்சி தருகிறது .

வாழ்க்கையும் நதியைப் போன்றது தான். தொடர்ந்து உழைக்கும் போது வளம் பெருகுகிறது . வாழ்க்கை வசதிகள் அதிகரிக்கின்றன. செல்வம் செழிக்கத் தொடங்குகிறது. இவையனைத்தும் மனம் உறுதியுடன் தொடர்ந்து செயற்படும் போது தான் சாத்தியமாகின்றன.

எண்ணங்கள் வலிமையாக இருந்தால் நம்மால் எதையும் சாதிக்கமுடியும். உற்சாகத்துடன் இருங்கள். ஊக்கத்துடன் செயற்படுங்கள். சோதனைகளைச் சந்திக்கப் பயப்படாதீர்கள். உங்களுக்கு ஏற்படும் சோதனைகளை வாழ்க்கையின் திருப்பங்களாக மாற்றிக் கொண்டுவிட உங்களால் முடியும்.

மற்றவர்களைச் சந்திக்கும் போது அன்புடன் பழகுங்கள். தன்னம்பிக்கையும், மற்றவர்கள் மீதான நம்பிக்கையும் மலைகளைக்கூட புரட்டி விடும் சக்தி வாய்ந்தவை.

வளமான சிந்தனைகள் மனதை நிரப்பும் போது, வாழ்க்கையிலும் பல சாதனைகள் நிகழ்கின்றன.ஆரம்பம் எப்படியும் இருக்கலாம். முடிவு சிறப்பானதாக அமைகிறதா என்பது தான் கேள்வி.

சாதாரண ஆரம்பத்தைச் சிறப்பான முடிவுகளுக்குக் கொண்டு வர உங்கள் எண்ணங்களே உங்களுக்குத் துணை புரிகின்றன. நல்ல எண்ணங்கள் நல்லவற்றையே செய்யும் . வலிமையான எண்ணங்கள் வாழ்க்கைக்கு பலம் சேர்க்கும். இதை நீங்கள் உறுதியாக நம்பலாம்.

**தோல்விகள் வெறும் கற்பனைகளே!**

சாதாரணமாக வெற்றி என்றும் தோல்வி என்றும் இரண்டு விஷயங்களைக் குறிப்பிடுகிறோம். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் வெற்றியும், தோல்வியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை போலவே தோன்றும். ஆழமாகச் சிந்தித்தால் இவை வெறும் தோற்றங்களே தவிர, உண்மைகள் அல்ல என்பது விளங்கும்.

வெற்றி என்பது என்ன என்று பார்க்கலாம். நாம் நினைத்தது நினைத்தபடியே நடந்துவிட்டால் அதை வெற்றி என்கிறோம். நாம் நினைத்தபடியே நடக்கவில்லை என்றால் தோல்வி என்கிறோம். அதாவது விளைவுகள் என்ன என்பதை ஒட்டி அவற்றுக்கு நாம் கொடுக்கின்ற பெயர்களே இவை.

அதனால் உண்மையில் தோல்விகளென்று எதாவது இருக்கிறதா என்று பார்த்தால், உண்மையில் அப்படி எதுவும் இல்லை என்றே தோன்றுகிறது. உதாரணமாக நீங்கள் ஒரு தொழிலை ஆரம்பிக்க விரும்புகிறீர்கள். அதற்குத் தேவையான முதலீடு உங்களிடம் இல்லை என்று வைத்துக்கொள்வோம். அதைப் பெறுவதற்கு நீங்கள் முயற்சி செய்கிறீர்கள். முயற்சி செய்தும் அது கிடைக்காவிட்டால் தோல்வி ஏற்பட்டுவிட்டதாகச் சொல்லுகிறீர்கள்.

இது உண்மையில் தோல்விதானா? முதலீடு கிடைப்பது உங்கள் முயற்சி. அது வெற்றி பெறாமல் போவது உண்மையே. அதற்காக இனி எந்தச் சந்தர்ப்பத்திலும் முதலீடு கிடைக்காது என்கிற முடிவுக்கு நீங்கள் வரவேண்டிய அவசியம் என்ன வந்தது?

உங்களுடைய சில முயற்சிகள் வெற்றிபெறவில்லை என்பதை வேண்டுமானால் ஒப்புக்கொள்ளலாம். ஒரு வேளை தவறான எண்ணங்களில் நீங்கள் முயன்று இருக்கலாம். அல்லது உங்களுடைய முயற்சி போதுமானதாக இல்லாமல் இருக்கலாம்.

முதலீடு கிடைப்பதில் தோல்வி ஏற்பட்டு விட்டது என்கிற முடிவுக்கு நீங்கள் வந்துவிட்டால், பிறகு முதலீடு கிடைப்பதற்கான முயற்சிகளில் நீங்கள் ஈடுபடமாட்டீர்கள். இதுவரை நீங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகள் வெற்றிபெறவில்லை என்று மட்டும் நீங்கள் கருதுவீர்களானால், முயற்சிகள் ஏன் வெற்றியைப் பெற்றுத்தர தவறின என்பதைப் பற்றி யோசிக்க ஆரம்பிப்பீர்கள்.

ஒரு காரியம் நடக்காத போது, அது இனி எப்போதும் நடக்காது என்கிற முடிவுக்கு நாம் வருவது புத்திசாலித்தனமாகாது. அந்தக் காரியம் ஏன் நடக்கவில்லை, நம்முடைய முயற்சிகளில் என்ன குறைகள் இருந்தன என்றெல்லாம் ஆராயும்பொழுது பல உண்மைகள் நமக்கு விளங்க ஆரம்பிக்கும்.

அப்போது நம்முடைய முயற்சியில் நாம் தோற்றுவிட்டோம் என்கிற எண்ணம் வராது. முயற்சிகளில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து புதிய முயற்சிகளைத் தொடங்க வேண்டும் என்கிற தெளிவு பிறக்கும்.

ஆகவே தோல்வியடைந்துவிட்டதாக நாம் எண்ணுகின்ற போது நம்முடைய செயல்களைப் பற்றிய பரிசோதனைகளில் இறங்கவிடாமல் அது தடுத்து விடுகிறது. ஆதலால் எதையும் தோல்வியாக எண்ணாமல், வெற்றிபெறத் தவறிவிட்டோம் என்று மட்டுமே எண்ணி, அதற்கான காரணங்களைக் கண்டுபிடிக்க நாம் பழகிக்கொள்ள வேண்டும்.

இந்த அடிப்படையில் நாம் ஆராய்ந்தால், எவற்றை நாம் தோல்விகள் என்று நினைக்கிறோமோ, அவை வெற்றிப் பாதையின் சில நிலைகள்தான் என்று விளங்க ஆரம்பிக்கும்.

முதலீடு பெறும் விஷயத்தை எடுத்துக் கொள்வோம். நாம் தவறான மனிதர்களை அணுகியதால்தான் அது கிடைக்காமல் போனதா? என்று பார்க்க வேண்டும்.

-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த உடன் நடவடிக்கைகள் தேவை

## உலக சுகாதார திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.9

யாழ். மாவட்டத்தில் வீதி விபத்துக்கள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த உரிய தரப்புகள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**வீதி விபத்துக்களால் அநாவசியமாக உயிரிழப்புக்களையும், அங்கவீனர்களையும் . உருவாக்காதபடி உரிய தரப்பினர் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்**

வீதி விபத்துக்கள் அதிகரித்துக் கொண்டே செல்வதால் தேவையற்ற சொத்திழப்புகள், குறிப்பாக உயிரிழப்புகள் உண்டாவதுடன் மாற்று வலுவுடையவர்களைக் கொண்ட சமூகத்தை எதிர்கொள்ள வேண்டிய சூழல் உருவாகிக் கொண்டிருக்கிறது என்று உலக சுகாதார திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி என்.சிவராசா தெரிவித்தார்.

துளிர்கள் நிறுவனத்தின் எட்டாவது ஆண்டு நிறைவு விழாவும், குறுந்திரைப்பட வெளியீட்டு விழாவும் கடந்த 5 ஆம் திகதி நாவலர் வீதி தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தும் போதே சிவராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்ட மக்கள் மத்தியில் தற்போது அதிகரித்துள்ள பிரச்சினை வீதி விபத்துக்கள். இந்த வீதி விபத்துக்களை வயது வேறுபாடின்றி பலரும் சந்திக்க நேரிட்டுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலையில் வீதி விபத்துக்களால் சிகிச்சை பெறுவோர் உடல் அங்கவீனமடையக் கூடிய துர்ப்பாக்கியமான நிலையையும் சந்திக்கின்றனர்.

இதனால் தற்போது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவையுள்ளது. பொலிஸார் வீதி விபத்துக்கள் இடம்பெற்ற பின்னரே நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இதனால் மக்களுக்கு கிடைக்கப் போவது என்ன? விபத்துக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

முன்பெல்லாம் பாடசாலைகளில் வீதி விப்த்துக்களைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டு வந்தமையை அவதானிக்க முடிந்தது.

ஆனால் தற்போது அவ்வாறு எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் இவற்றை வைத்திருக்கும் நபர்களைத்தான் வீதிகளில் தடுத்து சோதனை செய்கிறார்கள். வேகக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துவதாக இல்லை. வீதி நடைமுறைகள் தொடர்பாக சரியாக அறிந்து கொள்ளாதவர்கள்தான் அதிகமான வீதி விபத்துகளுக்குள்ளாவதை அவதானிக்க முடிந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய தேவை வீதி விபத்துக்களைக் கட்டுப்படுதுவது தான். இதனை பொலிசாரால் மட்டுமே மேற்கொள்ள முடியும். மக்கள் மத்தியில் விழிப்புணர்வு கொண்டு வந்து வீதி ஒழுங்குகளைப் பின்பற்ற அறிவுறுத்தல் செய்யவேண்டும்.

வீதி விபத்துக்களால் அநாவசியமாக உயிரிழப்புக்களையும், அங்கவீனர்களையும் உருவாக்காதபடி உரிய தரப்பினர் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (எ-14)




நல்லூர் உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்கா மணி மண்டபத்துடன் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கில் திருமதி சிவரஞ்சினி ரமணாவின் இசைக் கச்சேரியைக் காணலாம். (எ-7)

# இலக்கியத்திறன் பரீட்சை முடிவுகள்

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் திருக்குறள் தமிழ் இலக்கியத் திறன் பரீட்சை முடிவுகள் வருமாறு:-

**ஊக்கப் பரிசு பெறுவோர்**

மு.கயாலினி- திருவையாறு உ.நி.ப, சி.ரிதுயா, த.எழில்வாணி, வி.மிதுசா-கிளி இந்துக் கல்லூரி, சு.அரச்சனா, இ.லோயினி, க.கோபிகா-கிளிநொச்சி உ.நி.ப , இ.சங்கீர்த்தனா, ச.கச்தூரி-உருத்திரபுரம் உ.ப.நி, க.சபிசிகா-முருகானந்தா கல்லூரி, யெ.பூவள்ளல்-பரந்தன் இந்து உ.ப.நி , க.அபிநயா- பளை மத்திய கல்லூரி

பிரிவு "ஈ"

ந.அபிராமி (திருவையாறு உ.நி.ப), தி.ருசாந்தி (புனித பற்றிமா றோ.க.த.க.பா) யோ.சதனிகா (உருத்திரபுரம் உ.நி.ப), பு.டனோயன் (கிளி. மத்திய கல்லூரி), ஜெ.துபாகரன் (கிளி. மத்திய கல்லூரி) (தொடரும்)

# இன்று பட்டதாரிகளிடம் காணமுடியாத தமிழ் அறிவை அன்று கோயில்களில் பயின்றவர்களிடம் காணமுடிந்தது

## யாழ். மாநகரசபை ஆணையாளர் கருத்து

யாழ்ப்பாணம், ஓக.9

இன்றைய பட்டதாரிகளிடம் காணமுடியாத தமிழ் அறிவை அன்று கோயில்களில் பயின்ற சாதாரண மக்களிடம் காணமுடிந்தது. சமூகப் பணியிலும் தமிழிலும் அன்றைய மக்கள் சிறந்து விளங்கினர். எனவே அதற்குக் காரணமாக இருந்தது எமது ஆலயங்களே என்று யாழ்.மாநகரசபை ஆணையாளரும் மாநகரசபை சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சைவசமய விவகாரக் குழுவின் நல்லூர் கந்த சுவாமி கோயில் உற்சவகால வெளியீடான நல்லைக்குமரன் மலர் - 20 வெளியீடும் யாழ். விருது வழங்கும் நிகழ்வும் கடந்த திங்கட்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் ஆணையாளர் பிரணவநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

1993 முதல் நல்லைக்குமரன் மலர் வெளிவந்து கொண்டிருக்கிறது. எமது செயற்பாடுகளில் சில தாமதங்கள் ஏற்பட்டாலும் நல்லைக் குமரன் மலர் வெளியிடுவதில் எந்தச் சந்தர்ப்பத்திலும் தாமதங்கள் நிகழ்ந்ததாக இல்லை. அந்த அளவுக்கு முருகப் பெருமானின் உற்சவ கால வெளியீடான இதற்கு எமது அனைத்து உத்தியோகத்தருமே உதவுகின்றனர்.

மாநகர சபை இன்று சிறந்த சேவைக்கான யாழ்.விருதை அமுதசுரபி அன்னதான சபைக்கு வழங்குகின்றது. சைவசமய விவகாரக் குழு சகல வழிகளிலும் ஆராய்ந்து எடுத்த முடிவு இது. அன்னதான சபையின் பணி மேலானது. அதற்கு இந்த விருது வழங்கத் தீர்மானித்தமை அனைவருக்குமே மகிழ்ச்சி தருகின்றது.

தமிழ் மரபுக்கும் சமூகத் தொண்டுக்கும் கோயில்கள் பெருமளவு பங்களிப்பு வழங்கி வந்துள்ளன. போரின் பின் இப்போது சமயப்பணியுடன் சமூகப் பணியையும் அவைகள் முன்னெடுத்து வருகின்றன. ஒவ்வொரு சிறிய கோயிலும் சிறிய அளவில் தொண்டாற்றினாலும் கூட அதுவே நாட்டுக்கு பலமாகும்- என்றார்.

(எ-7)

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598317, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## நீதி விசாரணை வேண்டும்

வவுனியா சிறையில் இடம்பெற்ற கலவரத்தை 'அடுத்து வைத்தியசாலையில் கோமா நிலையில் இருந்து வந்த தமிழ் அரசியல் கைதி உயிரிழந்துள்ளார். நிமலரூபனைத் தொடர்ந்து சிறைக் கலவரத்தில் பலிகொள்ளப்பட்ட இரண்டாவது நபராகியிருக்கிறார் டில்ருக்ஷான்.

சிறை அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல் காரணமாகவே நிமலரூபன் இறந்து போனார் எனவும், டில்ருக்ஷான் கோமா நிலைக்குச் சென்றார் எனவும் எதிர்க் கட்சிகளும், மனித உரிமைகள் அமைப்புகளும் குற்றஞ்சாட்டுகின்றன.

தனது மகனின் கை, கால்கள் அடித்து முறிக்கப்பட்டிருந்தன என்றும், அப்படி இருந்தபோதும் அவன் மாரடைப்பால் இறந்தான் என்று தன்னிடம் நிர்ப்பந்தித்துக் கையெழுத்து வாங்கியிருந்தனர் என்றும் நிமலரூபனின் தாயார் தெரிவித்திருந்தார். அவரது சோகம் தீர்வதற்கு இடையிலேயே, கோமாவிலிருந்த டில்ருக்ஷானின் உயிர் பிரிந்த துயரச் செய்தி வந்திருக்கிறது. அதிகாரிகளால் மிக மோசமாகத் தாக்கப்பட்டதனாலேயே டில்ருக்ஷானின் இறப்பும் ஏற்பட்டதென குற்றஞ்சாட்டுண்டு.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து இது வரையில் எந்தவிதமான விசாரணைகளும் நடத்தப்படவில்லை. அரச பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் அடிகாயங்களுடன் இறந்திருக்கிறார் என்றும் மற்றும் பல கைதிகள் காயப்பட்டிருக்கிறார்கள் என்றும் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டு குறித்து ஒரு சமாதானத்துக்குத்தானும் விசாரணை நடத்தத் தவறி இருக்கிறது அரசு.

நிமலரூபனின் இறப்புக் குறித்து கரிசனை காட்டிய அரசியல் கட்சிகளும், மனித உரிமை அமைப்புகளும்கூட இதுவரையில் வவுனியா சம்பவம் குறித்து நீதியான சுயாதீனமான விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று அழுத்தமாகக் குரல் கொடுக்கவில்லை. ஆங்காங்கே சிறிய அளவில் சில போராட்டங்கள் நிமலரூபன் கொலை தொடர்பில் இடம்பெற்றுள்ளன. அரசியல் கட்சிகள் அவற்றை ஒழுங்கு செய்திருந்தன. சிறைச்சாலைச் சம்பவத்துக்குக் கண்டனம் தெரிவிப்பதுடனும், அதற்காக அரசுக்கு அடையாள எதிர்ப்பைத் தெரிவிப்பதுடனும் அந்தப் போராட்டங்கள் முடிவுக்கு வந்து விட்டன.

வவுனியா சிறைச் சாலையில் அரச பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த இரு கைதிகள் இறந்து போயிருக்கிறார்கள். மற்றொரு கைதி அண்மையில் வவுனியா நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். எழுந்து நடக்க முடியாத வகையில் அவர் சக்கர நாற்காலியிலேயே முடங்கிக் கிடக்க வேண்டியவராக இருக்கிறார். இவை எல்லாம் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களையும், இலங்கை அரசு ஏற்றுக்கொண்ட ஐ.நா. பிரகடனங்களையும் மீறும் செயல்கள்தான். ஆனாலும் அவை குறித்து நீதியான, சுயாதீனமான விசாரணை ஒன்றுக்கான அழுத்தம் போதியளவில் தரப்படவில்லை.

தமிழ் மக்களின் விடிவுக்காக என்று சொல்லிக் கொண்டு அரசில் அங்கம் வகிக்கும் தமிழ் அமைச்சர்களும்கூட இது விடயத்தில் அக்கறையின்றியே செயற்படுகிறார்கள். தங்கள் பதவிகளுக்காக இவர்களும் தங்கள் அரசியலுக்காக மட்டும் எதிர்க் கட்சிகளும் [தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட] செயற்படும் வரைக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப்போவதில்லை.

எனவே இனியாவது இந்த விடயத்தில் கவனம் செலுத்தி வவுனியா சிறைச்சாலைக் கலவரம் குறித்து நீதியான, சுயாதீனமான விசாரணை ஒன்றை நடத்த அனைத்துத் தரப்பினரும் அழுத்தம் கொடுக்க வேண்டும். அதன் மூலம் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்களைக் குறைப்பதற்காவது முயற்சிக்கலாம்.

புதினப்பலகை இணையத்தளம் சிவில் சமூகத்துக்குத் தனது தளத்தின் மூலம் எழுதியுள்ள கடிதம் இது.

# தமிழ் சிவில் சமூகத்துக்கான கடிதம்

மிகவும் மோசமான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், தனிமனிதர்களுக்கும் குழுக்களுக்கும் எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அராஜகங்கள் ஆகியவற்றினையும் தாண்டி சமூகத்திற்காகக் குரல்கொடுக்க முன்வந்துள்ள வடக்கு கிழக்கினைச் சேர்ந்த தமிழ் சிவில் செயற்பாட்டாளர்களுக்குப் 'புதினப்பலகை'யின் வாழ்த்துக்கள்.

ஆயிரம் பூக்கள் பூத்துக் குலுங்க வேண்டுமென்பதும், அவை ஒரே வகையினதாக இல்லாமல் பூத்திட வேண்டுமென்பதே 'புதினப்பலகை'யின் விருப்பமுமாகும்.

ஆனால், கடந்த முப்பதாண்டுகளாகப் போரும், அதனை முன்னின்று நடத்தியவர்களும் சமூகத்தின் குரலினை ஒற்றைக்குழல் துவாரத்தின் ஊடாக வெளியேற அனுமதித்திருந்த படியினால் சிவில் சமூகத்தின் குரலும், அதன் செயற்பாடுகளும் முற்றாக கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. தேவைப்படின், அதிகாரத்தினைக் கொண்டிருந்தவர்களின் முடிவுகளினைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகவே சிவில் சமூகத்தினை அனுமதித்துமிருந்தனர். இன்றும் அந்த நிலை மாறவில்லை.

போருக்குப் பின்னான நிலையில், இராணுவ மயப்படுத்தப்பட்ட நாளாந்த வாழ்க்கைச் சூழலில் சிவில் சமூகத்தின் தலைமையிலான வழிகாட்டுதலும், சமூகத்தின் எண்ணங்களினையும், பிரச்சனைகளினையும் முன்னிறுத்திய செயற்பாடுகளும் மிகவும் அவசியமானவை. அந்த வகையில், உங்களது கூட்டிணைந்த செயற்பாடுகளினை போரால் சீரழிக்கப்பட்டுள்ள சமூகமும், முகமிழந்து போயுள்ள மக்களும் எதிர்பார்த்துள்ளனர்.

காகிதப் பூனையால் ஒருபோதும் எலியைப் பிடிக்க முடியாது என்னும் கூற்றினை மக்கள் அறிந்திருக்கின்றனர். அறிவார்ந்த தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளர்களாகிய நீங்களும் தெரிந்திருப்பீர்கள்.

அந்தவகையில், கடந்த காலத்தில் உங்களின் முயற்சிகளினை இரண்டு அறிக்கைகள் ஊடாக மட்டுமே அறிய முடிகிறது. அத்துடன், இந்த இரண்டு அறிக்கைகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்கின்ற அரசியல் கட்சிக்கு விடப்பட்ட திறந்த வேண்டுகோள்களாகவே உள்ளன. ஒரு வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியற் கட்சியினை நோக்கி வீசப்பட்ட குற்றப்பத்திரிகையின் இன்னுமொரு படிமமாகவே உணரவும் முடிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனக்குள் பல அகமுரண்பாடுகளினையும், புறமுரண்பாடுகளினையும் கொண்டதாகத் தன்னைத் தக்கவைக்க போராடிக்கொண்டிருக்கின்றது என்பது மறுக்கமுடியாத யதார்த்தமாகும். எனினும் அந்தக் கட்சியின் இருப்பும் பலமும் இன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கு மிக மிக அவசியமானது.

ஆதலால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை வெற்றிகரமாக முன்னகர்த்துவது என்பது அந்தக் கட்சியுடன் நெருங்கி இணைந்து செயற்படுவதன் மூலமும், அதன் மக்கள்தளத்தினைப் பலமாக வளர்த்தெடுப்பதன் மூலமும் மட்டுமே சாத்தியமாகும்.

மாறாக புறநிலையில் நின்றுகொண்டு ஊடகங்களுக்கு அறிக்கை விடுவது அந்தக் கட்சியின் மீது மக்கள் கொண்டிருக்ககூடிய குறைந்தபட்ச நம்பிக்கையினைக் கூட தகர்த்தெறியும் முயற்சியாகவே புரியமுடியும்.

நமது இருப்பானது பலவீனமாக உள்ள நிலையில் மாற்றுத் தெரிவென்னும் மாயமான் தேடி நேரத்தை வீணடிப்பதென்பது, வடலி வளர்த்து கள் குடிக்கலாம் எனக் கனவு காண்பவர்களின் நிலைக்கு ஒப்பானதாகவே அமைந்துவிடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் மக்களாலோ அல்லது உங்களைப் போன்ற சிவில் சமூகக் குழுக்களாலோ அணுகமுடியாத தூரத்திலோ, பாதுகாப்பு அரண்களுக்கு அப்பாலோ, நிலக்கீழ் அறைகளுக்குள் முடங்கியவர்களாகவோ இல்லை என்பதனை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள். கடந்த காலத்தில் அத்தகைய நெருக்கமான கலந்துரையாடல் ஒன்றினைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் உங்கள் பிரதிநிதிகள் வவுனியாவில் மேற்கொண்டிருந்தீர்கள்.

தங்கள் சார்பாக அறிக்கைகள் ஒரு குறிப்பிட்ட அரசியற் கட்சியினை நோக்கியதாக வெளியிடப்படுவது பல கேள்விகளினைத் தோற்றுவிக்கின்றது. அதற்காக ஏனைய அரசியல் கட்சிகளினையும் நோக்கி அறிக்கை விடும்படி கூறுவது புதினப்பலகையின் நோக்கமல்ல.

ஆனாலும், உங்கள் அறிக்கைகளில் ஒப்பமிட்டுள்ள சமூகம் சார்ந்த உங்களது அக்கறையினையும், சிவில் சமூகம் என்ற அடையாளத்தினையும் வேறு சில தனிநபர்களோ, குழுவோ, கட்சியோ, அமைப்போ தங்களது மறைவான நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கவைக்கும் அபாயம் இல்லை என்பதனையும் மறுக்கமுடியாது.

சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் பணிகளும், பரப்பெல்லையும் காலத்திற்குக் காலம் தங்களின் செயற்பாடுகளினையும், கொள்கைகளினையும் மாற்றிக்கொள்ளும் அரசியல் கட்சிகளின் நடைமுறைக்குப் புறம்பானவை.

அரசியல் கட்சிகள் எப்பொழுதும் ஏனைய கட்சிகளினை எதிர்க்கும், அவர்களைக் கண்டனம் செய்யும் தளத்திலேயே தங்களினை இலகுவாகத் தக்கவைத்துக்கொள்ள முயற்சிக்கின்றன.

ஆனால், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பரந்துபட்ட தளத்தில் மக்களின் அடிப்படை உரிமைகளினைப் பாதுகாப்பதற்காகவும், அவற்றினை முன்னிலைப்படுத்தி உரிய நிறுவனங்களுடன் பேசுவதன் மூலம் அவற்றினை மக்களுக்கு உறுதிசெய்வதிலும் நடைமுறை வெற்றியினை அடையப் போராடுகின்றன.

இன்றைய நிலையில், போரின் பின்னரான காலகட்டத்தில் வடக்கு கிழக்குப் பிராந்தியத்தில் வாழும்மக்களின் அடிப்படைப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார தேவைகளினை அரசியல் கட்சிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் சுதந்திரமாக முன்னெடுப்பதற்கும், அவை தொடர்பாகப் புலமைசார் விவாதங்களை உருவாக்கி முன்னகர்த்துவதற்கும் சிவில் சமூகத்தின் தலைமைத்துவம் மிகவும் அவசியமாகியுள்ளது. உதாரணமாக சிலவிடயங்களைக் குறிப்பிடலாம்.

01. தாமதித்து செல்லும் மீளக்குடியமர்வு செயற்பாடுகள்.

02. இந்திய உதவியுடன் திட்டமிடப்பட்டுள்ள 50000 வீடுகளை அமைக்கும் திட்டத்தில் காணப்படும் தடைகளும், தாமதங்களும்.

03. மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் மீனவருக்கான பாஸ் நடைமுறை.

04. அதிகரித்துச் செல்லும் சமூகக் குற்றங்களும், அதனைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளும்.

05. மதவழிபாடு, பண்பாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களும், வன்முறையும்.

06. கல்வித்தரங்களில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியும், அதனை எதிர்கொள்வதற்கான தெரிவுகளும்.

07. புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையானோரை சமூகத்துடன் மீளிணைப்பதில் உள்ள சவால்களும், அவர்களின் பாதுகாப்பும்.

08. நடைபெற்றுக்கொண்டிருக்கும் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தித் திட்டங்களில் காணப்படக்கூடிய குறைப்பாடுகள், பொருத்தமின்மைகள், விரயங்கள்.

09. வலுவிழந்து போகும் சட்டத்தின் ஆட்சியினை மீள உருவாக்குதல்.

10. போர், நீண்ட இடப்பெயர்வு ஆகியவற்றினால் சிதைந்து போயுள்ள சமூகப் பாதுகாப்புப் பொறிமுறையினை மக்கள் மத்தியில் திரும்பவும் கட்டியெழுப்புதல்.

இது போன்ற இன்னோரன்ன விடயங்களினைக் கையாள்வதற்குப் புலமைசார் அறிவு, மற்றும் பட்டறிவுடன் கூடிய சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் தலைமைத்துவம் இன்று வடக்கிலும், கிழக்கிலும் அவசியமாக உள்ளது.

அத்துடன் தற்போது குறுகிய அரசியல் இலக்குகளுக்காக 'மன்னாரில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையான முரண்பாடுகளும், வளங்களைப் பகிர்வதில் ஏற்பட்டுள்ள போட்டியும் அரசியல் கட்சிகளின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் பேசித் தீர்வு காணப்பட வேண்டியுள்ளது.

இதற்காகத் தமிழ் முஸ்லிம் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும், புத்திஜீவிகளும் ஒன்றாக அமர்ந்து பேசுவது அவசரமாகவுள்ளது. இவை எல்லாம் உங்களைப் போன்ற தனிநபர்களாலும் ஆர்வலர் குழுக்களாலும் மட்டுமே சிறப்பாக முன்னெடுக்கமுடியும்.

மக்களது அடிப்படையான பிரச்சனைகளைக் கையாள்வதற்காக அரசியல் கட்சிகள் பயன்படுத்தும் மொழிக்கும், அணுகுமுறைக்கும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் பயன்படுத்தும் மொழிக்கும் தெளிவான வேறுபாடுகள் உண்டு.

வடக்கு கிழக்கினைச் சேர்ந்த தமிழ் சிவில் செயற்பாட்டாளர்களினால் கடந்த காலத்தில் வெளியிடப்பட்ட இரண்டு அறிக்கைகளும் தங்களது சிவில் சமூகத்தினது வரையறைகளினைத் தாண்டியதாக இருந்தது. இது ஒரு ஆரோக்கியமான சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் மிகவும் சுதந்திரமான செயற்பரப்புத் தளத்தினைப் பாதிக்கும்.

தமிழ்மக்களின் அரசியலினை மிகவும் அவதானத்துடனும் கடந்த காலத்தில் கற்றுக்கொண்ட பட்டறிவுகளின் அடிப்படையிலும் முன்னகர்த்திச் செல்லவேண்டியது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல, அதில் அக்கறை கொண்ட யாவரினதும் கடமையும் கூட. ஆனால் அதனைச் செய்யும் முறைகளினையும் அமைப்புகளின் தன்மையினையும் தெளிவாக வரையறுத்து செயற்படவேண்டும்.

அல்லாவிடின் கடந்த காலத்தில் நடந்தது போன்று தமிழ் மக்கள் மத்தியிலான சிவில் சமூகங்களின் குரல்களும், செயற்பாடுகளும் அரசியல் சாயங்களின் பேரால் முடக்கப்படுவதும் - மறைவான அரசியல் நிகழ்ச்சி நிரல்களால் பெறுமதியற்று போவதும் - எதிரணிகள் உருவாவதும் என சிதைக்கப்பட்டுவிடும்.

வடக்கு கிழக்கினைச் சேர்ந்த தமிழ் சிவில் செயற்பாட்டாளர்கள் எமது புதினப்பார்வையினைப் புரிந்துகொள்வார்கள் என்பதில் நம்பிக்கை உண்டு.

நன்றி: புதினப்பலகை

# போர்க்குற்றங்கள் காலாவதியாகின்றன

ஹரிகரன்

> கிடைக்கப் போகும் கால இடைவெளியை இலங்கை அரசு இப்போது பயன்படுத்திக் கொள்ளப் போகிறது. எனவே அடுத்தடுத்த ஜெனிவா கூட்டத்தொடர்களில் போர்க்குற்றச்சாட்டுகளை முன்வைத்து இலங்கை அரசுக்கு எதிரான நகர்வுகளை மேற்கொள்வது சிரமமானது.



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நெருக்கடியை எதிர்கொள்வதைத் தவிர்ப்பதற்கு இலங்கை அரசு கடும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதன் ஒரு கட்டமாகவே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்திட்டம் ஒன்றை அரசு வெளியிட்டிருக்கின்றது.

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி ஐ.நா மனித உரிமைகள் சபையில் - நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை சுழற்சி முறையில் இடம்பெறும்- பூகோள கால மீளாய்வில் இலங்கை பற்றிய மீளாய்வும் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் இலங்கைக்கு நெருக்கடிகள் வருவதைத் தவிர்க்க வேண்டியுள்ளது. காரணம், இதுவரை ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு ஆதரவாக இருந்த நான்கு நாடுகள் இப்போது இல்லை. அதிலும் குறிப்பாக சீனா மற்றும் ரஷ்யாவின் இழப்பு இலங்கைக்கு மிகவும் பாதகமானது.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது, அதை முறியடிப்பதற்கு இந்த நாடுகள் பெரும் உதவி வழங்கின. இந்தியா கடைசி நேரத்தில் கைவிட்டதும், சீனாவே நேரடியாகக் களமிறங்கி ஆதரவு திரட்டியது. அதனால் தான் பல நாடுகள் தீர்மானத்தை எதிர்க்கவும், சில நாடுகள் வாக்களிப்பில் இருந்து ஒதுங்கவும் முடிவு செய்தன.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடக்கவுள்ள மீளாய்வின் போது இந்த நாடுகள் எதுவும் இல்லை என்பது இலங்கைக்கு உளவியல் ரீதியாகவே ஒரு பலவீனம்தான். இவற்றுக்குப் பதிலாக உள்ளே வரப்போகும் நாடுகள் இலங்கைக்கு ஆதரவு கொடுக்க முன்வந்தாலும் கூட, அது ஒருபோதும் சீனா, ரஷ்யா அளவுக்கு பெருமளவில் மனோபலத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கமாட்டாது. அடுத்த நவம்பரில் பூகோள கால மீளாய்வுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள மூன்று நாடுகளில் ஸ்பெயின் மற்றும் பெனின் ஆகியன ஏற்கனவே ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்தவை. அதைவிட இலங்கை விவகாரத்தில் அக்கறை காட்டாதவை.

மூன்றாவது நாடான இந்தியாவும் கூட ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்த நாடுதான்.

ஒருமுறை இந்தியா, ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்த நிலையில் தொடர்ந்தும் அதே நிலைப்பாட்டில் இருக்குமா என்ற கேள்வி இருக்கவே செய்கிறது. ஆனால், இந்தியாவைப் பொறுத்தளவில் ஜெனிவாத் தீர்மானத்தை ஆதரித்து விட்டு, அந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் இலங்கைக்குக் கை கொடுக்க முனைந்தால் இந்தியாவின் சர்வதேச மதிப்பு கெட்டுவிடும். இந்தியா சந்தர்ப்பவாதத்துடன் நடந்து கொள்வதாகக் கருதப்படும். எனவே நவம்பர் மீளாய்வின் போது கடுமையான நிலைப்பாடுகளில் இருந்து தப்பிக்க வேண்டுமானால், இலங்கை ஒரு செயற்திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று இந்தியா அழுத்தம் கொடுத்து வந்தது. அதுமட்டுமன்றி, இந்த விடயத்தில் அமெரிக்காவும் கடும் அழுத்தங்கள் கொடுத்திருந்தது.

இந்த செயற்திட்டத்தை, கடந்த மே மாதம் வொஷிங்டனுக்கு வரும் போது வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கொண்டு வர வேண்டும் என்று அமெரிக்கா கேட்டிருந்தது. ஆனால் அப்போது செயற்திட்டத்தை தாம் கையளிக்கவில்லை என்றது அரசு. அறிக்கை கையளிக்கப்பட்டது என்றது அமெரிக்கா. அதுமட்டுமன்றி இந்த செயற்திட்டத்தைக் கொழும்பில் பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் அமெரிக்கா கூறியிருந்தது. இதனடிப்படையில் தான் அரசு இந்த செயற்திட்டத்தை வெளியிட்டது என்பது உறுதியாகவே தெரிகின்றது. இந்தச் செயற்திட்டமானது சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தயாரிக்கப்பட்டது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது.

அரசு வேண்டுமானால் அதைத் தாம் சுயமாகத் தயாரித்ததாகக் கூறலாம். ஆனால் சர்வதேச அழுத்தங்கள்தான் இதைத் தயாரிக்க அல்லது விரைவாகத் தயாரிக்க வைத்தது. அதிலும் அமெரிக்கா, இந்தியாவின் அழுத்தங்கள் மிகுதியானது.

எதிர்வரும் நவம்பர் மாத மீளாய்வு ஒருபக்கம் இருக்க, அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா. மனிதஉரிமைகள் சபையின் 22ஆவது கூட்டத் தொடரில் தான் மிகப்பெரிய சவாலே காத்திருக்கின்றது. ஜெனிவாத் தீர்மானத்தின் படி, அந்தக் கூட்டத்தில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தனது பொறுப்பை நிறைவேற்றியுள்ளதை இலங்கை நிரூபிக்க வேண்டும். இதில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் இலங்கை பற்றிய அறிக்கையை சமர்ப்பிப்பார். அதில் பொறுப்பை நிறைவேற்ற இலங்கை அரசு தவறியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டால், கதை கந்தலாகி விடும்.

அடுத்த கட்டமாக என்ன செய்யலாம் என ஐ.நா மனித உரிமைகள் சபை ஆராயத் தொடங்கி விடும். இதனால்தான் அரசு, பிடிவாதம் பிடித்து முரண்டு பிடிக்காமல் செயற்திட்டத்தைத் தயாரித்துள்ளது. இந்த செயற்திட்டத்தின் முக்கியமான அம்சமே போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள்தான். அதை விசாரிக்க ஓர் ஆண்டும், ஆதாரங்களைத் திரட்ட இரண்டு ஆண்டுகளும், நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ள 2 ஆண்டுகளுமாக மொத்தம் 5 ஆண்டுகள் கால அவகாசம் கோரப்பட்டுள்ளது.

இது ஒரு மிக நீண்டகால அவகாசம். இழுத்தடிப்பதற்கான தந்திரோபாயம் என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் இப்போதைக்கு அரசு நழுவிக் கொள்வதற்குப் போதுமானது.

போர்க்குற்ற விசாரணை என்று வலியுறுத்தி வந்த சர்வதேச சமூகத்தின் வாயை அடைப்பதற்கான ஒரு பொறிமுறையை அரசு வெளிக்காட்டியுள்ளது. இது இழுத்தடிப்பதற்கான தந்திரோபாயம், நியாயமான விசாரணைகள் நடக்காது என்றெல்லாம் கூறப்பட்டாலும், சர்வதேச சமூகம் அதாவது அமெரிக்காவோ அல்லது ஐ.நாவின் அமைப்புகளோ அப்படி இதை உடனடியாக நிராகரிக்க முடியாது. நியாயமான விசாரணைகள் நடக்கவில்லை என்பதை நிரூபிப்பதற்கு அவர்கள் குறிப்பிட்ட காலஅவகாசத்தை வழங்கியே ஆகவேண்டும். அந்தக் கால இடைவெளியை அரசு இப்போது பயன்படுத்திக் கொள்ளப் போகிறது. எனவே அடுத்தடுத்த ஜெனிவா கூட்டத்தொடர்களில் போர்க்குற்றச்சாட்டுகளை முன்வைத்து இலங்கை அரசுக்கு எதிரான நகர்வுகளை மேற்கொள்வது சிரமமானது.

இலங்கை அரசு அடுத்த இரண்டு கூட்டத்தொடர்களில் இருந்து தன்னைப் பாதுகாப்பதில் இப்போதைக்குத் தற்காலிக வெற்றி கண்டுள்ளது என்றே கூறலாம். இது நீண்டகால வெற்றியாக அமையும் என்பதற்கு உத்தரவாதம் இல்லாவிட்டாலும் குறுகிய வெற்றி என்பது உண்மையே. ✸

# இந்தியா! இருண்ட கணம்!

யமுனா

மின்சாரம் என்பது இன்றைய உலகில் இன்றியமையாத, அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக விளங்குகின்றது. அந்த அளவுக்கு மின்சாரப் பாவனை பொதுமக்களது நாளாந்த வாழ்க்கையில் முக்கிய இடம்பிடித்துள்ளது. மக்கள் தமது நாளாந்த பாவனைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத்தக்க அளவுக்கு மிக எளிதான மின்கருவிகள் நவீன தொழில் நுட்பத்துடனான கருவிகள் அடிக்கடி உலக சந்தைக்கு வந்து கொண்டு தான் இருக்கின்றன. அவற்றின் இயக்கத்துக்கு சக்தி வழங்குவது இந்த மின்சாரமே.

'அவன் இன்றி அணுவும் அசையாது' என்பது அன்றைய முதுமொழி. மின்சாரம் இன்றி எந்தச் சாதனங்களும் இயங்க முடியாத நிலை காரணமாக 'மின் இன்றி உலகு இயங்காது' என நவீன தொடர் அமைவது பொருத்தமாக இருக்கும். இன்று தொழில் நுட்ப வளர்ச்சி வளர்முக நாடுகளில் அதி உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது. எனவே அதன் பரிணாம வளர்ச்சியாகப் புதுப்புது மின் சாதனங்களும் கண்டு பிடிக்கப்பட்டு, அவை உலக சந்தைக்கு வந்து கொண்டிருக்கின்றன. எனவே, இவை எல்லாவற்றுக்கும் இயக்க நாடி மின்சாரம் என்றால் அது மறுக்கப்பட இயலாத உண்மையே. எனவே மின்சாரம் ஒரு நிமிடம் தடைப்பட்டாலே மின் சாதனங்கள் சடங்களாகி விடுகின்றன. வீட்டிலானாலும் சரி அலுவலகத்திலானாலும் சரி சகல பணிகளும் ஸ்தம்பிதம் அடைந்துவிடுகின்றன. எனவே ஒரு நிமிடம் மின் விநியோகம் தடைப்பட்டாலே இந்த அளவுக்கு சிக்கல்கள் ஏற்படுகின்றதென்றால், தொடர்ச்சியாக 2 தினங்கள் முழுமையாக மின் தடை ஏற்படுமிடத்து எத்தகைய சவால்களை எதிர் நோக்க வேண்டிவரும்? அண்மையில் இத்தகைய மிகப் பெரிய மின் தடை ஏற்பட்டது. அது வேறு எங்குமல்ல, எமது அயல் நாடான இந்தியாவில்தான்.

இந்தியாவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடந்த வாரம் தொடர்ந்து 2 தினங்கள் மின்சார விநியோகம் தடைப்பட்டது. இதனால் தலைநகர் டில்லி உட்பட 20 மாநிலங்கள் இருளில் மூழ்கின. அதாவது மின் வழங்கும் தொகுப்புகளில் ஒரே நேரத்தில் கோளாறு ஏற்பட்டதால் இந்த மின் விநியோகத் தடை ஏற்பட்டதாகக் காரணம் கூறப்பட்டது. இதனால் 60 கோடி மக்கள் அந்த இரு நாள்களையும் இருளில் கழித்த சோக நிகழ்வு ஏற்பட்டது.

பெரியளவிலான மின் தடையால் ஒட்டு மொத்த பொருளாதாரமும் ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்பட்டது. 60 கோடி மக்கள், என்னதான் நடக்கின்றது என்று தெரியாமலே தவித்துப் போய் விட்டனர். உலகிலேயே மிக மோசமான, மிகப்பெரிய மின்வெட்டு என்ற பெயரைப் பெற்றுள்ளது இந்த மின் தடை. இந்தியாவின் பிரதமர் மன்மோகன் சிங் வீட்டுக்குப் பூட்டானின் மின் வழங்கும் நடைமுறை மூலம் மின்சாரம் பெறப்பட்டது.

டில்லி மெட்ரோ ரயில் சேவைகள் அனைத்தும் இந்த மின் தடையை அடுத்து நிறுத்தப்பட்டன. உலகின் மிகப் பெரிய ரயில் சேவையான இந்திய ரயில்வேயும், சேவையில் ஈடுபட்டிருந்த நூற்றுக் கணக்கான நீண்ட தூர ரயில்களும் பல்வேறு ரயில் நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்டன. இதனால் 3 லட்சம் பயணிகளின் பயணம் தடைப்பட்டது. எனவே போக்குவரத்து மூலம் ஈட்டப்படும் அரச வருமானம் வீழ்ச்சி கண்டது. அலுவலகங்கள் பாதிக்கப்பட்டன, கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இது மட்டுமல்லாது, திடீரென மின்சாரம் தடைப்பட்டதால் மேற்கு வங்கத்தில் அசன்சோல் நிலக்கரிச் சுரங்கத்துக்குள் 200 தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர். அவர்களை மிகவும் சிரமப்பட்டு மீட்டு வெளியே கொண்டு வர நேர்ந்தது. அதே போல் ஜார்க்கண்டிலும் சுரங்கத்துக்குள் சிக்கிக்கொண்ட 65 சுரங்கத் தொழிலாளர்கள் பலத்த சிரமத்தின் மத்தியில் மீட்கப்பட்டனர். வடக்குப் பிராந்திய மின் கட்டமைப்புச் செயலிழந்த சில மணி நேரங்களிலேயே கிழக்கு மற்றும் வடகிழக்குக் கட்டமைப்புகளும் செயலிழந்து போயின. வடக்குப் பிராந்தியக் கட்டமைப்பு செயலிழக்க முக்கிய காரணம் உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ஹரியானா ஆகிய மாநிலங்களில் அதிகளவிலான மின்சாரப் பாவனை மேற்கொள்ளப்பட்டமை தான் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இந்த 3 மாநிலங்களும் இந்தக் கருத்தைத் திட்டவட்டமாக மறுத்துள்ளன.

தொடர்ந்து இரு தினங்கள் இருளில் மூழ்கியிருந்த வடக்கு, கிழக்கு மாநிலங்கள் பின்னர் மீண்டு ஒளி பெற்றன. மின் தொகுப்பு வழங்கிகளில் ஏற்பட்ட கோளாறுகள் அனைத்தும் நேர் சீர் செய்யப்பட்டன.

அதேசமயம் மத்திய அரசு 60 கோடி மக்களையும் இருளில் தள்ளி விட்டது என்று குஜராத் முதல்வர் நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார். அதாவது மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கை தான் இத்தகைய மின் தடைக்கும் காரணம் என்று அவர் மத்திய அரசைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

இவ்வாறு திடீரென ஏற்பட்ட மின் தடைக்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய அரசு 3 பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளது. இந்தக் குழு மின் தொகுப்பில் ஏற்பட்ட கோளாறுக்கான காரணத்தை ஆராய்ந்து விரைவில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளது. ✸

நல்லூர் கந்தனின் 16ஆம் நாள் வீதியுலாக் காட்சி



கிருபா லேணர்ஸ்



(அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை)
இப்பொழுது பருத்தித்துறை 1 ஆம் கட்டைச் சந்தியில்
T.P : 021 4923201,
071 4546958, 077 7225292
தலைமைக்காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4353
(சு/1848)(6-7-8)

# புங்குடுதீவு மக்களைக் காத்தருளும் கிராஞ்சியம்பதி கந்தசுவாமி ஆலயம்

லக்ஸ்மன்



பெருங்காடு கந்தசுவாமி கோயில் என பொதுவாகக் கூறப்படும் கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் புங்குடுதீவில்பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்று. 1853 ஆம் ஆண்டில் காசிநாதர் சின்னத்துரை எனப்படும் முருக பக்தரினால் இந்த ஆலயம் உருவாக்கப்பட்டது. கிராஞ்சியம்பதியின் சிறப்புக்கு இந்த ஆலயமும் அயலில் உள்ள சிவன் கோயில், முத்துமாரி அம்மன் கோயில் மற்றும் தீர்த்தக் குளங்களும் அமைந்திருப்பதுமே காரணமாகும்.

இந்தக் கோயிலைப் பராமரிக்கும் பொறுப்பை சின்னத்துரையின் மகன் ஐயாத்துரையும், இவருக்குப் பின்னர் கந்தசாமி ஆசிரியர் என அழைக்கப்படும் நாகரத்தினமும் கொண்டிருந்தனர். காலத்திற்குக் காலம் வளர்ச்சியடைந்து வந்த இந்த ஆலயத்தின் முகாமையாளர்களில் ஒருவராக சேனாதிராசா ஆசிரியரும் இருந்துள்ளார்.

இங்கு வருகை தந்த குன்றக்குடி அடிகளார் தென்மதுரையில் திருப்பரங்குன்றமும் மதுரை மீனாட்சி அம்மனும், மரியாத்தா கோயிலும் அமைந்திருப்பது தமிழகத்துக்கு எவ்வளவு அழகோ அதே போன்று இந்த மண்ணுக்கு இது சிறப்பைத் தருகின்றது எனக்குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஆலயத்துக்கு அருகில் ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையை புங்குடுதீவுப் பெரியார்களில் ஒருவரான பசுபதிப்பிள்ளை நிறுவியிருந்தார். முதன் முதலாக புங்குடுதீவில் மொட்டை மாடி அமைந்திருந்தது இந்தப் பாடசாலையில் தான் எனவும் திருவிழாக் காலங்களில் இந்த மொட்டை மாடியில் ஏறி நின்றே முருகப் பெருமான் வீதியுலா வரும் காட்சியை முகாமையாளர் ஐயாத்துரை தரிசித்து மகிழ்வதாகவும் ஒரு வரலாறு உண்டு.

கந்தசுவாமி கோயில் உரிமையாளர்களை ஊர் மக்கள் காசியர் கூட்டம் என அழைப்பதுண்டு. ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் திருவிழா இடம் பெறும் உற்சவ காலத்தில் இவர்கள் எங்கிருந்தாலும் புங்குடுதீவுக்கு வந்து உற்சவ் ஏற்பாடுகளைச் சிறப்பாகக் கவனிப்பதுண்டு. இவர்களோடு உறவுத் தொடர்புகளைக் கொண்ட பசுபதிப்பிள்ளை விதானையார், அவரது மகன் சட்டத்தரணி கதிரவேலு பொறியியலாளர் எ.வைத்திலிங்கம் ஆகியோரும் இந்தக் கோயிலின் உரிமையாளர்களே.

ஆலயத்தை அண்மித்திருந்த குருபூசை மடத்தில் நாயன்மார் குருபூசைகள் இடம்பெற்று வந்தன. இலங்கையின் முதலாவது சமஸ்கிருத பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதும் இங்கேயே. தென்னங்கும்பர (கண்டி) ஆச்சிரமத்தைச் சேர்ந்த சச்சிதானந்த யோகீஸ்வரருக்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கும் சித்தாந்த வேதாந்த கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதும் இங்கே தான். இது ஒரு முக்கியத்துவம் பெற்ற நிகழ்வாக அப்போது கருதப்பட்டது. அடிகளாரையும், சச்சிதானந்த யோகீஸ்வரரையும் அழைத்து அருளுரையை நடத்தியவர் அப்போது இளைஞர் கழகத்தின் தலைவராக இருந்த வே.க.சோமசுந்தரம் ஆவார்.

> ஆலயத்தை அண்மித்திருந்த குருபூசை மடத்தில் நாயன்மார் குருபூசைகள் இடம்பெற்று வந்தன. இலங்கையின் முதலாவது சமஸ்கிருத பாடசாலை ஆரம்பிக்கப் பட்டதும் இங்கேயே. தென்னக்கும்பர (கண்டி) ஆச்சிரமத்தைச் சேர்ந்த சச்சிதானந்த யோகீஸ்வரருக்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கும் சித்தாந்த வேதாந்த கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதும் இங்கே தான்.

கந்தசுவாமி ஆலயம் புங்குடுதீவில் மட்டுமன்றிச் சுற்றாடல் பகுதிகளிலும் பிரபலம் பெற்று விளங்கியதால் திருவிழாக்கள் விடிய விடிய நடப்பதுண்டு. அந்தக் காலங்களில் பொதுவாக அனைத்து ஆலயங்களிலும் அவ்வாறே விழாக்கள் இடம்பெறுவதுண்டு.

சூரன்போர் காலங்களில் சூரன்வீதி வலம் வரும் காட்சியும், முருகப்பெருமான் அவனுடன் போர் புரிந்து தலையை வீழ்த்தும் காட்சியும் மிகவும் சிறந்த முறையில் அமைவதாக புங்குடுதீவு மக்கள் பெருமைப்படுவது உண்டு.

முருகனுக்கும் சூரனுக்குமிடையில் நாரதர் உறைவதும் போன்ற காட்சிகள் மிகவும் விறுவிறுப்பாகவும் அமைகிறது. நாரதராக நடித்த பெரிய தம்பியும் அவருக்குப் பின் செல்லையா என்பவரும் தோன்றி குமரக் கோட்டத்தில் பழைய குறிஞ்சிக் கதைகளை நடிப்பதுண்டு.

கிராஞ்சி முருகன் திருவிழா என்பது அப்போதெல்லாம் பிரபல்யம் பெற்றதாகவே இருந்துள்ளது. முருகப் பெருமானின் கதைகள் நாடகங்களாக இடம்பெற்றதுண்டு. வித்துவான் சி.ஆறுமுகம், ஆசிரியர்கள் க.நாகலிங்கம், ஆர்.தம்பு அம்பலவாணர் குணமாலை போன்றோர் இதில் முக்கிய ஈடுபாடு கொண்டவர்களாக இருந்துள்ளனர்.

கந்தபுராண படனம் இடம்பெறும் சித்தாந்த சாஸ்திர அறிவிலும், சமய ஞானத்திலும், திருமுறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்களாகப் பலர் இங்கு இருந்துள்ளனர். உரை கூறுபவர்களாகத் திகழ்ந்த சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள் சாஸ்திரி குருமூர்த்தி, வைத்தியர் சி.கணபதிப்பிள்ளை, இளையப்பா வாத்தியார், பொன் கனகசபை, முத்துலிங்கம், நொத்தாரிஸ் தி.சதாசிவம் போன்றவர்கள் இந்த ஆலயத்தின் சுற்றாடலில் வசித்தவர்கள் என்பதால் உரிய காலங்களில் 'புராண படனம் உரை வாசித்தல்' என்பன தடங்கலின்றி இடம்பெற்றன எனக் கூறப்பட்டது.

தற்போது பெரிய அளவில் நிகழ்வுகள் எதுவும் இடம்பெறுவதில்லை. ஆலயம் முழுமையாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

## குவலயத்தில் வாழவைப்பாய்!



துள்ளிக்குதித்து வந்து
துயர் துடைக்கும் தூயவனே!
அள்ளித் தரு மருளால்
அவனிதனைக் காப்பவனே
வெள்ளிமலை மீ தமர்ந்து
விற லீயும் வித்தகனே
கொள்ளையின்பம் தந்தெம்மை [க்]
குவலயத்தில் வாழ வைப்பாய்!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## நல்லருள் நல்கிடையா..



அலங்காரக் கந்தனே
எம்மை அரவணைப்பாயே
ஆனந்தமாய் உன்னை
அன்பர் ஆடிப்பாடிட
இருள் அகற்றி இன்ப
ஒளி தந்திடுவாயே
ஈசனின் இளையோனே
அடியார் உள்ளத்தின்
துயர் களைந்து
ஊரெல்லாம் உவகை
பொங்கிட எமக்கருளும்
நல்லை நாதனே
ஏற்றமிகு வாழ்வு
தந்தருள்வாய் ஐங்கரன்
சோதரனே
நின்புகழ் பாடி
ஒரு ரூபாய்
கொண்டு அர்ச்சிக்க
ஓம் எனும் பிரணவப்
பொருள் கூறி
ஔவைக்கு தமிழ்
தந்த பெருமாளே
நல்லைக் கந்தா
நல்லருளை நல்கிடைய்யா

வி.கீர்த்தனா, சுதுமலை

## மயில் ஏறி வந்து மனக் குறைகள் தீர்த்திடையா



சிவன் உமை பாலகனே
சிங்கார வேலவனே
கோல் மயில் ஏறி வந்து
எங்கள் மனக்குறையை
தீர்த்திடையா
வண்ண மயிலோனே
வள்ளி மணவாளா வண்ண
மயில் ஏறிவந்து
எங்கள் வாட்டங்கள்
தீர்த்திடையா
பச்சை மயிலோனே
பார்வதியின் செல்வமைந்தா
பச்சை மயில் ஏறி வந்து
எங்கள் பாவங்கள்
தீர்த்திடையா
நீல மயிலோனே
நீல கண்டன் திருக்குமார
எனை ஆளும் நாயகனே

கலாநாதன், மண்டைதீவு



அருள் விநாயகர் ரேடர்ஸ்
இல.106, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சு/1959) (2-6)

# அரசியல் தீர்வைப் பெறவே கிழக்குத் தேர்தலில் போட்டி

## திருமலை மாவட்ட கூட்டமைப்பு வேட்பாளர் ஜெனார்த்தனன்

திருகோணமலை,ஓக.9

முகாம்களில் அவல வாழ்வு வாழும் மக்களுக்கு நிலைத்து நிற்கக் கூடிய, அவர்களுடைய எதிர் காலத்தை ஒளிமயமானதாக்கக் கூடிய சிறந்த அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் ஜெ.ஜெனார்த்தனன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைப் புறக் கிராமங்களான நொச்சிக்குளம், சாந்திபுரம் மக்களைச் சந்தித்து அவர்களுடன் நடத்திய கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**இனம் மீது கொண்ட பற்றுதலாலும் இனத்தின் விடிவு, எதிர்பார்புகளைக் கருத்தில் கொண்டுமே இம்முறை இளைஞர்கள் தேர்தல் களத்தில் புகுந்துள்ளோம்.**



அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பண பலத்துடனோ அல்லது பணம் சம்பாதிக்கும் நோக்குடனோ நாம் தேர்தல் களத்தில் இறங்கவில்லை. எம் இனத்தின் மீது கொண்ட பற்றுதலாலும் இனத்தின் விடிவு, எதிர்பார்ப்புகளை கருத்திற்கொண்டுமே இந்தத் தேர்தலில் இளைஞர்களாகிய நாம் களம் புகுந்துள்ளோம்.

அகதி முகாம்களில் உள்ள மக்களின் அவல நிலையை அரசியலாக்கவோ அல்லது மக்களின் வறுமையை சாதகமாகப் பயன்படுத்தி அரசியல் இலாபம் தேடுவதற்காகவோ தேர்தல் களத்தில் நாம் இறங்கவில்லை. அல்லற்படும் இந்த மக்களுக்கு சிறந்த அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியாகத் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

திருகோணமலை மாவட்ட மக்கள் அதிலும் எல்லைப் புறக் கிராமங்களில் வாழும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளும், தேவைகளும் கவனிக்கப்படவேண்டும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலின்போது வாக்களிக்கும் முறை, கட்டாயமாக அடையாளஅட்டை வைத்திருப்பது தொடர்பாக வேட்பாளர் கிராம மக்களுக்கு விளக்கமளித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-40)

# தேவையை நிறைவேற்ற அருமையான சந்தர்ப்பம்

## அகில இலங்கை மு.கா. வேட்பாளரின் கருத்து

திருகோணமலை,ஓக.9

எமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு ஓர் அருமையான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிடும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் ஹில்மி மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் இடம் பெற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களுக்குத் தலைமை தாங்கி, அவர்களை வழி நடத்திச் செல்ல முடியாத கட்சிகளையும் தலைமைகளையும் எமது மக்கள் இனியும் நம்பி ஏமாற முடியாது. அமைச்சர் ரிஷாத் பதியுதீன் எமது பிரதேசத்திற்கு தேர்தல் இல்லாத காலங்களில் வருகை தந்து எமது மக்களது பல்வேறு பிரச்சினைகளை தீர்த்துத் தந்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களுக்கு ஒரு நல்ல தலைமைத்துவம் உருவாக்கப்பட வேண்டும் என்பதில் எமது தலைமை மிகவும் ஆழமான சிந்தனையைக் கொண்டுள்ளது. ஆனால், இன்று சிலர் இங்கு வந்து மக்களுக்குப் பொய்யை உண்மை போன்று கூறி அதனூடாக சரிந்து போயுள்ள தமது கட்சிக்கு ஆள்சேர்ப்பு செய்கின்றனர். இந்தத் தேர்தல் எமது மாவட்ட மக்களது தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒன்றாகும்-என்றார். (ச)

# புதையல் தோண்டிய ஏழு பேர் கைது

வெலிகந்த,ஓக.9

வெலிகந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புராதன இடமொன்றில் புதையல் தோண்டச் சென்ற சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்ட இவர்களில் சிப்பாய் ஒருவரும் உள்ளடங்குகிறார். சிப்பாய் விடுமுறையில் சென்றபோதே இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் பல மீட்கப்பட்டுள்ளன.

கைதானவர்கள் குருநாகல், பொத்துஹெர, ஆனமடுவ, ஹோமாகம மற்றும் திம்புலாகல ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)



கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக மாணவர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கிழக்கு பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள திருகோணமலை வளாக நிர்வாகம் தனியாகப் பிரித்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# சமாதானத்தை ஏற்படுத்த வழிகோலுகிறது 'இப்தார்'

## திருமலை பிரதிப் பொலிஸ் மா அதிபர்

பல்லின சமூகத்தினரிடையே நல்லதொரு புரிந்துணர்வை ஏற்படுத்தவும், சமாதானத்தை கட்டியெழுப்பவும் சிறந்த வைபவமாக இப்தார் என்ற நோன்பு திறக்கும் வைபவம் காணப்படுகின்றது என்று திருகோணமலை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

நூறுல் ஹிதாயா பௌன்டேசன் அமைப்பினால் பிரதான வீதி, ஜும்ஆ பள்ளிவாசலில் நடத்தப்பட்ட இப்தார் வைபவத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று நாம் இந்த நிகழ்வை மிகவும் சந்தோஷமான ஒரு சூழலில் கொண்டாடுகின்றோம். சமாதானத்தைப் பாதுகாக்க சமய ரீதியாக ஒன்றுபடுதலே இன்றுள்ள மிக முக்கிய தேவையாகும்.

ரம்ழான் நோன்பு சமாதானத்தை கொண்டுவரும் என்பதில் சந்தேகமில்லை. இன்று ஏற்பட்டுள்ள இந்த நிம்மதியும், சந்தோசமும் வார்த்தைகளால் சொல்லும் ஒன்றல்ல. எதிர்காலத்திலும் இனங்களை ஒன்றுபடுத்தும் இவ்வாறான நிகழ்வுகள் நடைபெற பிரார்த்திக்கின்றேன் -என்றார்.

நிகழ்வில் மௌலவி பரீட் தெரிவித்ததாவது:-

இன்று தமிழ், முஸ்லிம், சிங்களம், கிறிஸ்தவம் என்ற பேதம் மறந்து மனிதர்கள் என்ற ஒரு வரையறைக்குள் ஒன்று சேர்ந்துள்ளோம். இஸ்லாம் இதைத்தான் போதிக்கிறது. ஒருவரை ஒருவர் நேசித்தலுக்கு மொழியும், சமயமும் ஒருபோதும் தடையாக இருக்காது.

மனிதர்களாகிய எமக்கு அன்பு செலுத்துதல், அயலவர்களை நேசித்தல், புரிந்து கொண்ட சமூகமாக வாழ்தல் இதுதான் இன்றுள்ள தேவை. -என்றார். (ச)

# அம்பாறைத் தொகுதியை நிச்சயம் ஐக்கிய தேசியக் கட்சியே கைப்பற்றும்

## நம்பிக்கை தெரிவிக்கிறார் வேட்பாளர்

அம்பாறை,ஓக.9

கிழக்கு மாகாணத் தேர்தலில் தனியாக முஸ்லிம் காங்கிரஸ் இறங்கி இருப்பது அரசியல் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டதே தவிர மக்களின் நலனுக்காக இல்லை. இவ்வாறான நிலையில் ஐ.தே.க. கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அம்பாறை தொகுதியை நிச்சயமாக வெற்றி கொள்ளும் என்பதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது என்று அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர் ஏ.எச்.எச்.எம்.நபார் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண தேர்தல்கள நிலவரம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவ தாவது:-

நாட்டில் தற்போது முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. இவ்வாறான நிலைகளை எதிர்க்க திராணியற்ற முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம் மக்களின் வாக்கை அடகு வைத்துவிட்டு அரசுடன் கூட்டு வைத்திருப்பதில் எந்த விமோசனமும் எமது சமூகத்துக்குக் கிடைத்து விடப்போவதில்லை.

எமது நாட்டில் தற்போதைய அரசியல் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மூன்று மாகாணங்களுக்கான தேர்தல் நடப்பதால் இது மக்களின் பல்வேறு விருப்புவெறுப்புகளுக்குத் தீனி போடும் களமாக உள்ளது. இந்தச் சூழ்நிலையில் எந்த அரசியல் கட்சிகளும் கிழக்கு மாகாண சபையில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியாத நிலை காணப்படுவதை மக்கள் கருத்துக்கள் மூலமாக அறியக்கூடியதாக உள்ளது.

இந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் இறுதி வேளையில் ஆசனப்பிரச்சினை, முதலமைச்சர் பிரச்சினை ஆகியவை காரணமாக கிழக்குத் தேர்தலில் பிரிந்து நாடாளுமன்ற ஆசனங்களை ஆளும் தரப்பில் வைத்துக்கொண்டு மாகாண சபைத் தேர்தலில் இன்று தனித்துக் களமிறங்கி உள்ளன.

கிழக்கில் அரசுடன் இணைந்து முஸ்லிம் சமூகத்தினுடைய கணிசமான வாக்குகளைப் பெறுவதென்பது சாத்தியமற்ற விடயம் என்பதனால் இன்று கிழக்கில் தனித்தும் சப்ரகமுவ, வட மத்திய மாகாணங்களில் அரசுடன் இணைந்தும் மு.கா. தேர்தலில் களமிறங்குகிறது.

நாட்டினுடைய இன்றைய அரசியல், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தெளிவான மாற்றத்துக்கு அனைத்துச் சமூகங்களும் அரசியல் வியாபாரிகளைப் புறந்தள்ளிவிட்டு நாட்டு மக்களின் அரசியல், பொருளாதார உரிமைகளுக்கு குரல் கொடுக்கின்ற சக்திகளையும், வெளி நாட்டு உறவுகளையும், உதவிகளையும் இலகுவாக அடைந்து கொள்ளக்கூடிய ஐ.தே. கட்சியை ஆதரிக்கவேண்டும் - என்றார். (ச)

# அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் முறை குறித்து விளக்கம்

மட்டக்களப்பு,ஓக.9

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தநிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அஞ்சல் வாக்களிப்பு நடைபெறும் இடங்களில் இருந்து அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் அசங்க ரத்னாயக்க இவர்களுக்கான அறிவுரைகளையும் அஞ்சல் வாக்குகளை அத்தாட்சிப்படுத்தும் முறை குறித்தும் விளக்கமளித்தார். (ச)

# பள்ளிவாசல்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை

## இப்படிக் கூறுகிறார் அதாவுல்லா

மட்டக்களப்பு, ஓக.9

அனைத்துப் பள்ளிவாசல்களுக்கும் இன்று அரசு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருக்கிறது என்று தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதா வுல்லா தெரிவித்தார்.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடந்த திங்கட்ழமை இடம் பெற்ற இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தம்புள்ள பள்ளிவாசல் விடயத்தை பிச்சைக்காரனின் காலில் ஏற்பட்ட புண்ணை போன்று முஸ்லிம் காங்கிரஸ் பயன்படுத்துகிறது. ஒரு குழுவினர் செய்யும் செயற்பாடுகளுக்கு அரசைக் குறை கூற முடியாது.

வடக்கிலிருந்து முஸ்லிம்களை விரட்டியது போல், கிழக்கிலிருந்து முஸ்லிம்களை விரட்ட முடியாது. இங்கு மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வடக்கையும் கிழக்கையும் மீண்டும் இணைக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.

கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்லில் முஸ்லிம் காங்கிரஸின் சகோதரர் ஹஸன் அலி போன்றவர்கள் வடக்கையும், கிழக்கையும் இணைப்பதற்கு ஆணை தாருங்கள் என்று கோரினர். இரு மாகாணங்களையும் மீண்டும் இணைக்கும் திட்டத்தை முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தெரியாது. எனினும் இத்திட்டத்தை உயர் மட்ட உறுப்பினர்கள் அறிவார்கள். இது பெரியதோர் வியாபாரமாகும். - என்றார். (ச)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** குழப்பங்கள் தீர்ந்து எதிலும் தெளிவான, தீர்க்கமான முடிவு எடுப்பீர்கள். வரவுகளை எதிர்பார்த்து சில செலவுகளைச் செய்வீர்கள். மாமன், மைத்துனர் உதவியோடு முக்கிய காரியம் ஒன்று நிறைவேறும். சில வேலைகளுக்காக கடுமையான அலைச்சல் இருக்கும்.

**இடபம்:** நிதி நிலைமையில் முன்னேற்றம் காண்பீர்கள். எதிர்பார்த்த காரியங்கள் மட்டுமின்றி, எதிர்பாராத சில காரியங்களும் நடக்கலாம். உங்களை வெறுத்து ஒதுக்கிய சொந்தங்கள், உதவி நாடி வரலாம்.

**மிதுனம்:** மற்றவர்களைப்போல, சில விடயங்கள் நமக்கு நடக்கவில்லையே என்று ஆதங்கம் அடைவீர்கள். மாமன், மைத்துனர் உங்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வர். பொழுது போக்கு விடயங்களுக்காகக் கணிசமான பணத்தைச் செலவிடுவீர்கள்.

**கடகம்:** குடும்ப விவகாரங்களில் வீண் பிடிவாதம், கர்வத்தைத் தவிர்த்து, விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றி விடுவீர்கள். அலுவலகப் பணிகளில் சில மாற்றங்கள் ஏற்படும். நாள் முழுவதும் பரபரப்பாகச் செயற்படுவீர்கள்.

**சிங்கம்:** சிறிய தவறு ஒன்றை நினைத்து, பெரியளவில் கவலைப்படுவீர்கள். சக ஊழியர்கள், நண்பர்கள் சிலர் உங்களை விமர்சிப்பதால் எரிச்சல், கோபம் அடையலாம். ஆரம்பித்த சில வேலைகளில் எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம்.

**கன்னி:** எதிலும் புத்திசாலித்தனமாக, இணக்கமாக நடந்து சாதனை படைப்பீர்கள். உறவினர் ஒருவருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் மாறி, பாசம் அதிகரிக்கும், வெளிநாட்டுத் தொடர்புடையவர்கள் நல்ல செய்தி கேட்கலாம். விசேட நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.

**நாளை**

ஆடி 26 வெள்ளிக்கிழமை 10.08.2012
திதி: அட்டமி பி.ப. 02.31 வரை
நட்சத்திரம்: பரணி, கா. 08. 30 வரை
சுபநேரம்: 06.04 - 07.34 வரை
ராகு காலம்: 10.34-12.04 வரை

**துலாம்:** உடன் பிறப்புகள் நலனில், அதிக அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் மத்தியில் உருவான பிரச்சினை ஒன்றை, நீங்கள் தலையிட்டு தீர்த்து வைப்பீர்கள். கனிவான பேச்சுக்களால் காரியங்கள் சாதிக்கலாம்.

**விருச்சிகம்:** கடந்தகால அனுபவம் ஒன்றை அசைபோட்டுப் பார்த்து, புதிய முயற்சிகளில் இறங்குவீர்கள். உங்களின் முயற்சிக்கு சிலர் மறைமுகமாக தடை போடலாம். பங்குதாரர்களுடன் பக்குவமான அணுகுமுறை நல்லது.

**தனுசு:** உடல்நிலையால் உற்சாகம் குறையலாம். பணிபுரிவோர், எதிர்பாராத மாற்றங்களைச் சந்திக்கலாம். நீங்கள் பெரிதும் நேசித்த ஒருவர், உங்களிடம் கோபமாக நடந்து கொள்ளலாம். குடும்பத்தில் முக்கியமான பணி ஒன்றை செய்ய மறந்து, வீண் அவதிகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

**மகரம்:** தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. உடன் பிறப்புக்கள், ஏட்டிக்குப் போட்டியாக நடந்து, கோபம் உண்டாக்கலாம். சந்தோஷமான அனுபவம் உண்டு.

**கும்பம்:** ஆர்ப்பாட்டம் இல்லாமல் எதிலும் அமைதியாகச் செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள். முன்பின் யோசிக்காமல் சிலருக்கு வாக்கு கொடுக்கலாம். உடல் நலக் குறைவுகளை தவிர்க்க, வெளி இடங்களில் உணவு எடுத்துக்கொள்ள வேண்டாம்.

**மீனம்:** திட்டமிட்ட வேலைகளில், சில மாற்றங்களைச் செய்யலாம். செய்த காரியம் ஒன்றுக்காக ஒரு தரப்பில் பாராட்டையும், மற்றொரு தரப்பில் விமர்சனத்தையும் எதிர் கொள்ளலாம். உடன் பணிபுரிபவர்கள் உங்களிடம் கோபமாக நடந்து கொண்டாலும், நீங்கள் அமைதியாகச் செயற்படுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | | 2 | | | | 1 | |
| | 2 | 4 | | | 3 | | | 7 |
| | | 5 | | | 7 | 2 | 3 | |
| 2 | 8 | 6 | | | 1 | 4 | | |
| 5 | | | 6 | | 4 | | | 2 |
| | | 7 | 8 | | | 3 | 9 | 6 |
| | 6 | 2 | 3 | | | 7 | | |
| 7 | | | 1 | | | 6 | 4 | |
| | 3 | | | | 5 | | | 8 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 7 | 2 | 6 | 4 | 3 | 9 | 5 |
| 5 | 9 | 3 | 7 | 1 | 8 | 6 | 4 | 2 |
| 4 | 2 | 6 | 3 | 5 | 9 | 8 | 7 | 1 |
| 7 | 4 | 9 | 8 | 2 | 5 | 1 | 6 | 3 |
| 3 | 5 | 8 | 6 | 4 | 1 | 9 | 2 | 7 |
| 6 | 1 | 2 | 9 | 7 | 3 | 4 | 5 | 8 |
| 9 | 3 | 5 | 4 | 8 | 2 | 7 | 1 | 6 |
| 8 | 6 | 1 | 5 | 9 | 7 | 2 | 3 | 4 |
| 2 | 7 | 4 | 1 | 3 | 6 | 5 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
23★ 05★ 1964



உதிர்வு
10★ 07★ 2012

**அமரர் நடராசா இரத்தினேஸ்வரன்** (சந்துரு - நீர்வேலி)

எதிர் நோக்காது இதயம் தாக்கிய இடியாய்
எழுந்து நின்று எம் வாழ்வெல்லாம் சிறக்க
எல்லாமாய் விளங்கி பணிபுரி தலைவர்
இன்று சுவர்க்கம் புகுந்த விதி யாதோ?
அன்பில் பண்பில் ஆதரித்து உயர்த்தும்
பண்பாளரே உம் ஆன்மா சாந்தி பெறட்டும்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.08.2012) வியாழக்கிழமை நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரில் வருகை தந்து ஆறுதல் கூறியோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இராஜ வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

இறைவனைப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்.

(21425)(45-6-7)

# கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

அமரர்
**கைலாசுபிள்ளை சீவரட்ணம்** (கடைமாமா)



என்று தேடுதே நெஞ்சம்!
இனி எங்கே காண்போம் உங்களை!
திரைகடலோடியும் திரவியந்தேடு
என எம்மையெல்லாம் வெளிநாடு
செல்ல வழிசமைத்தீர்
பெற்ற பிள்ளைகளிலும் மேலாக
எங்களை காத்து வளர்த்தீர்!
தள்ளாத வயதிலும் தளராத
மனத்தோடு தனியாகக் கடை நடத்தினீர்!
கரைசேரா நம் உறவுகளை கரைசேர்க்க
நீரும் காலமெல்லாம் கடினமாய் உழைத்தீர்
வெற்றியும் கண்டீர்.
புலம் பெயர் உறவினர்கள் வாழும்
நாடுகளையும் தவறவிடவில்லை நீர்
சுவிஸ், இத்தாலி, ஜேர்மனி என்று
அங்கெல்லாம் சென்று
உறவுகளைக் கண்டு மகிழ்ந்தீர்
மீண்டும் ஒரு முறை நீர்
பிறந்த மண்ணைக் காண ஆசைப்பட்டீர்!
ஆனால் காலம் கனிந்து வரவில்லை.
காலன் மட்டும் கடிந்து வந்து உங்கள்
உயிரைக் கவர்ந்து சென்றிட்டான்.
இனி என்ன செய்வோம். ஆண்டாண்டு
காலமெல்லாம் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ! வரமாட்டார்.
நாமெல்லோரும் பொன் மனச் செம்மலாம்
கடை மாமாவின் ஆன்மா சாந்தியடையப்
பிரார்த்திப்போமாக!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
கடைமாமாவே!
ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
இன்று நீர் மீளாத்துயில் கொள்வதேனோ...?
மரணம் என்றோ உறுதி ஆனால் அது
விரைந்து வந்தது ஏனோ?
கொடிய காலன் உம் உயிரைக்
கவர்ந்து கொண்டதேனோ?
எங்கள் மனதில் என்றும் நீங்கா
நினைவை விட்டுச் சென்றவரே
பார்க்குமிடமெல்லாம் உங்கள்
உருவைத் தான் காண்கின்றோம்.
கடைமாமா கடைமாமா என்று
உங்களிடம் வந்தபோதெல்லாம்
கட்டி அணைத்து ஆறுதல் தந்தீரே கடைசியில்
எங்களுக்கெல்லாம் ஒன்றுமே கூறாமல்
மௌனமாய் மறைந்ததேனோ?
கலங்குதே நெஞ்சம் கதறுதே உள்ளம்
உங்களை ஒரு முறை உயிரோடு
காணவேண்டும்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

துயர் பகிர்விற்கு:
Jaffna : 077 196 9955
Nanthu-Norway: 0047 3285 4111
Mami-Norway: 0047 2281 3280

உங்கள் பிரிவால் துயருறும்
வீரசிங்கம் குடும்பத்தினர் - கச்சேரி

(5-6)

# தமிழரின் பிரச்சினைகளைப் பேசினால் ஆளுந்தரப்பில் யாரும் இருப்பதில்லை

## இதுவே தெரிவுக் குழுவைப் புறக்கணிப்பதற்கு காரணம் என்கிறார் கூட்டமைப்பு எம்.பி.

கொழும்பு, ஓக.9

தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து பேசும்போது ஆளுந்தரப்பில் எவரும் சபையில் இருப்பதில்லை. ஆசனங்களைப் பார்த்தே பேசவேண்டியுள்ளது. இதனால் தமிழர்களுக்கு நாடாளுமன்றத்தின் மீது நம்பிக்கை இல்லை. தமிழர் தரப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவைப் புறக்கணிப்பதற்கு இதுவுமொரு காரணம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் தெரிவித்தது.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற காடு பேணல் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் இவ்வாறு தெரிவித்தார்.

**தமிழர்களுக்கு நாடாளுமன்றம் மீதே நம்பிக்கையில்லை. அவ்வாறு இருக்கையில் எப்படி தெரிவுக்குழுவில் இணைய முடியும்.**



அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. தலையில்லாத முண்டங்களைப்போல அங்கு மரங்கள் நிற்கின்றன. இறுதிப் போரின்போது வன்னியில் கைவிடப்பட்டு, முள்ளிவாய்க்காலில் குவித்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் வாகனங்களை தென்பகுதியிலிருந்து சொகுசு வாகனங்களில் வருபவர்கள் அறுத்து எடுத்துச் செல்கின்றனர்.

இதுகுறித்து நான் வினவியபோது, முறையாக கேள்வி மனுக்கோரியே இதை செய்கின்றோம் என்று தென்பகுதியிலிருந்து வந்து வாகனங்களை அறுப்பவர்கள் கூறுகின்றனர். இராணுவம் இதற்கு அனுமதி வழங்கியுள்ளது என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், விலைமனுக்கோரவில்லை என்று அரச அதிபர் கூறுகின்றார்.

தமிழர்களால் கைவிடப்பட்ட வாகனங்களை சுவீகரிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்துள்ளதா என்ற விடயத்தை அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

தமிழர்கள் தங்களின் வாகனங்களை மீளத்தருமாறு கோருகையில், அவர்களிடம் ஆவணங்கள் கேட்கப்படுகின்றன. ஆனால், தென் பகுதியிலிருந்து வந்து வாகனங்களை அறுத்து எடுத்துச் செல்பவர்களிடம் ஆவணங்கள் கோரப்படுவதில்லை. போரால் தமிழ் மக்கள் அனைத்துவித ஆவணங்களையும் இழந்துள்ளனர். இந்நிலையில், அவர்களால் எப்படி ஆவணங்களை காட்டக்கூடியதாக இருக்கும்?

இசற் புள்ளி பிரச்சினை இன்று பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்கொலை நிலைக்குக் கூட மாணவர்கள் சென்றுள்ளனர். எனவே, இந்த விடயம் குறித்து முழுநாள் விவாதமொன்று நடத்தப்பட வேண்டும்- என்றார். (ச-சி)

---

**இசற் புள்ளி விவகாரம்**

# மாணவருக்குப் பாதிப்பின்றி நடவடிக்கை எடுக்கப்படும்

கொழும்பு, ஓக.9

இசற் புள்ளி விவகாரத்தில் மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்று உயர்கல்வி பிரதிஅமைச்சர் நந்திமித்ர ஏக்கநாயக்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இசற் புள்ளி விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை விடுத்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இசற் புள்ளி தொடர்பான பிரச்சினையை சுமுக மான முறையில் தீர்ப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலையிட்டு உறுதியான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

முதலில் வெளியிடப்பட்ட இஸற் புள்ளி உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கிணங்க ரத்துச் செய்யப்பட்டுள்ளது. எனவே, குறித்த இசற் புள்ளிக் கணிப்பீட்டு முறையினூடாக எத்தனை மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியிருந்தனர் என்பதைக் கூறமுடியாதுள்ளது.


இசற் புள்ளி பிரச்சினை தொடர்பாக அமைச்சர்கள், துணைவேந்தர்கள் மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினரையும் அழைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளார். உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கமைய இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பழைய மற்றும் புதிய இஸற் புள்ளிகளின் படி பல்கலைக்கழகம் செல்வதற்கு எதிர்பார்த்திருந்த சுமார் 6 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எனினும், இசற் புள்ளி விவகாரத்தைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றன- என்றார். (ச)

---



மொனராகலை அபிவிருத்திக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு வருகைதந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர்கள், அதிகாரிகளுக்கு வணக்கம் தெரிவிக்கின்றார்.

---

# இசற் புள்ளி பிரச்சினைக்கு பதிலளிக்க உயர்கல்வி அமைச்சர் அஞ்சுவது ஏன்?

**கேள்வியெழுப்புகிறார் ரணில்**

கொழும்பு, ஓக.9

இசற் புள்ளி விவகாரத்தில் அரசு தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இசற் புள்ளிப் பிரச்சினைக்குப் பதிலளிப்பதற்கு உயர் கல்வி அமைச்சர் அஞ்சுவது ஏன் என்று அவர் கேள்வியெழுப்பினார்.

'இசற் புள்ளிப் பிரச்சினை குறித்து நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இசற் புள்ளி தொடர்பில் அரசின் தவறான செயற்பாடு காரணமாக அது இன்று பெரியதொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை அமைத்து தீர்வைக் காணுமாறு ஆரம்பத்திலேயே நாம் அரசிடம் கோரிக்கை விடுத்தோம். ஆனால், அரசு அதைச் செய்யவில்லை.

இதனால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடி நீதிமன்றம் செல்லவேண்டியதொரு நிலை ஏற்பட்டது. இசற் புள்ளிப் பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வைக் காண அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக அது இஸற் புள்ளி விவகாரத்தில் தான்தோன்றித்தனமாகவே செயற்படுகின்றது.

இந்த இசற் புள்ளிப் பிரச்சினையால் மாணவர்களின் எதிர்பார்ப்புகள் திசை திரும்பியுள்ளன. பரீட்சைகள் மீது நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட மாணவர்களை மீட்டெடுப்பது எம் அனைவரினதும் பொறுப்பாகும்.

இசற் புள்ளிப் பிரச்சினைக்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று தான் நாம் கேட்கின்றோம். ஆனால், இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கவேண்டிய உயர்கல்வி அமைச்சர் சபையில் இல்லை.

இந்தக் கேள்விக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள சம்பந்தப்பட்ட அமைச்சரிடமிருந்தே நாம் பதில்களை எதிர்பார்க்கின்றோம். ஆனால், அவர் இங்கில்லை. இஸற் புள்ளிப் பிரச்சினைக்குப் பதிலளிப்பதற்கு உயர்கல்வி அமைச்சர் அஞ்சுவது ஏன்? சபையில் கேள்விகளை எழுப்பும்போது அது சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்க வேண்டும் என்பது சம்பிரதாயமாகும் - என்றார்.

இதன்போது எழுந்த ஆளுந்தரப்பு பிரதம கொரடா அமைச்சர் தினேஷ் குணவர்தன, அமைச்சரொருவர் இல்லாத பட்சத்திலோ அல்லது அவர் வெளிநாடு சென்றிருந்தாலோ அந்த அமைச்சின் பிரதி அமைச்சர் பதிலளிக்கலாம். இதுவும் சம்பிரதாயமாகும். அத்துடன், அவர்தான் பதில் அமைச்சராகவும் செயற்படுவார். உயர்கல்வி அமைச்சர் பட்டமளிப்பு நிகழ்வொன்றிற்காக சென்றிருப்பதால் அவரால் பிரசன்னமாக முடியவில்லை என்று கூறினார். இதனையடுத்து எழுந்த ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறும் திகதிகளில் நிகழ்வுகளுக்கு திகதி வழங்கப்படுவதில்லை என்ற விடயத்தைச் சுட்டிக்காட்டி உள்ளார். (ச-சி)

---

# ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 93 பேர் பொலிஸாரால் கைது

கொழும்பு,ஓக.9

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த 25 பேர் பேருவளை, பண்டாரவத்தைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் மூன்று பெண்கள் உட்பட 21 தமிழர்களும் உள்ளடங்குகின்றனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். கைது செய்யப்பட்டவர்களில் நான்கு சிங்களவர்களும் அடங்குகின்றனர். இவர்கள் மங்கொன, கல்கிஸ்ஸை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர் என்று பொலிஸார் கூறினர்.

மொரட்டுவ பகுதியைச் சேர்ந்த சிங்களவர் ஒருவரே இவர்களைப் படகில் ஆஸ்திரேலியா அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. ஆஸ்திரேலியா தப்பிச் செல்ல முயன்ற குழுவில் அக்குரண பகுதி முஸ்லிம் ஒருவரும் உள்ளடங்குகிறார்.

சந்தேகநபர்கள் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, காலி மாவட்டத்தின் கரையோரப் பகுதியான கொஸ்கொடப் பகுதியில் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்றனர் எனக் கூறப்படும் 68 பேர் நேற்று புதன்கிழமை காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படை பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார். கைதுசெய்யப்பட்டவர்களில் 2 பெண்களும் 3 சிறுவர்களும் உள்ளடங்குவதாக அவர் கூறினார். (ச)

---

## ஐ.தே.க. தலைவர் பதவி நியமனத்தை இடைநிறுத்த உத்தரவு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவி 6 வருடத்துக்கு ஒருமுறை நியமிக்கப்பட வேண்டும் என்று அக்கட்சியின் மத்திய செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு கல்கிஸை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி மைத்திரி குணரத்ன தாக்கல் செய்த மனுவை நேற்று புதன்கிழமை பரிசீலித்த கல்கிஸை மாவட்ட நீதிபதி பிரியந்த பெனாண்டோ இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த ஜூலை 19 ஆம் திகதி இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மத்திய செயற்குழுக் கூட்டத்தில், ஐ.தே.க. தலைவர் தெரிவு 6 வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் என்று எடுக்கப்பட்ட தீர்மானம் கட்சியின் யாப்புக்கு முரணானது என்று மைத்திரி குணரத்ன மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

---

# இந்தியாவை விடுத்து இனிமேல் சீனாவிடம் பஸ் இறக்குமதி

கொழும்பு, ஓக.9

இந்தியாவிடம் இருந்து பஸ்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக சீனாவிடம் இருந்து இறக்குமதி செய்யப்போவதாக இலங்கை போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பேச்சு நடத்தப் போவதாக அவர் கூறியுள்ளார்.

தற்போது போக்குவரத்துச் சபைக்குத் தேவையான பஸ்களை இந்தியாவின் அசோக் லேலன்ட் நிறுவனமே வழங்கி வருகிறது.

இந்தநிலையில் முதல்முறையாக சீனப் பஸ்களை இறக்குமதி செய்யத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் மோட்டார் வாகன தொழில் நுட்பத்துறை வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. இந்தியாவின் அசோக் லேலன்ட் நிறுவனம் பஸ்களை கடனுக்கு வழங்குவதில்லை. சீன நிறுவனம் கடனுக்கு பஸ்களை வழங்கத் தயாராக உள்ளது என்று அவர் கூறினார்.

கொழும்பில் விரைவில் இரண்டு இரட்டைத் தட்டு பஸ்களை இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது வெற்றிபெற்றால், மேலும் பல பஸ்கள் இறக்குமதி செய்யப்படும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ச)

## நயினாதீவு ஆயுள் வேத வைத்தியசாலை

நயினாதீவில் ஆயுள்வேத வைத்தியசாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கென புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆயுர்வேத அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கட்டடம் அமைக் கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-7)

**வீடும் காணியும் விற்பனைக்குண்டு**

சங்குவேலி வடக்கு, மானிப்பாயில் 7½ பரப்புக் காணியும் சகல வசதிகளுடன் கூடிய வீடும், கிண றும் விற்பனைக்குண்டு. அத்துடன் 12 பரப்பு காணியும் பயன்தரும் மரங்களுடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இராஜேந்திரா
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
தொ.பே.: 077 137 0807
078 301 4567
(21441)(5-6)

## மின் தடைப்பட்டு நான்கு நாள்கள் சீர் செய்ய நடவடிக்கை இல்லை

வடமராட்சி, ஓக.9

குடத்தனை மாளிகைகாடு கிராமத்துக்கான மின் விநியோகம் தடைப்பட்டு நான்கு நாள்களாகியும் இன்னமும் சீர் செய்யப்ப டவில்லை என அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராமத்துக்குச் செல்லும் இரு மின் வழிகளில், ஒருமின் வழியில் மின்சாரம் வராது தடைப்பட்டுள்ளது. இதனால் இக்கிராமத் தைச் சேர்ந்த ஒரு பகுதி வீடுகளுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உயர்தர பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும் இன்னும் சில வாரங்களில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறவுள்ள நிலையிலும் மின்சாரம் இன்மையால் மாணவர்கள் படிக்கமுடியாமல் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மின்தடை குறித்து மின்சார சபையின் வடமராட்சி அலுவல கத்துக்கு தெரிவிக்கப்பட்டும் திருத்தப்படவில்லை எனத் தெரிவிக் கப்படுகின்றது. (ம-8)

**ஸ்ரீவிக்னேஸ்வரா முன்பள்ளிக்கு ஆசிரியர் தேவை**

எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:

* கணிதம், தமிழ் உட்பட O/L 6 பாடங்கள் சித்தி
* முன்பள்ளி கற்பித்தல் அனுபவம் / கற்கைநெறி சான்றிதழ்
* ஓரளவு ஆங்கில அறிவுடையவராயிருத்தல் விரும்பத்தக்கது.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20.08.2012க்கு முன்பதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

சுகதாசன் அன்புக்கரசி
விக்னேஸ்வரா வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
தொ.பே. 021 7911 854,
077 4249 071
(21450)) (45.6)

**விற்பனைக்கு**

80அடி நீளமான தகரப் பந்தல் தனியார் கல்வி நிறுவனத்துக்கு உரிய தளபாடங்கள்(30சோடி வாங்கு, மேசை) மலிவாக உடன் விற்பனைக் குண்டு. (21477)(5-6) தொ.பே.: 077 662 4396

**விற்பனை நிலையம் வாடகைக்குண்டு**

இயங்கு நிலையிலுள்ள கணினிகள், போட்டோ பிரதி இயந்திரம், web browsing, mobile phone உதிரிப்பாக விற்பனை நிலையம் ஒன்று வாடகைக்குண்டு.
தொடர்பு: 075 6595 020
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.
(21449) (45.6.)

நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபை

## விசேட பொதுக் கூட்டம்

**இடம்** : பூர்வீக நாகதம்பிரான் ஆலயம், நாகர்கோவில்.
**காலம்** : 19.08.2012 ஞாயிற்றுக்கிழமை.
**நேரம்** : பி.ப 2.00 மணி

**தலைவர் :** திரு. ந.திருலிங்கநாதன்,
(பிரதேச செயலர், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி)

**நிகழ்வுகள்**

1. தேவாரம்
2. தலைமையுரை
3. திரு. சி.இராஜறஞ்சன் - தலைவர், ஆலய பரிபாலனசபை அவர்கள் ஆலயத்தின் தற்போதைய நிலை பற்றி விளக்கமளிப்பார்.
4. பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் திரு. பூ.சஞ்சீவன் அவர்கள்ஆலய அபிவிருத்தி தொடர்பாக கருத்துரை வழங்குவார்.
5. எதிர்வரும் புரட்டாதி மாதம் நடைபெறவிருக்கும் திருவிழாக்கள் தொடர்பான கலந்துரையாடல்.
6. வேறு விடயங்கள்.
7. நன்றியுரை.

**குறிப்பு : கப்பல் திருவிழா, வேட்டைத்திருவிழா, சப்பறத் திருவிழா, கடல் திருவிழா உபயகாரர்களை தவறாது சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

*சி.இராஜறஞ்சன், தலைவர், பூர்வீக நாகதம்பிரான் ஆலய பரிபாலனசபை, நாகர்கோவில்.*
(ச/2185)(6)



பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி
எமது காட்சியறையில்
சரவணா ரெக்ஸ்
Saravana text
யாழ்நகரில்
சரவணா ரெக்ஸ் களஞ்சிய சாலை
சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
(கெங்காதரன் மருத்துவமனை அருகில்)
வடமராட்சியில் 171, பிரதான வீதி,
நெல்லியடி (சம்பத் வங்கி அருகில்)
(ச/2132)(6-7-8)

GlaxoSmithKline

**சூடான, குளிரான, இனிப்பான அல்லது உவர்ப்பான ஏதேனும் ஒன்றை உட்கொள்ளும் சமயங்களில் பற்களில் உணரப்படுகின்ற வலிக்கு கூர்உணர்ச்சியினாலேயே ஏற்படுகின்றது.**

இது பற்களின் ஆழமான உட்பகுதியிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்றது






பற்களில் எனாமல் அரிக்கப்பட்டு பற்களின் நரம்பைச் சூழ நடுவிலுள்ளமென்மையான பகுதி வெளிப்படுவதால் கூர்உணர்ச்சி ஏற்படுகின்றது. சென்சொடைன் பற்களின் அடிப்பகுதிக்குள் ஆழமாகச் சென்று கூர்உணர்ச்சி கொண்ட பற்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது. சென்சொடைன் உபயோகித்து தினசரி இருதடவைகள் பல்துலக்குவதால் கூர்உணர்ச்சிக்கு தொடர்ச்சியான நிவாரணம் கிடைக்கின்றது.

50 கிராம் - ரூபா 220 100 கிராம் - ரூபா 420

GREY

தொடர்ச்சியான பலனுக்கு தினசரி இரு தடவைகள் சென்சொடைன் பற்பசையை உபயோகித்து பல்துலக்கவும்




5 மாவட்டங்களிலும் பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# மீனவர்கள் என்னுடன் ஒன்று சேர்ந்தால் கச்சதீவு மீட்புக்குப் போராடத் தயார்

## விஜயகாந் சூளுரை

மீனவர்கள் ஆளும் கட்சிக் குப் பயப்படாமல் ஒன்றுசேர்ந்து என்னோடு வந்தால் கச்சதீவை மீட்க கடலில் இறங்கிப் போரா டத் தயாராக இருக்கிறேன் என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் சூளுரைத்துள்ளார்.

கச்சதீவை இலங்கையிட மிருந்து மீட்டால் மட்டுமே தமி ழக மீனவர்களின் பிரச்சினைக் குத் தீர்வைக் காண முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

தே.மு.தி.க. கட்சி சார்பில், இராமநாதபுரம் அரண்மனை முன்பாக நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்குகொண்டு உரை யாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் போர் முடி வுற்ற பின்னரும், இன்றுவரை அந்தநாட்டு கடற்படையின் அட்டூழியத்துக்கு அளவே இல்லாமல் போய்விட்டது. தமிழக முதல்வர் பிரதமருக் கும் பிரதமர் இலங்கை ஜனாதி பதி மஹிந்தவுக்கும் கடிதம் எழுதத்தான் செய்கிறார்களே தவிர, இலங்கை இராணு வத்தின் அத்து மீறல்களைத் தடுக்க முடியவில்லை.

கச்சதீவை மீட்டால் தான் தமிழக மீனவர்களின் பிரச்சி னைகளுக்குத் தீர்வு ஏற் படும். கச்சதீவு ஒப்பந்தத்தை இலங்கை மீறிக் கொண்டிருப் பதை மத்திய அரசு தட்டிக் கேட்கவே இல்லை. மீன வர்கள் என்னுடன் ஒற்றுமை யாகவும், ஆளும் கட்சிக்கு பயப்படாமலும் வந்தால் கச்சதீவை மீட்கும் வரை போராடி அதனைத் திரும் பப் பெற்றுத்தர முடியும்.

ஆளும் கட்சிக்கு பயப் படவேண்டும் என்று நினைக் கின்றனர். என்னை கைது செய்யப் பார்க்கிறார்கள். என் மீது வழக்குப் போட்டிருக்கின் றனர். ஆனால், நான் யாருக் கும் பயப்படமாட்டேன். ஏனென் றால் நானோ எனது கட்சித் தொண்டர்களோ யாரிடமும் நிதி கேட்டுப் போகவில்லை. எந்த வழக்கையும் சந்திக் கத் தயாராக இருக்கிறேன்- என்றார். (வ)

# தினை விதைத்தவன் தினை அறுப்பான்

எண்ணங்கள் ஆகாயத்தை விட விசாலமானவை. எல்லாச் சக்திகளையும் விட அதிகமான சக்தி கொண்டது. மின்சக்தியை விடவும் மிக நுணுக்கமானது. அவைகளை நாம் ஒன்றாகக் காண முடியாவிட்டாலும் அதன் பலன்களை அனுபவிப்பதிலிருந்து தப்பமுடியாது. நல்லெண்ணங்களை வளர்ப்பதுதான் இன்று மிகவும் உயர்ந்த கல்விப் போத னையாகும். நமது எண்ணங்களுக்கேற்பவே நாம் பலன் களை அனுபவிக்கிறோம் என்ற உண்மையை உணர வேண்டும். நாம் நச்சு விதைகளை விதைத்துவிட்டு அதி லிருந்து இனிய கனிகளைப் பெறவேண்டுமென எதிர் பார்க்கிறோம். இப்படிப்பட்ட நஞ்சை விதைத்து அதனால் எதிர்பார்த்த நற்பலன்கள் கிட்டவில்லையே என்று பிறரை நிந்திக்க முற்படுவதுடன் கடவுளையும் குறைகூறத் தயங்குவதில்லை. உங்களுக்குக் கிடைக்கும் கசப்பான அனுபவங்களெனும் கனிகள் நீங்கள் விதைத்த விதை களினால் கிட்டியவையே என்பதை மறந்து அந்தக் கசப்பான அனுபவத்தைக் கொடுத்ததற்காகக் கடவுளையும் நிந்திக்க முற்படுவது எவ்வளவு மதியீனம். நல்ல விதைகளை விதைத்தால் நல்ல பலன்களைப் பெறலாம்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லை ஆதீன குருமூர்த்தி மண்ட பத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு 'கானகதா வாரிதி' பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் 'தாரகன் வதம்' இடம்பெறவுள்ளது. (வ)

* * *

துர்க்கா மணி மண்டபத்தில் நடை பெறும் தெய்வீக இசையரங்கில் பதி னேழாம் திருவிழாவான இன்று மாலை 6.30 மணிக்கு வயலின் கச்சேரி நடை பெறவுள்ளது. வயலின் - எஸ். கோபி தாஸ், கே. குகபரன், மிருதங்கம்- கே. கண்ணதாசன், கடம் - பிரம்மஸ்ரீ சிவ சுந்தரசர்மா. (வ-14-86)

* * *

நடராசா பரமேஸ்வரி மணி மண்ட பத்தில் இன்று மாலை6.30 மணிக்கு சைவப் புலவர் பொன். சுகந்தன் "யாமிருக்கப் பயமேன்" என்ற கருப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். (வ)

* * *

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு காரை எம்.பி. அருளானந் தன் 'இந்துமதம் காட்டும் ஆன்மீகம்' என்னும் கருப்பொருளில் சொற் பொழிவு நிகழ்த்துவார். தொடர்ந்து மூளாய் ஞான ஒளி அறநெறிப்பாட சாலை, நயினாதீவு அமுதசுரபி அற நெறிப் பாடசாலை ஆகியவற்றின் கலைநிகழ்வுகளும், சிறப்பு நிகழ்ச்சி யாக திருமதி அன்னலட்சுமி தன பாலசிங்கம் நிகழ்த்தும் பக்திப் பாடல் இடம்பெறும். (வ-7-86)

# இலவச ஆங்கில பயிற்சி நெறி

உயர்கல்வி கற்கவிரும்பும் உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கான ஆங்கிலப் புலமைப் பரிசில் பயிற்சி நெறி எதிர்வரும் செப்ரெம்பர் 6 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 30 ஆம் திகதி வரை இல.159, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமெரிக்க தகவல் கூடத்தில் நடைபெறவுள்ளது. இந்த பயிற்சி நெறி வகுப்புக்கள் வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை நடைபெறும்.

மேற்படி பயிற்சி நெறிக்கான அனுமதிப் பரீட்சை செப்ரெம்பர் முதலாம் திகதி முற் பகல் 9 மணிக்கு அமெரிக்க தகவல் கூடத் தில் நடைபெறவுள்ளது.

பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் மேற் படி அமெரிக்க தகவல் கூடத்தில் ஒருங் கிணைப்பாளருடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளமுடியும். (வ)

# இலங்கை அகதி மனநிலை ஆஸி.முகாமில் பாதிப்பு

ஆஸ்திரேலியாவின் விலா வுட் முகாமில், இலங்கை அகதி ஒருவருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட் டுள்ளது. பிரதீப் என்ற இலங் கைத் தமிழ் அகதிக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக் கப்படவில்லை என்று முகாம் அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரதீப்பின் சகோதரரும், சட்டத்தரணியும் இந்தக் குற் றச்சாட்டை முன் வைத்துள்ள னர். பிரதீப் உளநிலை பாதிப் பினால் பாதிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கின்றனர்.

அவருக்குத் தேவை யான மருத்துவச் சிகிச்சைகளை அரசு வழங்கத் தவறியுள்ளதாக வும் இதனால் அவருக்குமனை யோருக்கும் பாதிப்பு ஏற்படக் கூடிய அபாயம் நிலவி வரு வதாகவும் தெரிவித்துள்ளனர்.

தலையில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும் இதனால் அவரது மூளையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப் பிட்டுள்ளனர். இதேவேளை பிரதீப், விடுதலைப் புலிகளு டன் தொடர்பு கொண்டிருக் கலாம் என்று ஆஸ்திரேலிய அதிகாரிகள் சந்தேகம் வெளி யிட்டுள்ளனர். (வ)

சலோன் ஆயிஷா அழகு நிலையம்
(SALON Aysha)

றம்ழான் பண்டிகையை முன்னிட்டு விசேட சலுகையை (10.08.2012) வெள்ளிக்கிழமை தொடக்கம் (25.08.2012) சனிக்கிழமை வரை உங்களுக்கு வழங்குகின்றது சகலவிதமான Facial (Gold facial) உட்பட 1000/= ரூபாவுக்கு.......

தொடர்பு: 077 8022 844,
077 1041 088,
077 8926 236.

(21473)) (46.8)

கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட " A ' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே : 077 8996085

(21061) (7.)

வைத்தியசாலை நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆள்சேர்ப்பு

யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்.ஜோன் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கு ஆண், பெண் இருபாலாரும் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளனர். நாள் ஒன்றுக்கு ஆண் பராமரிப்பாளர் ஒருவருக்கு ரூபா 1000/= வழங்கப்படும்.

இச் சேவையில் சேர விரும்புவோர் எதிர்வரும் 12.08.2012 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள சென்.ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்துக்கு நேரில் சமுகம் தரவும்.

மேலதிக விவரங்களுக்கான தொடர்பு இலக்கம்:021 321 4444
24 மணிநேர அம்புலன்ஸ் சேவைக்கான இலக்கம் 021 321 4444

சென்.ஜோன் அம்புலன்ஸ், யாழ்.மாவட்டம்.

(21438/) (2-6-)

# கைதடி முதியோர் இல்லத்துக்கு லயன்ஸ் கழகத்தால் பொருள்கள்

யாழ். லயன்ஸ் கழகத்தினால் கைதடி முதியோர் இல்லத் துக்கு 18 இலட்சம் ரூபா செலவில் 50 கட் டில்களும், 30 காற்று மெத்தைகளும் அன் பளிப்பாக வழங்கப் படவுள்ளன. இந்தப் பொருள்கள் கைய ளிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற் பகல் 10 மணியள வில் நடைபெறவுள் ளது.


மாவட்ட ஆளு னர் லயன் எஸ்.எஸ். தங்கராசா பிரதம விருந்தினராகக் கலந்து மேற்படி பொருள்களை வைபவ ரீதியாக கையளிப் பார். மேற்படி உத வித் திட்டத்துக்கு பிரான்ஸ் ஐயப்பன் ஆதீனமும் பிரான் ஸைச் சேர்ந்த இந் திரஜித் குடும்பமும் அனுசரணை வழங்கி யுள்ளதாக யாழ். லயன்ஸ் கழகத் தலை வர் கு.ஜெயந்தன் தெரிவித்தார்.

(வ)

# மரண அறிவித்தல்

## கைலாசபிள்ளை சீவரத்தினம்

(பிரபல பலசரக்கு வியாபாரி - கடைமாமா)



கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை சீவரத்தினம் (03.08.2012) வெள்ளிக்கிழமை நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மூத்தாம்பி - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் ருக்கு மணியின் அன்புக் கணவரும், பவானி (இத்தாலி), ரகுநாதன் (நோர்வே), சௌந்தர நாதன் (நோர்வே - ரவி), ஏகலநாதன் (நாந்து - நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், குகதாசன் (இத்தாலி), சுகிர்தலக்ஷ்சுமி, தேன்மதி, ஜெகதீஸ்வரி (நோர்வே) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, நாகரத்தினம் ஆகி யோரின் அன்புச் சகோதரனும், இராமலிங்கம், சோமசுந்தரம், செல்லமுத்து, நல்லம்மா, ராச்குமார் ஆகியோரின் மைத்துனரும், தனுஷன், றாம்ஷன், ஜனுஷா, அக்ஷயன் சஜிதா, மிதுசன், அபிதாஸ், சிராம் ஆகியோரின் பேரனுமாவார். அன் னாரின் இறுதிக்கிரியைகள் நோர்வேயில் இன்று (09.08.2012) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராமலிங்கம் லோகநாதன்
(மருமகன்- இளைப்பாறிய நீதிமன்ற உத்தியோகத்தர்- மல்லாகம்.)

கச்சேரியடி,
யாழ்.

(20545) (45.6.7)

காணி விற்பனைக்கு

K.K.S.வீதியிலிருந்து முத்தெட்டு மடம் வீதியில் 100மீற்றர் தூரத்தில் வீதி ஓரமாக 2 பரப்புக்காணி விற்ப னைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு.: 077 717 9643

(21447)(5-6)

விற்பனைக்கு

NP-LI xxxx எனும்
இலக்கமுடைய TATA 709
கன்ரர் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 902 5987

(21446(5-6)

## கைத்தொலைபேசிப் பாவனையால் அதிகம் பாதிக்கப்படுவது...

# ஆண்களா? பெண்களா?



மனித வாழ்வுக்குத் தேவையான வசதிகள் எதுவுமே அளவாக இருந்துவிட்டால் நமக்கு ஆபத்து இல்லை. ஆனால் அதுவே அளவுக்கதிகமாக காணப் பட்டால் வாழ்க்கை படுகுழியை நோக்கித்தான் போகும்.

கைத்தொலைபேசி அவசியமானதுதான், ஆனால் பெண்கள் அதனை அநாவசியமான செயற்பாடுகளுக் குப் பயன்படுத்தித் தாமே தம் வாழ்வையும் பொன் னான எதிர்காலத்தையும் தொலைத்துவிடுகின்றனர்.

அகப்பை பிடித்து அடுப்பங்கரையில் ஒதுங்கிய பெண்களின் கரங்களிலும் இன்று காணப்படுவது கைத்தொலைபேசிகள். பல்வேறு காரணங்களுக்காக வெளியில் செல்லும் பெண்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்த கைத்தொலைபேசிகளைப் பயன் படுத்தலாம். ஆனால் பல பெண்கள் கைத்தொலை பேசியால் தமக்குத்தாமே பிரச்சினையை ஏற்படுத் திக்கொள்கின் றனர்.

கைத்தொலைபேசிகளுக்குத் தவறான அழைப்பு கள் வருவது சகஜம். அவ்வாறு வரும் அழைப்புக ளைத் துண்டித்துவிட வேண்டும். ஆனால் சில பெண்கள் அவ்வாறு வரும் அழைப்புகள் மூலம் நன்கு உரையாடுகின்றனர். மறுபுறத்தில் கதைப்பவர் யார்? நல்லவனா? கெட்டவனா? திருமாணமான வனா? என்பதையெல்லாம் கொஞ்சம்கூட எண்ணிப் பார்ப்பதில்லை.

ஒவ்வொரு பெண்ணும் தன்வாழ்வைச் சிறப்பாக வாழ வேண்டும் எனில் கைத்தொலைபேசிப் பாவனை யைக் முடிந்தளவு குறைத்துக் கொள்ள வேண்டும். அதுமட்டும் போதாது தவறாக வரும் அழைப்புகளு டன் உரையாடுவதை நிறுத்த வேண்டும். தேவையில் லாமல் ஆண்களுடன் கைத்தொலை பேசியில் பேசு வதையும் நிறுத்த வேண்டும். இவ்வாறு பெண்கள் விழிப்புடன் நடந்து கொண்டால் பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள பிரச்சினைகள் குறைய வாய்ப்புண்டு.

ஆ.வதனா, கரவெட்டி.

**கைத் தொலைபேசியை ஏன் வாங்கிக் கொடுத்தோம் என்ற எண்ணத்தை பெற்றோர் மனதில் ஏற்படுத்தி விடக்கூடாது. கைத் தொலைபேசியினூடாக ஆண்களும், பெண்களும் பாதிக்கப்படுகின்றனர். காரணம் அவர்கள் கட்டுப்பாடு இன்றிப் பயன்படுத்துவதே**

# விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

கைத்தொலைபேசி
பாவனையால்
அதிகம் பாதிகப்படுவது
ஆண்களா?
பெண்களா?



தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

## அன்பின் வழியது உயர்நிலை

அன்பு என்பது ஓர் அட்ஷய பாத்திரம் போன்றது. அது அள்ள அள்ள குறையாதது அன்பு. வசப்பட்ட நிலையில் அதிர்கின்ற ஒவ்வொரு செக்கன் உயிர்த்துடிப்பும் இன்ப மானதே. இதனாலேயே ''அன்பிலார் எல்லாம் தமக் குரியர் அன்புடையர் என்பும் உரியர் பிறர்க்கு'' என்று அன்பின் உச்சக்கட்டத்தை ஆணித்தரமாக வள்ளுவர் தனது திருக்குறளில் எடுத்துக் கூறுகின்றார்.

ஒரு மனிதனிடத்தில் அன்பு இல்லாவிடின் அவன் உலகத்திலுள்ள உயிருள்ள உயிரற்ற அனைத்தையும் தனக்குரியதாக்கிக்கொள்வான். ஆனால் அன்பு என்கின்ற அமுதம் ஒருவன் உள்ளத்தில் குடிகொள்ளுமானால் அவன் தன் எலும்புகூட பிறர்க்கே உரியது என்று எண்ணிவிடுவான்.

ஒரு தாய் தன் பிள்ளை மீது காட்டுகின்ற அன்பானது பாசம் எனவும், ஒரு சிநேகிதன் இன்னொரு சிநேகிதன் மீது காட்டுகின்ற அன்பானது நட்பு எனவும், கணவன் மனைவி மீது காட்டுகின்ற அன்பு காதல் எனவும், ஆன்மா இறைவன் மீது காட்டும் அன்பு பக்தி எனவும் இறைவன் ஆன்மாக்கள் மீது காட்டுகின்ற அன்பானது கருணை என வும் கூறப்படுகின்றது.

'' உயிர்களிடத்தில் அன்பு வேண்டும். இதை உண்மை என்று தானறிய வேண்டும்'' என்று பாடினார் மகாகவி பாரதியார். சிறிய புறா மீது சிபிச்சக்கரவர்த்தி காட்டிய அன்பு உலகையே வியக்க வைத்தது. பசு படுகின்ற துன்பத் தைப் போல் தானும் பட வேண்டும் என்று தன் ஒரே யொரு மகனையே தேர்க்காலில் இட்டு மனுநீதிச் சோழ மன்னன் கொன்றான் என்றால் அன்பின் உயர்நிலைக்கு எடுத்துக்காட்டு இதைவிட வேறில்லை.

எனவே ஒரு மனிதன் மனிதனாக வாழ வேண்டு மெனில், அவன் வாழ்வில் வசந்தம் வர வேண்டு மெனில், அவன் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை இன்பத் தென்றல் வீச வேண்டும் எனில் அன்பு வழி வாழ வேண்டும். அதுவே அவனை உயர்நிலைக்கு இட்டுச் செல்லும்.

போ.சித்திரா
மானிப்பாய்.

## சிதைக்காதே




துரும்பில் இருந்தாவது
துளிர்விடும்
கிளை பரப்பும்
விழுது விடும்
எம் சமூகம்

பாதுகாக்கத்தான்
முடியவில்லை
கஞ்சி குடித்தாவது இரு!
எச்சில் இலைகளுக்காய்
சிதைக்காதே!
உன் சமூகத்தை நீயே!

எஸ்.வை. சசிகரன்
அச்சுவேலி.

## சுகமாகும் சுமை



வியர்வைத் துளிகள் பூக்கும்
வேதனைத் துளிகள் கசக்கும்
சுவைகள் மாறுபட்டாலும்
உணவின்றி வாழமுடியாது
தடைகள் ஏற்பட்டாலும்
தாங்கிப் பழகும்
இதயம் வேண்டும்
தாக்கங்களைத் தலையிலும்
தோல்விகளை தோளிலும்
தூக்கிப் போட்டுவிட்டால்
சுமைகளும்
சுகமாகும் உனக்கு

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.



## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக் கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களை யும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-........................
முகவரி :- ........................
..........................................
.................... ....................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## விடியலை நோக்கி...

விழித்தெழு!
உன்னால் முடியும்
தாழ்ந்து விடாதே!
விண்ணைத் தொடு
விடியலின் பொழுதுக்காய்
நாளை அல்ல
இன்றே செயற்படு!
காற்றைக் கிழித்து
புயலாய் சென்றிடு

இனியும் தூங்காதே
புது யுகம் எழுது!
உனக்காக அல்ல.
இனிவரும் இளைய
சமுதாயத்திற்கான
விடியலை நோக்கி.....!

சு.லக்ஸ்சனா,
கெற்பேலி மத்தி,
மிருசுவில்.

# மும்மொழிக்கொள்கை நடைமுறையில் இருந்தும் தனிச் சிங்களத்தில் அமைச்சில் இருந்து செய்தி

## மின்வலு சக்தி பிரதி அமைச்சர் 'உதயனு'க்கு அனுப்பி வைத்தார்

யாழ்ப்பாணம், ஓக.9

நாட்டில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் மும்மொழிக்கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தால் அறிவிக்கப்பட்ட நிலையில் மின் வலு சக்தி பிரதி அமைச்சர் 'எரிசக்தி சிக்கனம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த பங்களிப்புத்தேவை என உதயனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் தனிச் சிங்களத்தில் உள்ளது.

நாட்டில் நல்லிணக்கத்துக்கு சமூகங்களுக்கிடையிலான மொழிப் புரிந்துணர்வு முக்கியமானது. எனவே நாட்டில் மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது அவசியமானது, வடக்கு கிழக்கில் தமிழ் மொழி மூலமான நிர்வாகமே அமைய வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாக மும்மொழிக் கொள்கை மற்றும் இன ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இதன்படி வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு அரசினால் அனுப்பி வைக்கப்படும் அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், சுற்றுநிருபங்கள் தமிழிலும் அமைய வேண்டிய உள்ளது என்பதை அவர் கட்டாயப்படுத்தியிருந்தார்.

இந்த நிலையில் கடந்த 2 ஆம் திகதி மின்வலு சக்தி பிரதி அமைச்சரால் 'உதயனு'க்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் ஒன்று தனிச் சிங்களத்தில் உள்ளது.


அமைச்சர் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக போதிய மழை வீழ்ச்சி கிடைக்காததால் நீர் மின் உற்பத்தி சார்ந்த நீர்த் தேக்கங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகின்றது.

எதிர்வரும் மாதங்களில் கூட வரட்சிக் காலநிலை நிலவக் கூடும் என்பதால் நீர்மின் உற்பத்தியில் பெரும் பாதிப்பு ஏற்படலாம்.

எனவே எரிசக்தி விரயத்தை குறைத்து அதனைச் சிக்கனமாக பயன்படுத்திக்கொள்வது தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த மின்சக்தி அமைச்சும் இலங்கை மின்சார சபையும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இவ்வாறான வீண் விரயங்களை தவிர்ப்பதற்கு மக்களை தயார்ப்படுத்துவது இந்த நாட்டில் உள்ள இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் பொறுப்பும் கடப்பாடும் ஆகும்.




நாட்டு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கை ஒன்று கடந்த ஜூலை 27 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் கொழும்பில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதன் இரண்டாம் கட்ட நடவடிக்கை எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை இரத்தினபுரி சமன் வளாக தேவாலயத்தில் இருந்து இரத்தினபுரி நகரம் வரை நடைபவனி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்றிட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தங்களது ஊடக நிறுவனம் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையில் இந்தச் செய்தியை கருத்தில் எடுத்துக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டிக்கொள்வதோடு இது தொடர்பாக தாங்கள் காட்டி நிற்கும் ஒத்துழைப்புக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன் - என்றுள்ளது.

இவ்வாறு மின்சக்தி பிரதி அமைச்சர் எச்.எல். பிரேமலால் ஜயசேகர கையொப்பம் இட்டு தனிச் சிங்களத்தில் உதயனுக்கு இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். (10-22)

# நல்லூரில் ஓட்டோ சாரதி அடாவடி

யாழ்ப்பாணம், ஓக. 9

நல்லூர், அரசடிச் சந்தியில் நின்று சேவையில் ஈடுபடும் ஓட்டோ ஒன்றின் சாரதி அங்குள்ள புத்தகக் கடை உரிமையாளரை நேற்றிரவு தாக்கி அடாவடித்தனத்தில் ஈடுபட்டார் என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

பாரதியார் சிலைக்கு முன்பாக உள்ள 'ஏ-6' ஓட்டோ தரிப்பு நிலையத்தில் இருந்து நேற்று சேவையில் ஈடுபட்ட ஓட்டோ ஒன்றின் சாரதியே இவ்வாறு அடாவடித்தனத்தில் ஈடுபட்டார் என்று சாட்சிகள் தெரிவித்தன.

நல்லூர் உற்சவத்தையொட்டி ஏற்படுத்தப்பட்டுள்ள வீதித் தடையில் பொலிஸார் கடமையில் இருக்கும்போதே ஓட்டோ சாரதி இந்த அடாவடித்தனத்தில் ஈடுபட்டுள்ளார். அது குறித்து கேட்டபோது, சம்பவத்தைத் தாம் நேரில் பார்க்கவில்லை என்று பொலிஸார் 'உதயனி'டம் தெரிவித்தனர். சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறையிடுமாறும் அவர்கள் அறிவுரை கூறினர். (உ-01)

# தமிழகத்தில் இலங்கைப் படைக்கு பயிற்சி அளித்தே தீருவோம்

## இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் உறுதி

சென்னை, ஓக.9

இலங்கை விமானப் படையினருக்கு தமிழ்நாட்டில் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் ஆனாலும் தற்போது அங்கு எவரும் பயிற்சி பெறவில்லை எனவும் இந்திய நாடாளுமன்றத்தின் கீழ் சபையில் இந்திய அரசு நேற்றுத் தெரிவித்தது.

நாடாளுமன்றத்தில் எழுத்து மூலக் கேள்விக்குப் பதில் அளித்த ஏ.கே. அந்தோனி இதனைத் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் இலங்கை விமானப் படையினருக்கு பயிற்சிகள் வழங்கப்படுமா என்ற கேள்விக்கு பாதுகாப்பு அமைச்சர் ஆம் என்ற சாரப்பட பதில் அளித்தார்.

தமிழ்நாட்டில் இலங்கைப் படைகளுக்கு பயிற்சி அளிப்பதில் அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு வெளியிட்டு வரும் நிலையில் பாதுகாப்பு அமைச்சின் இந்தப் பதில் வெளிவந்துள்ளது.

"அரசியல் கட்சிகள் தமது கருத்துக்களை பலவாறு வெளியிட்டு வந்தாலும் மத்திய அரசு தேசிய நலனைக் கருத்தில் கொண்டே இந்த விவகாரங்களைக் கையாளும்" என்று அந்தோனி மேலும் தெரிவித்தார்.

அண்மையில் தமிழ்நாட்டில் எழுந்த கடும் எதிர்ப்பை அடுத்து சுமார் 15 இலங்கைப் படையினர் தமிழ்நாட்டில் இருந்து பெங்களூருக்கு மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# கடந்த 3 ஆண்டுகளில் வடக்குக்கு 51ஆயிரம் சுற்றுலாப் பயணிகள்

## சுதந்திரத்தின் வெளிப்பாடே என்கிறார் கோத்தா

கொழும்பு, ஓக.9

கடந்த 2009 போர் முடிவுற்றதற்குப் பின்னர் இது வரையில் வடக்குக்கு 100க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 51 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்துள்ளனர் என பாதுகாப்பு அமைச்சர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

ஓமந்தைச் சோதனைச் சாவடியில் இராணுவப் புள்ளி விவரங்களின் அடிப்படையில் 51 ஆயிரத்து 400 பேர் வெளிநாடுகளில் இருந்து கடந்த 3 வருடங்களில் வடக்குக்குச் சென்றுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் நேற்று ஆரம்பமான பாதுகாப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 2 வருடங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருப்பதைக் காணமுடிகின்றது. இது இனிவரும் காலங்களிலும் அதிகரிக்கும்.

"இந்த வருடத்தில் மட்டும் வடக்குக்கு 31ஆயிரத்து 500 சுற்றுலாப் பயணிகள் சென்றுள்ளனர். இவர்களில் தமது உறவுகளைப் பார்க்க வந்தவர்களும் சொந்த மண்ணைப் பார்க்க வந்தவர்களும் கணிசமான அளவில் அடங்குகின்றனர். இவற்றை அவதானிக்கும்போது இந்த நாட்டில் சுதந்திரம் இருக்கிறது என்பதை உறுதியாக காணமுடிகிறது". என்று கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

**வடக்கிலிருந்து 2009இற்குப் பின்னர் 21ஆயிரம் படையினர் வெளியேற்றப் பட்டனர்.**

வடக்கிலிருந்து 2009க்குப் பின்னர் 21ஆயிரம் படையினர் வெளியேற்றப் பட்டனர். இதேவேளை, தந்திரோபாய ரீதியான காரணங்களுக்காக வடக்கில் படையினர் தொடர்ந்தும் நிலைத்திருப்பர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)



பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் 2012ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு மாநாடு "நீடித்த அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நோக்கி" எனும் தொனிப் பொருளில் நேற்று ஆரம்பமானது. இதில் கோத்தபாய ராஜபக்ஷ மங்கல விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைக்கிறார்.

# ஈழத் தமிழர்களின் நலனுக்காகவே டெசோ இலங்கை தவறாக கருதத் தேவையில்லை

## விளக்கமளிக்கிறார் கருணாநிதி

சென்னை, ஓக.9

டெசோ மாநாடு தமிழீழத்துக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் முயற்சி என்று இலங்கை கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வரும் நிலையில், அயல்நாட்டில் வாழும் தமிழர்களின் நலனைக் கவனிப்பதாக மட்டுமே தாம் மாநாடு நடத்தவுள்ளதாக தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்.

டெசோ மாநாடு இலங்கைக் குடியரசுக்கு எதிரானது என்று கூறி அதனைக்கண்டித்து இலங்கை அரசு வெளியிட்ட கண்டனங்கள் தமக்குக் கிடைத்துள்ளது எனவும் கருணாநிதி தெரிவித்தார்.

"மாநாட்டுக்குச் செல்பவர்கள் கண்காணிக்கப்படுவார்கள் என்று இலங்கையின் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கூறியிருக்கிறார் என்று அறிக்கை கிடைத்துள்ளது. இலங்கை அரசின் அதிகாரிகளும் அமைச்சர்களும் கற்பனைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த மாநாடு இலங்கைத் தமிழர்களின் நலன் பேணாதுஎன்று கருத்து வெளியிடுகின்றனர்.

இந்த மாநாடு இலங்கைத் தமிழர்களின் நலன் பேணுவதை அடிப்படையாகக் கொண்டதே. இந்த விடயத்தை இலங்கை அரசு கவனத்தில் கொள்ளாதது மிகவும் கவலைக்குரியது.

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் உலகெங்கும் பரந்து வாழும் நாம் கேட்டுக் கொள்வதெல்லாம் இலங்கை அரசின் சார்பில் செயற்படும் எதிர்ப்புப்பிரசாரங்களை நம்பாதீர்கள் என்பது தான்- என்று தெரிவித்தார் கருணாநிதி. (உ-10)

# சைக்கிள் திருடன் சிக்கினான்

பலசைக்கிள்களைத்திருடி, விற்ற திருடன் பொலிஸார் விரித்த வலையில் அகப்பட்டுக் கொண்டான். திருடனை கைது செய்த பொலிஸார், திருடப்பட்ட ஐந்து சைக்கிள்களை மீட்டதுடன் இந்தச் சைக்கிள்களை விற்பதற்கு உதவி புரிந்தவரையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

சைக்கிள் திருட்டுக்கள் குறித்து மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து, பொலிஸ் அதிகாரி சந்தன தலைமையில் சென்ற கான்ஸ்டபிள்கள் ஹரிச்சந்திர, வசீகரன் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்திய போது கடந்த காலங்களில் இடம்பெற்ற சைக்கிள் திருட்டுக்களும் அம்பலத்துக்கு வந்தன. இருவரும் தொடர்ந்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-115)

# இசைக்கலைஞரை ஒன்றுகூடக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.9

நல்லூர் கந்தசுவாமி ஆலய கார்த்திகைத் திருவிழா நாளை இடம்பெறவுள்ள நிலையில் இசைக் கலைஞர்களை இன்று வியாழக்கிழமை மாலை 5மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கார்த்திகைத் திருவிழா தினத்தன்று வழமை போன்று இசை அர்ச்சனை இடம்பெறவுள்ள நிலையில் தயார்ப்படுத்தலுக்காக ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம)

**வீட்டு வேலையாள் தேவை**

யாழ்ப்பாணம், நல்லூரடியில் அரச உத்தியோகத்தர்களின் வீட்டில் வீட்டு வேலைகள் மற்றும் பிள்ளை பராமரிப்புக்கு வேலையாள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம். வீட்டில் தங்கியிருந்து பணிபுரிவோர் விரும்பத்தக்கது.

தொடர்பு :0750481186



யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் அண்மையில் இடம்பெற்ற வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் சிறந்த தடகள வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்ட வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியைச் சேர்ந்த எம். கமலினிக்கு வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ். அண்ணாத்துறை விருது வழங்குகிறார். (ங-23)


# "உதைபந்தாட்ட விழா- 2012"

## துரையப்பா மைதானத்தில் இன்று

யாழ்ப்பாணம்,ஒக 9

வடமாகாணத்தில் உதைபந்தாட்டத்துறையை வளர்க்கும்முகமாக இன்று வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் "உதைபந்தாட்ட விழா-2012" நிகழ்வு நடைபெறவுள்ளது. வடமாகாணத்தைச் சேர்ந்த உதைபந்தாட்ட அணிகளும், வீரர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு புதிய திசையில் எழுச்சியோடுஉதைபந்தாட்டத் துறையை வளர்த்தெடுப்பதற்காக கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த உதைபந்தாட்ட விழாவில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் வடமாகாணத்தைச் சேர்ந்த லீக் அணிகள் மோதவுள்ளன. முக்கியமான அணிகள் மைதானத்தில் சமராடவுள்ளதால், ஆட்டங்களில் அனல் பறப்பதை ரசிக்க பெருமளவான உதைபந்தாட்ட ரசிகர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.




**காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை இடம்பெறவுள் லீக் அணிகளுக்கிடையிலான விறுவிறுப்பான போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.**

யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், வலிகாம உதைபந்தாட்ட லீக், மன்னார் உதைபந்தாட்ட லீக், வவுனியா உதைபந்தாட்ட லீக், கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் , தீவக உதைபந்தாட்ட லீக் ஆகியவற்றைச் சேர்ந்த அணிகள் இந்த உதைபந்தாட்ட போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன.

இந்தப் போட்டிகள் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். [ங-23]

## ஆவரங்கால் மத்தி, புத்தூர் கலைமதி அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக. 9

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் , புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உரும்பிராய் உதயதாரகை விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

3 செற்களை கொண்ட இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமே ஆரம்பம் முதல் இறுதி வரை மைதானத்தில் ஆதிக்கம் செலுத்தியது.எனினும், உரும்பிராய் உதயதாரகை விளையாட்டுக்கழகம் வெற்றியை இலகுவாகத் தாரை வார்க்கவில்லை. இயலுமட்டும் அந்த அணியும் எதிர்த்து போராடியது. ஆயினும், போட்டி நிறைவில் 25: 19 ,25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில்ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

இந்த ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்தின் அபார ஆட்டத்துக்கு முன்னால் வளர்மதி அணியால் ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால் 25:11 என்ற அடிப்படையில் முதல் செற்றை கலைமதி அணி கைப்பற்றியது. அதே உத்வேகத்துடன் தொடர்ந்தாடிய கலைமதி அணி இரண்டாவது செற்றையும் 25:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கி புத்தூர் வளர்மதி அணியை வீழ்த்தியது. (ங-23)

## பற்றிக்ஸ் 'ஹற்றிக்'

குருநகர் , ஒக 9

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் 50 பந்துப் பரிமாற்றங்களைகொண்ட கிரிக்கெட் போட்டியில் யாழ். சென்.பற்றிக்கஸ் கல்லூரி,தான் கலந்து கொண்ட 3 போட்டிகளிலும்'ஹற்றிக்' வெற்றியீட்டியுள்ளது. இந்தக் கல்லூரி சென். ஜோன்ஸ் கல்லூரி, ஸ்ரான்லி கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய அணிகளுடன் மோதி அவற்றை வீழ்த்தியுள்ளது. (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக.9

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடத்தும் விளையாட்டு விழாவில், ஓர் அங்கமான யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் லீக் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு -

பிற்பகல் 3.30 மணி

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்

பிற்பகல் 4.30 மணி

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம்.

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4 மணி

நெடியகாடு விளையாட்டுக் கழகம் எதிர் கருணாகரன் விளையாட்டுக் கழகம்.

* * *

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்றுவியாழக்கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறுகின்ற ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு

பி.ப. 3.30 மணி

மூளாய் வளர்மதி விளையாட்டுக்ழக அணி எதிர்இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழகம்

பி.ப 4.30 மணி

ஆனைக்கோட்டை சென். யூனியன் விளையாட்டுக்கழக அணி எதிர் நவாலி சென். பீற்றஸ் '' ஏ'' (ங-23)

## மின்னொளி வி.க. கரப்பந்து முடிவுகள்



யாழ்ப்பாணம் ,ஒக 9

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் கடந்தஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றியீட்டிய அணிகளின் விவரம் வருமாறு-


முதலாவது ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது.

3 செற்களை கொண்ட ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 25:16, 25:19 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்கும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெறவிருந்த ஆட்ட நேரத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மைதானத்துக்கு சமுகம் தரவில்லை. இதனால் ஆவரங்கால் இந்து இளைஞர் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ங-23)



அகில இலங்கைப் பல்கலைக்கழக அணிகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.அணியில் இடம் பெற்ற வீரர்கள் தமது பயிற்றுவிப்பாளர்கள், பணிப்பாளருடன். (ங-86)




# இரு கால்களையும் இழந்தவர் இறுதிப்போட்டியைத் தவறவிட்டார்

லண்டன் ஒலிம்பிக் தடகளப் போட்டியில் இரு கால்களையும் இழந்து பங்கேற்று சாதனை படைத்த ஒஸ்கர் பிஸ்டோரியஸ் இறுதிச் சுற்று வாய்ப்பை தவற விட்டார்.


லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் இந்த முறை ஆண்கள் 400 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் இரு கால்களையும் இழந்த தென்னாபிரிக்க வீரர் ஒஸ்கர் பிஸ்டோரியஸ் (வயது - 25)கலந்து கொண்டுள்ளார்.

இவர், இதுவரை ஊனமுற்றோருக்காக நடத்தப்படும் பார ஒலிம்பிக்ஸ் போட்டியில் 4 தங்கப் பதக்கங்களும், ஒரு வெண்கலப்பதக்கமும் வென்றுள்ளார்.

இரண்டு கால்களும் இல்லாத நிலையில் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற முதல் வீரர் என்ற பெருமைக்குரிய பிஸ்டோரியஸ், தகுதிச் சுற்றில் 2 ஆவது இடம் பிடித்து அரையிறுதிக்கு முன்னேறி அனைவரையும் வியக்க வைத்தார்.

ஆனால் அரையிறுதியில் 46.53 விநாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து கடைசி இடத்தை பிடித்து தோல்வியடைந்து வெளியேறினார்.

எனினும், தன்னம்பிக்கை மற்றும் விடா முயற்சிக்கு முன்னுதாரணமாக விளங்கிய அவருக்கு மைதானத்திலிருந்த 80 ஆயிரம் ரசிகர்களும் இருக்கையில் இருந்து எழுந்து நின்று கைதட்டி பாராட்டுத் தெரிவித்தனர். இவர் அடுத்து 4 ×400-மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் தென்னாபிரிக்க அணி சார்பில் களமிறங்க உள்ளார். (5



## ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

08.08.2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 35 | 21 | 19 | 75 |
| அமெரிக்கா | 30 | 19 | 23 | 72 |
| பிரிட்டன் | 22 | 13 | 13 | 48 |
| தென்.கொரியா | 12 | 6 | 6 | 24 |
| ரஷ்யா | 10 | 18 | 20 | 48 |
| பிரான்ஸ் | 8 | 9 | 11 | 28 |
| ஜேர்மனி | 7 | 15 | 10 | 32 |
| இத்தாலி | 7 | 6 | 4 | 17 |
| ஹங்கேரி | 6 | 2 | 3 | 11 |
| கஜகஸ்தான் | 6 | 0 | 2 | 8 |

# தடை தாண்டி தங்கம் வென்றார்

லண்டன் ஒலிம்பிக் தடைதாண்டுதல் போட்டியில் டொமினிக்கன் வீரர் பெலிக் ஷன்செக் தங்கப் பதக்கம் வென்றார்.


லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் தடைதாண்டுதல் போட்டியில் ஆண்களுக்கான 400 மீற்றர் தடை தாண்டும் ஓட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட 8 வீரர்களில் 47.63 நிடத்தில் பந்தய தூரத்தைக் கடந்து டொமினிக்கன் வீரர் பெலிக் ஷன்செக் தங்கப் பதக்கம் வென்றார்.


47.91 நிமிடத்தில் வந்த அமெரிக்கா வீரர் மைக்கேல் டின்ஸ்லே வெள்ளிப்பதக்கத்தையும், 48.10 நிமிடத்தில் வந்த பியுர்டோ ரிக்கோ வீரர் சேவியர் வெண்கல பதக்கத்தையும் வென்றனர்.

(5)

# ஒலிம்பிக் கிளிக்ஸ்















# எஸ்.எல்.பி.எல். திருவிழா சனிக்கிழமை ஆரம்பம்

இலங்கையில் முதன் முறையாக நடத்தப்படும் எஸ்.எல்.பி.எல். 'ரி-20' போட்டி எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இலங்கையின் 7 மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய 7 கழகங்கள் இந்த ஆட்டத்தில் பங்கெடுக்கவுள்ளன.

எதிர்வரும் சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு கொழும்பு ஆர்.பிரேமதாஸா மைதானத்தில் முதலாவது ஆட்டம் அஞ்சலோ மத்தியூஸ் தலைமையிலான நஹநெஹிர நாஹாஸ் அணிக்கும், லசித் மலிங்க தலைமையிலான ருஹுணு ரோயல்ஸ்க்கும் இடையில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் இரவு 8 மணிக்கு டில்ஷான் தலைமையிலான பஸ்நஹிர அணிக்கும் சங்கா தலைமையிலான கந்துரட்ட வொரியர்ஸ் அணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை அணி வீரர்களும், உள்நாட்டு - வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்களும் பங்கெடுக்கவுள்ளனர். (5)

# எஸ்.எல்.பி.எல்லை எதிர்பார்க்கும் சனத்

எஸ்.எல்.பி.எல். போட்டிகள் ஆரம்பிப்பதற்குக் காத்திருப்பதாக இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், முன்னாள் சகலதுறை நட்சத்திரமுமான சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார். எஸ்.எல்.பி.எல். போட்டிகள் ஆரம்பிக்கும் வரை காத்திருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தொடர் முதலாவது தடவையாக இடம்பெறவுள்ள நிலையில் தனது ஆர்வம் அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவித்த சனத் ஜெயசூரிய, எஸ்.எல்.பி.எல். போட்டிகள் உள்ளூர் வீரர்களுக்கு அதிக வாய்ப்புக்களை வழங்குவதாக அமையும் எனத் தெரிவித்தார். உள்ளூர் வீரர்கள் - வெளிநாட்டு வீரர்களுடன் இணைந்து விளையாடுவதன் மூலம் உள்ளூர் வீரர்களுக்கு சிறப்பான அனுபவம் கிடைக்கப் பெறும் என்று அவர் தெரிவித்தார்.

இலங்கையில் அதிகளவிலான திறமைகள் காணப்படுவதன் காரணமாக எஸ்.எல்.பி.எல். போட்டிகள் வெற்றியடையும் எனத் தெரிவித்த அவர், இலங்கை சிறிய நாடான போதிலும், இலங்கையின் சிறந்த விளையாட்டுக் கட்டமைப்புக் காரணமாக சிறந்த வீரர்கள் பலரை இலங்கை உருவாக்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

தற்போது எஸ்.எல்.பி.எல். போட்டிகளும் ஆரம்பிக்கவுள்ளதன் காரணமாக மேலும் வீரர்கள் உருவாக்கப்படுவார்கள் என்று சனத் ஜெயசூரிய தெரிவித்தார்.

இலங்கையில் கிரிக்கெட் வீரர்களின் அடிப்படை இயல்பை மாற்றுவதற்கு பயிற்றுவிப்பாளர்கள் முயற்சிப்பதில்லை எனத் தெரிவித்த சனத் ஜெயசூரிய, வீரர்களின் இயல்பான முறையில் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிப்பதாகத் தெரிவித்தார். அதன் காரணமாகவே இலங்கையால் மிகச்சிறந்த வீரர்களைத் தோற்றுவிக்க முடிந்ததாக சனத் ஜெயசூரிய தெரிவித்தார். (5)



# விடைபெறப்போகும் பீற்றர்சன்

இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் இடம்பெறவுள்ள 3 ஆவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இங்கிலாந்து சார்பாக தான் பங்குபற்றும் இறுதிப் போட்டியாக அமையாது என்பதற்கான உறுதியைத் தன்னால் வழங்க முடியாது என்று இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இங்கிலாந்து அணியின் ஒரு நாள் சர்வதேசப் போட்டி, 'ரி-20' அணியிலிருந்து ஓய்வுபெற்ற கெவின் பீற்றர்சன் இலங்கையில் செப்ரெம்பரில் இடம் பெறவுள்ள உலக 'ரி-20' தொடருக்கான இங்கிலாந்து அணியில் இடம்பெற விருப்பம் தெரிவித்திருந்தார்.

அவர் ஆரம்பத்தில் 'ரி-20' சர்வதேசப் போட்டியிலிருந்து ஓய்வுபெற விரும்பியிருக்காத போதிலும், இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையின் விதிப்படி அவரால் ஒரு நாள் சர்வதேசப் போட்டியிலிருந்து மாத்திரம் ஓய்வினை அறிவிக்க முடிந்திருக்கவில்லை.

உலக 'ரி-20' அணியில் இடம்பெறவிரும்பும் கெவின் பீற்றர்சனின் விருப்பமும், ஐ.பி.எல். போட்டியில் முழுமையாகப் பங்குபற்றும் அவரது விருப்பமும், குடும்பத்தினரோடு அதிக நேரத்தைச் செலவிட விரும்பும் விருப்பமும் இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையால் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையிலேயே கெவின் பீற்றர்சன் அடுத்த போட்டி தனது இறுதிப் போட்டியாக அமையாது என்று உறுதி மொழி வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

இங்கிலாந்து சார்பாக டெஸ்ட் போட்டியில் விளையாடத் தான் விரும்புவதாகவும், எனவே அடுத்த போட்டி தனது இறுதிப் போட்டியாக அமைந்தால் அது மிகப்பெரிய ஏமாற்றமாக அமையும் எனவும் கெவின் பீற்றர்சன் தெரிவித்தார்.

மேலே குறிப்பிட்ட காரணங்கள் தவிர, இன்னும் பல காரணங்கள் காணப்படுவதாகத் தெரிவித்த கெவின் பீற்றர்சன், காணப்படும் தடங்கல்கள் நீக்கப்பட வேண்டும் என்று விரும்புவதாகத் தெரிவித்தார். (5)


**SLAS நேர்முகதேர்வுக்குரிய விசேட கருத்தரங்கு**

துறைசார் நிபுணர்களினால் நான்கு-விடயப் பரப்பிலும் கலந்துரையாடப்படும்.
சனி (11/08), ஞாயிறு (12/08)
காலை 9.00 மணி தொடக்கம் 4.00 மணி வரை

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு**
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

விளைத்திறன் காண் பரீட்சைக்கான வகுப்பு ஒவ்வொரு சனியும் 9.00தொடக்கம் 12.00 மணிவரை நடைபெறுகின்றது. (சி/2169(5-6)

**CARவிற்பனைக்கு**

Toyota Yaris Japan made, doctor owned vehicle, Brand new 2008 model, KJ number, Excellent condition, Low milage, Double carpet, seat-cover, steel mate security system, full option, Reverse sensors, Rs.34.5 Lacks.

(விலை பேசி தீர்க்கப்படும்)
தொடர்பு - 0772366357


**BECON** வெலிங்டன் சந்தி, யாழ்நகர்.
வர்த்தகப்பிரிவு

A/L 2013, 2014 இற்கான புதிய தேர்ச்சிகள் ஆரம்பம்.
11.08.2012 சனி மு.ப. 10 மணி.

கணக்கீடு R.சுகிர்தன் (B.Com)
பொருளியல் K. பிரதீபன் (B.B.A)
வணிகக்கல்வி S.பிரதீபன் (M.Com)

நேர அட்டவணை அலுவலகத்தில்

நீங்களும்
**அறிவிப்பாளராகுங்கள்!**
அனைவருக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்..........
உதயன் இணைய வானொலியின் நல்லூர் உற்சவகால சிறப்புக் கலையகத்திற்கு வந்து உங்கள் திறமைகளை உலகறியச் செய்யுங்கள்.
021 567 2247
உதயன் இணைய வானொலி
www.Uthayan Radio.com


**SPOKEN ENGLISH**

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர், A/L எடுத்த மாணவர், இளைஞர், யுவதிகளுக்கு

**புதிய பிரிவு ஆரம்பம்**

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 09.08.2012
பிரிவு 1 : காலை 9 – 10   பிரிவு 2 : காலை 10 – 11
பிரிவு 3 : மாலை 3 – 4   பிரிவு 4 : மாலை 5 – 6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
கட்டணம் : ரூபா 3000   காலம் : 1 – 3 மாதம்
பயிற்சி முடிவில் ஆங்கிலம் கதைக்க முடியாதோருக்கு பயிற்சிக்கட்டணம் முழுமையாக திருப்பித்தரப்படும்
முதல் நாள் வகுப்புக்கு அனுமதி, பயிற்சி புத்தகம், DVD மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்

MyWay 182, Stanley Rd, Jaffna 077 520 2747

**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கிளைகளுக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வரவேற்பாளர் –02 (Female)
2. முழுநேர கணனி வரைவாளர்கள் –10 (Male & Female)
3. சந்தைப்படுத்தல் பிரதிநிதி –10 (Male & Female)

உங்கள் விண்ணப்பங்களினை அண்மையில் எடுத்த ஓர் புகைப்படத்துடன் இணைத்து கீழ்க்காணும் எமது முகவரிக்கு 14.08.2012க்கு முதல் அனுப்பிவைக்கவும். தபால் மூலமான விண்ணப்பங்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

உங்களுடைய விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி
E-TRANSITION Software Development Company
166/3, Navalar road, Jaffna.
TP:021-2219230

**Offer** கணினி மையம் கல்வியங்காட்டில்
9 Diploma Course fee Free
Duration 1-2 Month only
Ms office, Multimedia, Hardware, Networking
Web Design, DTP, English, Singalam, Accounting
ஆரம்பத்தில் இருந்து கற்கலாம் பூரண அறிவிற்கான உத்தரவாதம்.
மேலதிக விபரங்களுக்கு நேரில்,
243, Adiyapatham Road, Kalviyankadu MCAI

**விஷேட ஆங்கில வகுப்புக்கள்**

மாணவர்களே!!
உங்கள் விடுமுறைக் காலத்தை எம்முடன் இணைத்து பயனுள்ளதாக்கி கொள்ளுங்கள்
20 மணித்தியாலங்கள் மட்டுமே
நடைமுறை வாழ்விற்கு அவசியமான ஆங்கில பேச்சுப் பயிற்சிகள் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்
மாணவர்களின் ஆங்கில அறிவிற்கு ஏற்ப குழுக்களாக பிரித்து கற்பிக்கப்படும்.
புதிய பிரிவு ஆரம்பம்
10.08.2012
காலை 10.00 மணி
கட்டணம் ரூபா 1200.00 மட்டுமே





குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்துடன் உங்கள் ஆங்கில பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

**சம்பத் வங்கி ஆள்சேர்ப்பு போட்டிப்பரீட்சை விசேட கருத்தரங்கு**

சனி (11/8) நடைபெறவுள்ள பரீட்சைக்கான கருத்தரங்கு வெள்ளி (10/8) காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.30 வரை நடைபெறும். யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு, யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்.

**தேவை**

Receptionist (பெண் வரவேற்பாளர்) யாழ்நகரில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தேவை. ஆங்கிலத்தில் சரளமாக உரையாடக்கூடியவர்கள் யாழ் நகரிற்கு அண்மையில் வசிப்பவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும்.
விளம்பர இலக்கம் - 4387
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (21444)(3.8)

**நியூசிலாந்து குடும்பவிசா**

ஆலோசனை - ஆசிரியர்களும் போகலாம்
ஆஸ்திரேலியா - அரைவாசி ஆலோசனைக் கட்டணம்
மலேசியா - படிக்கப்போவது இலகு
சட்டரீதியான ஆலோசனை பெற விரைந்து வாருங்கள்.
காலை 7.00 - இரவு 7.00 மணிவரை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)
முன் மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை. பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016
(21445/) (2-6)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.